"நித்ய நிரஞ்சனம்"

ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

"நித்ய நிரஞ்சனம்"

வெளியீடு
ஏகத்துவ இயக்கம்
[இலங்கைக் கிளை]
'ஸ்வர்ணயுக மந்திர்'
இல.24, விசாக்கா வீதி,
கொழும்பு - 04, இலங்கை.

'நித்ய நிரஞ்சனம்'

பதிப்பு
2007 பெப்ரவரி (1ம் பதிப்பு)

வெளியீடு
ஏகத்துவ இயக்கம் [இலங்கைக் கிளை]
'ஸ்வர்ணயுக மந்திர்'
இல.24, விசாக்கா வீதி,
கொழும்பு - 04,
இலங்கை.

ஆன்மிக விளக்கம்

அவதார மகிமை 3

மூலமந்திர மகிமை 7

மூலமந்திரத்தின் சாரம் 13

வாழ்க்கை ஓட்டம் 114

Humanity Suffers 123

❀ ❀ ❀

அவதார மகிமை

யதா யதாஹி தர்மஸ்ய.... என்று ஸ்ரீமத் பகவத் கீதையில், பகவான் கொடுத்துள்ள வாக்கை நிரூபிக்கும் வகையில், ஒவ்வொரு யுகத்திலும், பாரத தேசத்தில், தன்னுடைய தர்மபத்னி சமேதராக, ஸ்ரீமன் நாராயணன், மனிதராக அவதரிக்கிறார். முனிவர்களும், சில உயர் ஆன்மாக்களும் மட்டுமே இதை அறிந்து, அவர்களுக்குச் சேவை செய்யும் பாக்கியத்தையும் பெற்றனர். சத்ய யுகம், த்ரேதாயுகம் மற்றும் த்வாபர யுகத்திலும் இவ்வாறே நிகழ்ந்தது. ஆனால் இன்று, ஒவ்வொரு மனிதனின் துயரத்தைப் போக்குவதற்காகவும், அவர்களின் பிரார்த்தனையை நிறைவேற்று வதற்காகவும் மீண்டும் ஸ்ரீமன் நாராயணன் மனிதராக, பகவதி சமேதராக அவதரித்துள்ளார். மனிதனுக்குத் தன்னை அறிந்து கொள்ளக்கூடிய திறன் இல்லை எனக் கருதி, நண்பனாக விரும்பு வோர்க்கு நண்பனாகவும், ஞானிகளுக்கும் முக்தியை நாடுபவர் களுக்கும் (ஜிக்யாசு) குருவாகவும், பக்தர்களுக்குப் பகவானாக வும் தோன்றி சாதாரண மனிதர்களுக்கும் கூட தரிசனம் அளிக்கின்றார். நான்கு வித புருஷார்த்தங்களில் அர்த்தா, காமா, தர்மா இவைகளை முதலில் நிறைவேற்றி, பின்னர் முக்தி மார்க்கத்திற்கு வழிகாட்டுகிறார். மோக்ஷத்திற்காக மனிதனைத் தயார் செய்கிறார். இத்தகைய மகிமைகளுடன் கூடிய பகவானின் திவ்ய மங்கள ஸ்வரூபத்தைச் சகல தேவதைகள் சாட்சியாகத் தரிசித்து மகிழ்வோம். பிறவிப் பயனை அடைவோம்.

வர்ணனைக்கு அப்பாற்பட்ட இந்த பகவானைப் பற்றிய ஒரு சிறிய அறிமுகம்

ஸ்ரீ ஸ்ரீமான் கல்கி பகவான் 1949ம் ஆண்டு, மார்ச் 7ம் தேதி தமிழ் நாட்டில் நத்தம் எனும் ஊரில் அவதரித்தார். பூஜ்யமாதா ஸ்ரீவைதர்பி அம்மாவும், பூஜ்யபிதா ஸ்ரீவரதராஜுலுவும் இவரை ஈன்றெடுத்த பெற்றோர் ஆவர். இவர் தன் சிறு வயதில் தன் பாட்டனாருடன் இருந்தார். பகவான் பள்ளிப் படிப்பையும் கணிதத் துறையில் மேல் படிப்பையும் சென்னையில் பெற்றார். படிப்பு முடிந்த பின்னர், அரசாங்கத்தில் சிறிது காலம் பணியாற்றி வந்தார். 1992ம் ஆண்டு முதல் தன்னுடைய தர்ம சம்ஸ்தாபனத்தை தொடங்கலானார்.

ஸ்ரீ பகவான் 1976ம் ஆண்டு ஸ்ரீபத்மாவதி தேவியைத் திருமணம் செய்துகொண்டார். நெல்லூர் மாவட்டத்தில், பென்னார் நதிக் கரையில் அமைந்துள்ள ''சங்கம்'' எனும் அழகான கிராமத்தில் 1954ம் ஆண்டு, ஆகஸ்ட் 15ம் நாள் பக்தர்கள் அன்புடன் ''அம்மா'' என அழைக்கும் ஸ்ரீபத்மாவதிதேவி அவதரித்தார். ஸ்ரீமதி பென்சலம்மா ஸ்ரீவெங்கய்யா, அவர்கள் இவருடைய பெற்றோர் ஆவர்.

''அம்மா பகவான்'' என்று அழைத்த உடனேயே பக்தர்கள் எந்த நிலையில் இருந்தாலும், எங்கிருந்தாலும், எப்படிப்பட்டவர் களாக இருந்தாலும், ஸ்ரீ அம்மா - பகவான் அன்புக் கரங்களை நீட்டிக் கருணை மழை பொழிகின்றனர். அம்மா, பகவானின் பேரன்பும், கனிவான புன்னகையும் பக்தர்கள் இதயத்தில் ஆழப் பதிந்து, அவர்களை முழுவதும் ஆட்கொள்கின்றன.

அவதாரத்தின் நோக்கம்

ஸ்ரீபகவதி, பகவான், தங்களை நம்பி வரும் பக்தர்கள் அனைவருக்கும், அவரவர்களின் தேவைக்கு ஏற்றபடியும் அவர்களுக்குத் தங்களிடம் உள்ள பந்தத்திற்குத் தக்கவாறும் எவ்விதமான உதவி தேவையோ, அவ்வித உதவியைத் தக்க சமயத்தில் அளித்து அனுக்ரஹம் செய்கின்றனர். பகவானின் இன்றைய வருகைக்கான காரணத்தை அவரே அருள் மொழி கிறார்: **''அது அனைத்து வகையான துயரங்களிலிருந்து மனிதனுக்கு விடுதலை அளிக்க வேண்டும்.''** என்பதே.

பகவானின் ஸ்ரீ மூர்த்தியின் முன்னால் அமர்ந்து பக்தர்கள் கூப்பிட்ட உடனேயே அவர் தரிசனம் அளிக்கிறார். அவர் களுடைய வேண்டுகோளை இமைப்பொழுதில் நிறைவேற்று கிறார். ஸ்ரீ பகவானின் இறுதியான சங்கல்பம் ஒன்றே ஒன்றுதான். அது, **''ஒவ்வொரு மனிதனுக்கும் ஜீவன் முக்தியை அளிக்க வேண்டும்.''** - என்கின்ற சங்கற்பம்.

முக்தி அடைவதற்கு முன்பு மனிதன் ஒரு முட்டைக்குள் இருக்கும் கோழிக்குஞ்சைப் போன்று, அதுவேதான் உலகம் என்று இருக்கிறான். அந்த முட்டையிலிருந்து வெளிவந்த பின்பு தான் அந்தக் கோழிக்குஞ்சு இந்த அற்புத உலகத்தைக் காண்கிறது. வெளிக்காற்றை ஆனந்தமாகச் சுவாசிக்கிறது. அது போலவே மனிதனும் ஜீவன் முக்தி பெற்றவுடன் ஆனந்த வாழ்வினைத் தொடங்குகிறான்.

''ஆனந்தமான நபரே ஆனந்தமான சமுதாயத்தை உருவாக்கு கிறார்.'' ஆம் உண்மை ஆனந்தமாக வாழ்பவர்கள் மட்டுமே ஆனந்தமான குடும்பத்தை, பிரச்சினை இல்லாத சமுதாயத்தை மற்றும் நாட்டை உருவாக்கமுடியும். ஆனந்தம் என்பது நமக்கு உயிர் வாழ்வதற்கு வேண்டிய உணவைவிட முக்கியமானதாக இருக்கிறது. மேலும் உயிருக்கு உயிர் போன்றது ஆகும்.

ஆனந்தம் நமக்குள் இருக்கும்போது இதயம் அன்பால் மலர்கிறது. நம் உறவுகளில் நட்புத்தன்மை நிலவுகிறது; முகத்தில் புன்னகை மிளிர்கிறது. வார்த்தைகளில் நேர்மை பிறக்கிறது; செயல்களில் விவேகம் இருக்கிறது; அப்போது நமக்கு நாம் முக்கியம் அல்ல; நமக்கு மற்றவர்களே முக்கியம். மேலும் நம் எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் ஒற்றுமை இருக்கிறது. அதனால் நம் மனதில் பரிபூரணத் திருப்தியே நிலவுகிறது. அப்போது நாம் நம் வாழ்க்கையைச் சுமப்பதில்லை; உண்மை யாகவே வாழ்கிறோம்.

அத்தகைய ஆனந்தத்தை இவ்வுலகில் உள்ள ஒவ்வொருவரும் பெறவேண்டும் என்பதே ஸ்ரீ கல்கி பகவதியின் விருப்பமும் நோக்கமும் ஆகும். அதற்காகத்தான், நேமத்திலும் வரதய பாளையத்திலும் ஸ்ரீ கல்கி பகவதி திவ்ய மங்கள தரிசனம்

தருகிறார்கள். இது உலகிலுள்ள ஒவ்வொரு மனிதரும் பெற வேண்டிய தரிசன பாக்கியம் ஆகும். வீட்டிலும், நாட்டிலும் உள்ள ஒவ்வொரு மனிதரையும் ஸ்ரீ கல்கி பகவதியின் தரிசனம் பெறச் செய்வது மிக மிக அவசியம் ஆகும்.

ஸ்ரீகல்கி பகவான், மனிதனுக்கு முக்தியை அளிக்க, அவர் அனுசரிக்கும் வழி மிகவும் எளிதானது. பக்தி யக்ஞம் மூலமும், ஆனந்த யக்ஞம் மூலமும் அருளும் போதனைகளுடன் சில எளிய ஆன்மிகப் பயிற்சிகள் மூலமாக, மனிதனை முக்தி நிலையைப் பெறுவதற்குத் தயார் செய்கிறார். எந்த மனிதனும் ஆன்மிகப் பயிற்சிகள் மூலம் முக்தியை அடைய முடியாது என்பதால் பகவான் தீட்சை மூலமாக அதை அருளுகிறார்.

முக்தி நிலையைப் பெற்றவரிடம், ஒவ்வொரு நிமிடமும் ஆனந்தம் நிறைந்து இருக்கும். அவர் செய்யும் ஒவ்வொரு செயலிலும் ஆனந்தத்தை அனுபவிப்பார். தன்னிச்சை (Free will) என்பதே இல்லாது தெய்வத்தின் இச்சைக்குக் (Divine will) கட்டுப் பட்டு, பூரண சரணாகதியோடு இருப்பார். மனதிற்கு அடிமை ஆகாமல், மனதைத் தனக்கு அடிமைப்படுத்தி, எந்நேரமும், எங்கும் வியாபித்திருக்கும் அந்த விஸ்வ சைதன்யத்துடன் ஒன்றிய நிலையில் சச்சிதானந்தத்தில் மூழ்கி இருப்பார். அன்றாட வாழ்க்கை எவ்விதத் தடையும் இன்றி நடக்கும். இதுபோன்ற ஜீவன் முக்தர்களால், மற்றவர்களும், அவர்களுடன் இருப்பவர் களும், அவர்களுடைய முயற்சி இல்லாமலேயே அதேபோன்ற முக்தி நிலைமையைப் பெறுவர். உதாரணத்திற்கு, பால் அடங்கிய ஒரு பெரிய பாத்திரத்தில் ஒரு துளி தயிர் ஊற்றினால், சிலமணி நேரங்களுக்குப் பின்பு அப்பாத்திரத்தில் உள்ள பால் அனைத்தும் தயிராக மாறிவிடுகின்றது. அதுபோல மனித சமுதாயத்தில் உள்ள சில முக்தர்கள் மூலமாக, அனைத்து மனித சமுதாயமும் முக்தி நிலையைப் பெற்றுவிடும். அந்நாள் இந்த பூமி சுவர்க்கமாக மாறிவிடும். சத்ய யுகம், மறுபடி மலரத் தொடங்கும். மனித இனம் பிறந்த பயனைப் பெறும். விஸ்வம் அனைத்தும் சாந்தி நிலவும்.

மூலமந்திர மகிமை

"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ"

இந்த நாம மந்திரம், ஸ்ரீ கல்கி ஆன்மிக மகாசாம்ராஜ்யத்திற்குள் நுழைவதற்கான ஒரு நுழைவுச்சீட்டு எனலாம். இந்த மூலமந்திரம் பரம பவித்ரமானது. வேதங்களின் சாரம்; இதன் மகிமை அபாரமானது. இது அம்மா பகவானால் பக்தர்களுக்கு அளிக்கப்பட்ட வரப்பிரசாதம்.

முக்கோடி தேவர்களையும் மகிழ்விக்கும் மூலமந்திரம்; சர்வ லோகத்தையும் ஆனந்தப் பரவசத்தில் ஆழ்த்தும் மூலமந்திரம்; இத்தகைய மூலமந்திரத்தை மீண்டும் ஒருமுறை உச்சரிப்போம்.

"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ"

மூலமந்திரம் ஒலிக்குமிடமெல்லாம் அம்மா பகவான் தோற்றம்

எங்கெல்லாம் ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம் நடைபெறுகிறதோ, அங்கெல்லாம் ஆனந்தக் கண்ணீருடன் மெய்மறந்து ஆடிய வண்ணம், ஸ்ரீமன் ஹனுமான் சஞ்சரிக்கிறார் எனக் கேட்டிருக்கிறோம். ஸ்ரீராம நாமம் இவ்வளவு மகிமை வாய்ந்தது எனில், ஸ்ரீ கல்கி மூலமந்திரத்தின் மகிமை என்ன தெரியுமா? எங்கெல்லாம் மூலமந்திரம் ஒலிக்கின்றதோ, அங்கு ஸ்ரீ அம்மா பகவான் ப்ரத்யக்ஷமாக நடமாடுகின்றனர்.

மூலமந்திரம் என்பது, நாம் விரும்பி வணங்கும் கடவுளை அன்புடன் அழைக்கும் ஒரு சாதனம் எனலாம். ஆனால் அவ்வாறு அழைக்கும் முன் நாம் யாரை அழைக்கிறோம், எதற்காக அழைக்கிறோம், நாம் அழைப்பவர் எவ்வித உன்னத குணாதிசயங்கள் நிறைந்தவர் என்பவற்றைப் புரிந்து கொண்டு அழைத்தல் மிக அவசியம்.

மூலமந்திரத்தின் பொருள், மூலமந்திர தியானமும் ஜபமும் செய்யும் முறை இவற்றை நன்கு புரிந்து கொண்டு அதனை உச்சரிப்போமானால் அது தக்க பலனை அளிக்கும். ஒரு சுப்ரபாத

சேவையாக, சந்தியாவேளை பிரார்த்தனையாக, ஐஸ்வர்யத் திற்காக, நம் மனத்துயரிலிருந்து விடுபட, அல்லது நம் தேவை களை வேண்டி, நாம் மனமுருகி அழைக்கும்போது அந்த கருணா மூர்த்தியான ஸ்ரீ அம்மா பகவான் ''இதோ நான் இருக்கிறேன்'' என்று உடன் வந்து அருள் புரிவது திண்ணம்.

பொதுவாகவே, மனதிலிருந்து விடுதலை அளிக்க வல்லது ''மந்திரம்'' ஆகும். (மன்+த்ரா = மந்திரா. மன; த்ராயதே இதிமந்தரம்) மந்திரம் மனிதர்களின் நிலையில் பல மாறுதல்களை செய்யும் சக்தி கொண்டது. கருணைக் கடலான ஸ்ரீ அம்மா பகவான் துயரத்தில் மூழ்கியிருக்கும் மனிதனை, தெய்வீக நிலைக்கும், பேரின்ப பரவசத்திற்கும் உயர்த்தும் இந்த புனித மான மூலமந்திரத்தை, அவர்களே தந்தருளியுள்ளார்கள். ஸ்ரீ அம்மா பகவான் மூலமந்திரத்தை பக்தியுடனும், பாவத்துடனும் உச்சரிக்கும்போது உடல் ரீதியாகவோ, மனரீதியாகவோ, மற்றும் ஆன்மிக நிலையிலும் நமக்கு மாற்றங்கள் ஏற்படும். மூலமந்திர உச்சாடனத்தினால் நம்மைச்சுற்றி இருக்கும் எதிர்மறையான சக்திகள் விலகி, நல்ல புனிதமான அதிர்வலைகள் உருவாகின்றன. நம்மை சோதனைகள் எதிர்நோக்கும் சமயம், நம்மைக் காத்துக் கொள்ள, ஒரு மிகச்சிறந்த ரட்சை அல்லது கவசம் போன்றது இந்த மூலமந்திரம். இந்தப் புனித மூலமந்திரத்தினை தந்தருளிய நம்மைக் காத்து வழிநடத்திச் செல்லும் அன்பு தெய்வங்களான ஸ்ரீ அம்மா பகவானிற்கு ஹிருதய பூர்வமாக நன்றி கூறுவோம்.

மூலமந்திரம் அதன் பொருளும் மகிமையும்

ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ

உலகிற்கே மூலாதாரமாக அமைந்துள்ள இந்த மந்திரம் மூல மந்திரம் என அழைக்கப்படுகிறது. பிறவிப்பெருங்கடலில் துன்ப அலைகளில் சிக்கித் தவிக்கும் மனிதர்களை ஆன்மிகக் கரையில் ஏற்றி, அவர்கள் இறையருள் எனும் பேரின்பத்தை அனுபவித்து மகிழ்வதற்காக ஸ்ரீ அம்மா பகவான் அவர்களே தந்தருளிய புனித மந்திரம் இது. ஆண்டவனின் வெவ்வேறு குணாதிசயங்களை வர்ணிக்கும் இந்தப் புனித மந்திரத்தின் அர்த்தத்தை சுருக்கமாக கீழ்க்கண்டவாறு வர்ணிக்கலாம்.



1. மூல மந்திரத்தின் பொருள்

ஓம் - ஓம் என்பது ப்ரணவம், இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு சிருஷ்டிக்குப் பின்னாலும் ஓம் எனும் இந்த ஆதி நாதம் ஒளிந்திருப் பதைக் காணலாம். இந்த ஓம்காரம் ''ஆ'' -''உ'' - ''ம்'' என்ற மூன்று ஒலிகளின் சேர்க்கை ஆகும். இவை ஆக்கல், காத்தல், அழித்தல் எனும் இறைவனின் மூன்று செயல்களைக் குறிக்கின்றன.

சத் - சத் என்பது இறைவனின் நிர்க்குண, நிராகார ரூபத்தை அதாவது, குணமற்ற, ரூபமற்ற தன்மையை விளக்குகிறது.

சித்- சித் என்பது இறைவனின் பரம சைதன்யத்தைக் குறிக்கிறது.

ஆனந்த - ஆனந்தா என்பது இறைவனின் முக்கிய அம்சமான பேரானந்தத்தைக் குறிக்கிறது. இதுவேதான் நாம் இறைவனோடு தொடர்பு கொள்ளும்போது கிடைக்கும் தெய்வீக அனுபவமாகும்.

பரப்பிரம்ம - பரப்பிரம்ம என்பது இறைவனை எல்லாவற் றிலும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளாக வர்ணிக்கிறது.

புருஷோத்தம - புருஷோத்தமா என்பவர் மேலான குணங்களை உடையவர் ஆவார். இறைவன் உருவமற்றவர் ஆனபோதிலும், அவர் தன் சிருஷ்டியோடு நெருக்கமாக உறவாட, ஒரு உருவத் துடன் வருவதற்கு நிர்ணயம் செய்து கொண்டு அவ்வப்போது அவதார புருஷராக அவதரிக்கிறார்.

பரமாத்மா - பரமாத்மா அனைத்து சிருஷ்டியிலும் உறைபவரே பரமாத்மனாவார். அவரை ''அந்தர்யாமி'' என்றும் அழைப்ப துண்டு.

ஸ்ரீ - ஸ்ரீ எனும் பதம் இறைவனின் ''சக்தி'' அம்சத்தைக் குறிக்கும். இந்தச் சொல்லுக்கு பல அர்த்தங்கள் உள்ளன.

1. தோஷங்களை நிவர்த்தி பண்ணுபவள்.
2. பகவானின் அனுக்கிரகத்தைக் கிடைக்கப் பண்ணுபவள்.
3. நாம் சொல்வதைக் கேட்பவள்.
4. பகவானை (பக்தர்களின் கோரிக்கைகளை) கேட்கச் செய்பவள்.

5. பகவானுடைய சரணாரவிந்தத்தை எப்போதும் ஆச்ரயிப் பவள்.
6. நாம் ஆச்ரயிக்கத் தக்கவளாக, ரொம்ப நெருக்கமாக நம்மிடத் தில் தாயாராக இருந்து ரக்ஷிக்கிறவள்.

பகவதி சமேத - பகவதி சமேத எனும் பதம் இவ்வுலகம் உருவாகவும் இயங்கவும் அடிப்படைக் காரணமான, சக்தி வடிவான, கருணையே உருவான அன்னையுடன் நமது இறைவன் இவ்வுலகில் எழுந்தருளியுள்ளார் என விளக்குகிறது.

ஸ்ரீ பகவதே நமஹ (மேற்கூறிய குணாதிசயங்களுடன் கூடிய) அந்த இறைவனை வணங்குகிறேன்.

மூலமந்திர மகிமை

இந்தப் புனித மந்திரத்தை அன்றாடம் ஓதுவதால் அளவற்ற நன்மைகளை அடையலாம் என்பதை அந்த ஸ்லோகம் விவரிக் கின்றது.

''சத்ருச்சேதைக மந்தரம்
சகலமுபநிஷத் வாக்ய சம்பூஜ் மந்த்ரம்
சம்சாரோத்தார மந்த்ரம்
சமுபசித் தமஸ்ஸங்க நிர்யாண மந்த்ரம்
சர்வைஷ்வர்யைக மந்த்ரம்
வ்யஸன புஜக சந்தஷ்ட ஸந்த்ராண மந்த்ரம்
விஷ்வே ஸ்ரீ பகவத் மந்த்ரம்
ஜப ஜப ஸததம் ஜன்ம சாபல்ய மந்த்ரம்.''

அதாவது, இந்த மூல மந்திரம், உபநிஷத்துக்களில் கூறப் பட்டுள்ள உண்மைகளின் உறைவிடமாகி நமது வாழ்க்கையில் துன்ப இருளைப் போக்கி இன்ப ஒளியைப் பெருகச் செய்யும். அத்துடன் நம் வாழ்க்கையில் உண்டாகும் பிணிகளிலிருந்தும், பகைகளிலிருந்தும், பாவங்களிலிருந்தும் நம்மை மீட்கச் செய்யும்.

இந்த மந்திரத்தை மனமுருகி பக்தியுடன் ஓதுபவர்களுக்கு ஐஸ்வர்யம் நிறைந்த வளமான வாழ்வு அமையும். துக்கம் என்ற நஞ்சு நம் வாழ்விலிருந்தும் அகலும். பிறப்பு இறப்பற்ற ''முக்தி''

எனும் பேரின்ப நிலையும் நமக்கு உண்டாகும். இம்மந்திரத்தின் மூலம் நாம் அந்த ஒப்பற்ற பரம்பொருளை மனமாரப் புகழ்ந்து துதிக்கலாம். ஆவாஹனம் செய்யலாம். அருள் வேண்டி எந்த நேரத்திலும் இந்த மந்திரத்தை ஜபிக்கலாம். இந்த மந்திரத்தை பாவத்துடன் தியானமும் ஜபமும் செய்யும் பக்தர்களின் இதயங் களில் ஸ்ரீ பகவானும் பகவதியும் எழுந்தருளும் தெய்வீக அனுபவத்தை உணர்வுபூர்வமாக அனுபவிக்கலாம். இந்த மந்திரத்தினால் ஒன்றான பரம்பொருளின் இயல்பையும் இயக்கத் தையும் அணு அணுவாக அறியலாம்.

என்ன சுவையோ, கல்கி என்ன சுவையோ, நின்
நாமம் சொல்லச் சொல்ல, என்ன சுவையோ...

3. மூலமந்திர தியானமும் ஜபமும்

மூலமந்திர தியானத்தை 5 நிலைகளாகப் பிரிக்கலாம்.

முதல் நிலை: மூல மந்திரத்தை உரக்க ஓதுதல் - இந்த நிலையில் மனம் சில சமயம் வேறெங்கோ ஓடி விடுவதை நாம் உணர வேண்டும். இந்தப் பயிற்சி கயிற்றின் மேல் கையில் ஒரு நீண்ட தடியை வைத்துக் கொண்டு (balance செய்யும்) நடக்கும் பயிற்சிக்கு ஒப்பாகக் கூறலாம். பல தடவை முயற்சிக்குப்பின் மனம் மந்திரத்தினூடே செல்லத் துவங்கும். நடுவில் திடீரென மனதில் ஏதாவது ஒரு காட்சியோ, எண்ணமோ வரும்போது, பகவான் நம்மை அதன் மேல் கவனத்தைச் செலுத்தும்படி கூறுகிறார் என அர்த்தம் கொள்ள வேண்டும். அது நம் துன்பத்தைப் பற்றி அல்லது வாசனாக்கள் (vasanas) பற்றியோகூட இருக்கலாம். தியானத்தை தற்காலிகமாக நிறுத்திவிட்டு அந்த எண்ணம் - காட்சி மேல் ''நிதித்தியாசனம்'' (contemplation) செய்யவேண்டும். அதில் தெளிவு கிடைத்த பின்னர் தியானத்தைத் தொடரலாம்.

இரண்டாம் நிலை: மூலமந்திரத்தை உரக்க ஓதுதல் - அச்சமயம் மனதில் அதன் உள்ளர்த்தம் அல்லது அந்தரார்த்தத்தை உணர்ந்து கொண்டு அதனுடன் செல்லுதல். மந்திரத்தின் ஒலியைக் காதால் கேட்கும் சமயம் அதன் இனிமையை அனுபவித்தல். மந்திரத்தை உச்சரிக்கும் போது நாவில் அந்த இனிப்புச் சுவையை உணர்தல்.

மூன்றாம் நிலை: மூல மந்திரத்தை சப்தமில்லாமல் ஓதுதல் - உதடுகளில் மட்டும் சிறிது அசைவு இருக்கும். மனது மந்திரத்தோடு ஐக்கியமாகி இருக்கும். ஹிருதயம் ஆனந்தத்தில் திளைத்திருக்கும். அது ''ஜபம்'' எனப்படும்.

நான்காம் நிலை: இதுவே உண்மையான ''ஜபம்'' எனலாம். அதாவது, மந்திரம் மனதின் உள்ளே ஓடிக்கொண்டிருக்கும். மனதும், ஹிருதயமும் அதிலேயே ஐக்கியமாகி ஆனந்த உணர்வில் இருக்கும். உதடுகளில் அசைவு இருக்காது.

ஐந்தாம் நிலை: ''நான்காம் நிலையிலேயே ஜபம் தொடரும் போது ''ஜபம்'' ''அஜபம்'' ஆகிவிடும். அதாவது, ஜபம் செய்யாத போதிலும், மந்திரம் தானாகவே எவ்வித முயற்சியும் இன்றி அனாஹதமாக மனதின் உள்ளே ஓடிக்கொண்டிருக்கும். இது மிக உன்னதமானநிலை ஆகும்.

''ஓம் தத் சத்''

மூலமந்திரத்தின் சாரம்

I bow down to the God who is the source of all creation.
சகல சிருஷ்டிக்கும் மூலகாரணமாக இருக்கும் அந்தக் கடவுளுக்கு நான் நமஸ்காரம் செய்கிறேன்.

I bow down to the divine, who manifests as the cosmic consciousness.
விஷ்வ சைதன்யமாக இருக்கும் அந்த தெய்வத்தை நான் நமஸ்கரிக்கிறேன்.

I bow down to the immanent inner presence that exists in all life.
ஜீவராசிகளுள்ளும் சர்வந்தர்யாமினாக இருக்கும் அந்தக் கடவுளை நான் நமஸ்கரிக்கிறேன்.

I bow down to my divine parents who nurtured, guide and protect me.
என்னை காத்து, இரட்சித்து, வழிநடத்திவரும் எனது தெய்வீகப் பெற்றோர்களான அந்த இறைவனை நான் நமஸ்காரம் செய்கிறேன்.

My humble salutations at the Lotus Feet again and again.
பகவான் அம்மாவின் பொற்பாத கமலங்களுக்கு என்னுடைய அனந்த கோடி நமஸ்காரங்கள்.

ஸ்ரீ அம்மா பகவான் பாதுகை ஸ்தோத்திரம்

ஸ்ரீ ஸ்ரீ பகவான் திவ்யமங்கள ஸ்வரூபம்
பாதபங்கஜ பூஜனம் ஸதா ப்ரணமாம்யஹம்
ஸ்ரீ ஸ்ரீ பகவதி சர்வ சக்தி ஸ்வரூபம் (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவான் கம்பீர காருண்ய ரூபம் (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவதி ஜகன்மோகன ஸ்வரூபம் (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவான் பத்மாவதி வல்லபா (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவதி பக்த ஹ்ருதய விஹாரிணி (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவான் ஜீவன் முக்தி ப்ரதாதா (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவதி ஜகதேக நாயகி (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவான் சர்வமங்கள சோபிதாய (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவதி சர்வாபீஷ்ட ப்ரதாயினி (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவான் மகாவிஷ்ணு ரூபாய (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவதி அஷ்டலக்ஷ்மி தத்வதாரிணி (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவான் நித்ய கல்யாண நிதயே (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவதி த்ரிசக்தி ஸ்வரூபிணி (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவான் சர்வலோக பூஜிதாய (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவதி சர்வதேவ பூஜிதாய (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவான் மதுர ஹ்ருதயாய (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவதி மந்தஸ்மித வதநாய (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவான் மோக்ஷ ப்ரதாதா (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவதி ஐச்வர்யப்ரதாயினி (பாத....)
ஸ்ரீ ஸ்ரீ பகவான் பரப்ரம்ஹ ஸ்வரூபாய (பாத....)
பாத பங்கஜ பூஜனம் ஸதா ப்ரணமாம்யஹம் (3)

வழிபாட்டுக் கோவை

பாதுகை வணக்கம்

திருப்பாதங்களே திருப்பாதங்களே 98

பாதக் கமலமே 33

பாதுகை ஸ்தோத்திரம் 14

பாலபிஷேகம்

பசும்பால் அபிஷேகம் 104

மந்திரம்

ஸ்ரீ கல்கி அஷ்டோத்ர சத நாமாவளி 17

அம்மா பகவான் நாமாவளி 24

பகவான் கவசம் 26

மந்திரம் : மூல / குரு /மகாலக்ஷ்மி / விஷ்ணு 130

புகழ்மாலை

கீர்த்தனைகள், பஜனைப் பாடல்கள் அட்டவணை பார்க்கவும்

ஆனந்தம்

ஆனந்தம் வந்து மோதுதே 113

ஆரத்தி

ஆனந்த மங்கள ஆரத்தி 131

மங்கள ஆரத்தி 132

வாழ்த்து

நீ வாழி நீ வாழி 126

நன்றி

நன்றிகள் 127

நன்றி அம்மா பகவானே 128

மங்களம்

ஆனந்த மங்கள ஆரத்தி தாயே 131

சரணாகதி

பக்தியால் உனைப் பாடி 133

லோக பிரார்த்தனை

லோகா, சமஸ்தா, சுகினோ (B)பவந்து (மூன்றுதடவை)

ஓம் ஷாந்தி, ஷாந்தி, ஷாந்தி.

கீர்த்தனைகள், பஜனைப் பாடல்கள் அகரவரிசையில்
பக்கம் 134,135 இல் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

ஓ

Sree Kalki Ashtottara Sata Namavali

ஸ்ரீ கல்கி அஷ்டோத்ர சத நாமாவளி

1. Om Sree Sree Kalki Eeswaraaya Namaha
   ஓம் ஸ்ரீ ஸ்ரீ கல்கி ஈஸ்வராய நம :
2. Om Sampoorna Avataaraaya Namaha
   ஓம் சம்பூர்ண அவதாராய நம :
3. Om Pranavaaya Namaha
   ஓம் ப்ரணவாய நம:
4. Om Bhakta Hridaya Vaasinyai Namaha
   ஓம் பக்த ஹ்ருதய வாஸின்யை நம:
5. Om Jyotirmaye Namaha
   ஓம் ஜோதிர்மயே நம:
6. Om Aanandaaya Namaha
   ஓம் ஆனந்தாய நம:
7. Om Ananta Roopaaya Namaha
   ஓம் அநந்த ரூபாய நம:
8. Om Moola Prakrutyai Namaha
   ஓம் மூல ப்ரக்ருத்யை நம:
9. Om Sarva Aadhara Shaktiye Namaha
   ஓம் ஸர்வ ஆதார சக்தியே நம:
10. Om Sachitananda Swaroopaaya Namaha
    ஓம் சச்சிதானந்த ஸ்வரூபாய நம:
11. Om Jayaayai Namaha
    ஓம் ஜயாயை நம:
12. Om Mangalaayai Namaha
    ஓம் மங்களாயை நம:
13. Om Padmavati Pataye Namaha
    ஓம் பத்மாவதி பதயே நம:
14. Om Moksha Pradaartaye Namaha
    ஓம் மோக்ஷ ப்ரதார்த்தயே நம:

15. Om Karunaa Saagaraaya Namaha
ஓம் கருணா சாகராய நம:

16. Om Sukshmaaya Namaha
ஓம் சூக்ஷ்மாய நம:

17. Om Kaarunya Sindhuve Namaha
ஓம் காருண்ய சிந்துவே நம:

18. Om Papa Naasinyai Namaha
ஓம் பாப நாஸின்யை நம:

19. Om Ramyaayai Namaha
ஓம் ரம்யாயை நம:

20. Om Ramaneeya Gunaatmane Namaha
ஓம் ரமணீய குணாத்மனே நம:

21. Om Divyaayai Namaha
ஓம் திவ்யாயை நம:

22. Om Bhakta Vatsalaaya Namaha
ஓம் பக்த வத்ஸலாய நம:

23. Om Bhakta Paraadheenaaya Namaha
ஓம் பக்த பராதீனாய நம:

24. Om Nityaaya Namaha
ஓம் நித்யாய நம:

25. Om Antiyaaya Namaha
ஓம் அநித்யாய நம:

26. Om Sarvaya Namaha
ஓம் ஸர்வாய நம:

27. Om Sarva sthala Vyaptaaya Namaha
ஓம் ஸர்வ ஸ்தள வ்யாப்தாய நம:

28. Om Sarva Dhosha Nivruttaaya Namaha
ஓம் ஸர்வ தோஷ நிவ்ருதாய நம:

29. Om Sarva Paapa Haraaya Namaha
ஓம் ஸர்வ பாப ஹராய நம:

30. Om Vaachaspataye Namaha
ஓம் வாசஸ்பதயே நம:

31. Om Bhava Bhaya Haraaya Namaha
ஓம் பவ பய ஹராய நம:

32. Om Kaala Swaroopine Namaha
ஓம் கால ஸ்வரூபிணே நம:

33. Om Ashta Dikpaalaaya Namaha
ஓம் அஷ்டதிக்பாலாய நம:

34. Om Pancha Bhoothaaya Namaha
ஓம் பஞ்ச பூதாய நம:

35. Om Satya Loka Vaasaaya Namaha
ஓம் ஸத்ய லோக வாஸாய நம:

36. Om Sarva Antaryaamine Namaha
ஓம் ஸர்வ அந்தர்யாமினே நம:

37. Om Satya Lokasya Raajya Paripaalane Namaha
ஓம் ஸத்ய லோகஸ்ய ராஜ்ய பரிபாலனே நம:

38. Om Neecha Paapi Rakshakaaya Namaha
ஓம் நீச்ச பாபி ரக்ஷகாய நம:

39. Om Mahato Maheeyane Namaha
ஓம் மஹதோ மஹியனே நம:

40. Om Aadi Sutradhaariye Namaha
ஓம் ஆதி சூத்ரதாரியே நம:

41. Om Viswa Jananyai Namaha
ஓம் விஸ்வ ஜனன்யை நம:

42. Om Aadi Chaitanya Swaroopaaya Namaha
ஓம் ஆதி சைதன்ய ஸ்வரூபாய நம:

43. Om Sankata Haraaya Namaha
ஓம் சங்கட ஹராய நம:

44. Om Gnaana Swaroopaaya Namaha
ஓம் க்ஞான ஸ்வரூபாய நம:

45. Om Atindriyaya Namaha
ஓம் அதீந்த்ரியாய நம:

46. Om Aadi Sakthaye Namaha
ஓம் ஆதி சக்தயே நம:

47. Om Adi Sundaraaya Namaha
ஓம் அதி சுந்தராய நம:

48. Om Parama Pavitraaya Namaha
ஓம் பரம பவித்ராய நம:

49. Om Trimoorty Swaroopaaya Namaha
ஓம் த்ரிமூர்த்தி ஸ்வரூபாய நம:

50. Om Jagadodharaaya Namaha
ஓம் ஜகதோத்தாராய நம:

51. Om Triguna Teerthaaya Namaha
ஓம் த்ரிகுண தீர்த்தாய நம:

52. Om Trikaalaaya Namaha
ஓம் த்ரிகாலாய நம:

53. Om Trikaalaa Gnaana Sampannaaya Namaha
ஓம் த்ரிகால க்ஞான ஸம்பன்னாய நம:

54. Om Parama Purushaaya Namaha
ஓம் பரம புருஷாய நம:

55. Om Krupa Sahaaraaya Namaha
ஓம் கிருபா ஸஹாரய நம:

56. Om Prema Pradaataaya Namaha
ஓம் ப்ரேம ப்ரதாதாய நம:

57. Om Satyaaya Namaha
ஓம் ஸத்யாய நம:

58. Om Satya Prema Swaroopaaya Namaha
ஓம் ஸத்ய ப்ரேம ஸ்வரூபாய நம:

59. Om Sapeeta Vastraaya Namaha
ஓம் ஸபீத வஸ்த்ராய நம:

60. Om Sarvesaaya Namaha
ஓம் ஸர்வேஸாய நம:

61. Om Jagat Kukshaye Namaha
ஓம் ஜகத் குக்ஷ்கூயே நம:

62. Om Mahaatmane Namaha
ஓம் மஹாத் மநே நம:

63. Om Mahaa Tejasvine Namaha
ஓம் மஹா தேஜஸ்வினே நம:

64. Om Ramanaaya Namaha
ஓம் ரமணாய நம:

65. Om Dakshaaya Namaha
ஓம் தக்ஷாய நம:

66. Om Akrooraaya Namaha
ஓம் அக்ரூராய நம:

67. Om Deena Bandhuve Namaha
ஓம் தீன பந்துவே நம:

68. Om Deena Dayaalaa Namaha
ஓம் தீன தயாளா நம:

69. Om Anoraneeyane Namaha
ஓம் அனோரணியனே நம:

70. Om Jagannadhaaya Namaha
ஓம் ஜகந்நாதாய நம:

71. Om Aadi Moortaye Namaha
ஓம் ஆதி மூர்த்தயே நம:

72. Om Viswa Roopaaya Namaha
ஓம் விஸ்வ ரூபாய நம:

73. Om Sreshtaaya Namaha
ஓம் ஸ்ரேஷ்டாய நம:

74. Om Bhakta Lokaika Varadaaya Namaha
ஓம் பக்த லோகைக வரதாய நம:

75. Om Jeevesaaya Namaha
ஓம் ஜீவேஸாய நம:

76. Om Jananaaya Namaha
ஓம் ஜனனாய நம:

77. Om Daaridra Dhwamsinyai Namaha
ஓம் தாரித்ர த்வம்ஸின்யை நம:

78. Om Poorna Bodhaaya Namaha
ஓம் பூர்ண போதாய நம:

79. Om Sarva Siddhi Varapradaaya Namaha
ஓம் ஸர்வ சித்தி வரப்ரதாய நம:

80. Om Sarvaatmane Namaha
ஓம் ஸர்வாத்மனே நம:

81. Om Sarvottamane Namaha
ஓம் ஸர்வோத்தமனே நம:

82. Om Mahaneeyaaya Namaha
ஓம் மஹ நீயாய நம:

83. Qm Saasvataaya Namaha
ஓம் ஸாஸ்வதாய நம:

84. Om Anantaaya Namaha
ஓம் அநந்தாய நம:

85. Om Parameswaraaya Namaha
ஓம் பரமேஸ்வராய நம:

86. Om Punya Seelaaya Namaha
ஓம் புண்ய ஸீலாய நம:

87. Om Anaadha Rakshakaaya Namaha
ஓம் அனாத ரக்ஷகாய நம:

88. Om Kaamita Varapradaayine Namaha
ஓம் காமித வரப்ரதாயினே நம:

89. Om Bhakti Gnaana Vairaagya Pradaataaya Namaha
ஓம் பக்தி க்ஞான வைராக்ய ப்ரதாதாய நம:

90. Om Purushottamaaya Namaha
ஓம் புருஷோத்தமாய நம:

91. Om Karunaa Poorna Hridayaaya Namaha
ஓம் கருணா பூர்ண ஹ்ருதயாய நம:

92. Om Satya Yuga Raajaaya Namaha
ஓம் ஸத்ய யுக ராஜாய நம:

93. Om Jeevan Mukti Pradaataaya Namaha
ஓம் ஜீவன் முக்தி ப்ரதாதாய நம:

94. Om Durita Nivaaranaaya Namaha
ஓம் துரித நிவாரணாய நம:

95. Om Mahaa Maayaaya Namaha
ஓம் மஹா மாயாய நம:

96. Om Shaantaaya Namaha
ஓம் ஸாந்தாய நம:

97. Om Sulabhaaya Namaha
ஓம் ஸுலபாய நம:

98. Om Vedaaya Namaha
ஓம் வேதாய நம:

99. Om Muktaa Naama Paramagataye Namaha
ஓம் முக்தா நாம பரமகதயே நம:

100. Om Trilokeswaraaya Namaha
ஓம் த்ரிலோ கேஸ்வராய நம:

101. Om Jitaa Mitraaya Namaha
ஓம் ஜிதா மித்ராய நம:

102. Om Saatveekaaya Namaha
ஓம் ஸாத்வீகாய நம:

103. Om Mahaa Vidyaaya Namaha
ஓம் மஹா வித்யாய நம:

104. Om Pateeta Paavanaaya Namaha
ஓம் பதீத பாவனாய நம:

105. Om Oushadhaaya Namaha
ஓம் ஔஷதாய நம:

106. Om Narajanma Vinaashaaya Namaha
ஓம் நரஜன்ம வினசாய நம:

107. Om Sahasra Koti Yuga Dhaarine Namaha
ஓம் ஸஹஸ்ர கோடி யுக தாரிணே நம:

108. Om Tejomaya Nija Roopaaya Namaha
ஓம் தேஜோமய நிஜரூபாய நம:.

அம்மா பகவான் நாமாவளி

ஓம் பத்மாவத்யை நமஹ

ஓம் கல்கின்யை நமஹ

ஓம் கல்கிபிரியாயை நமஹ

ஓம் சக்ரேஸ்வர்யை நமஹ

ஓம் அகிலாண்டேஸ்வர்யை நமஹ

ஓம் மகாசக்தியை நமஹ

ஓம் மகாகாள்யை நமஹ

ஓம் மகாலக்ஷ்மியை நமஹ

ஓம் ஐஸ்வர்யலக்ஷ்மியை நமஹ

ஓம் சந்தான லக்ஷ்மியை நமஹ

ஓம் தனலஷ்மியை நமஹ

ஓம் தான்ய லக்ஷ்மியை நமஹ

ஓம் சரஸ்வத்யை நமஹ

ஓம் வாக்தேவ்யை நமஹ

ஓம் தைர்ய லக்ஷ்மியை நமஹ

ஓம் தேவ நாயிகாயை நமஹ

ஓம் வரப்ரதாயின்யை நமஹ

ஓம் மோட்சப்ரதாயின்யை நமஹ

ஓம் ஆதிபராசக்த்யை நமஹ

ஓம் மங்கள ரூபின்யை நமஹ

ஓம் ஓம்கார ஸ்வரூபின்யை நமஹ

ஓம் பரன்ஜோத்யை நமஹ

ஓம் மருந்தீஸ்வர்யை நமஹ

ஓம் சத்யலோகவாசின்யை நமஹ

ஓம் குருஸ்வரூபின்யை நமஹ

ஓம் தீப்த்யை நமஹ

ஓம் சந்தோஷ தாயின்யை நமஹ

ஓம் பிரமண்ட நாயிகாயை நமஹ

ஓம் இஷ்ட தேவ்யை நமஹ
ஓம் லோகமாத்ரே நமஹ
ஓம் ஹ்ருத் நிவாசின்யை நமஹ
ஓம் அகண்ட ஜோத்யை நமஹ
ஓம் ஜகத் சிம்மாசனேஸ்வர்யை நமஹ
ஓம் சுஸ்மிதாயை நமஹ
ஓம் ஆனந்த நடனேஸ்வர்யை நமஹ
ஓம் பக்தஜன ப்ரியாயை நமஹ
ஓம் த்ரிகுணேஸ்வர்யை நமஹ
ஓம் த்ரிலோக சஞ்சாரின்யை நமஹ
ஓம் காவ்ய நாயிகாயை நமஹ
ஓம் மோகன ரூபிண்யை நமஹ
ஓம் துக்க நிவாரிண்யை நமஹ
ஓம் மகாமாய சக்தியை நமஹ
ஓம் சுந்தர்யை நமஹ
ஓம் சாந்தஸ்வரூபிண்யை நமஹ
ஓம் சத்யநாயக்யை நமஹ
ஓம் சர்வரோக நாசின்யை நமஹ
ஓம் குண்டலினி சக்தியை நமஹ
ஓம் காருண்யை நமஹ
ஓம் பரமதயாகார்யை நமஹ
ஓம் கலிநாசின்யை நமஹ
ஓம் அந்தர்யாமின்யை நமஹ
ஓம் தபநிவாரின்யை நமஹ
ஓம் சக்தி ஸ்வரூபினியை நமஹ

ஓ

பகவான் கவசம்

பணிவோர்க்கு பாதக் கமலம் கிடைக்கும்
நினைப்போர்க்கு நீள்வினை நீங்கும் - தினமும்
அகத்துள் நினைந்து நீ வந்தனை செய்ய
ஸ்ரீ ஸ்ரீ பகவான் புரிவார் அருள்

மனஇருள் மாயை நீக்கிட வந்த
ஸ்ரீ ஸ்ரீ பகவான் ஈஸ்வராய நமஹ
பகவான் கல்கி ரூபயா நமஹ ஸ்ரீ ஸ்ரீ பகவான்
பரப்பிரம்ஹ புருஷோத்தம பரமாத்மனே நமஹ.

1. சத்திய வடிவம் ஸ்ரீ ஸ்ரீ பகவான்
அவரைத் தொழுதால் நீங்கிடும் பாவம்
உத்தமன் உந்தன் உயரிய நாமம்
சிந்தையில் நிறைந்தால் வந்திடும் ஷேமம்

2. கண்களில் தோன்றும் கருணையின் வரவால்
பண்களில் தோன்றும் பல்சுவை நாதம்
பகவத் நாமம் பாரினில் வேதம்
நித்தமும் பணிந்தால் மனதினில் கீதம்

3. இருவினை அகல மும்மலம் களைய
இனிதருள் புரிய பகவானைத் தொழுதோம்
மனதில் தோன்றும் மாயைகள் மறைய
பகவான் உந்தன் பதமலர் தொழுதோம்.

4. நாற்பொருள் கண்டு நல்லறம் கொண்டு
நானிலம் போற்ற நல்லடி தொழுதோம்
சிந்தையின் நிறைவே சீரிய வாழ்வே
செவ்வடி பணிந்தோம் சித்தூர் தேவே.

5. வருக வருக அருள்மிகு பகவான்
தருக தருக திருவடி தருக
விலக விலக பாவங்கள் விலக
நிலவ நிலவ நின்புகழ் நிலவ.

6. சத்திய லோக தெய்வமே வருக
நித்தமும் பணிந்தோம் அருளவே வருக
கலியுகம் காக்கும் கர்த்தனே வருக
கல்கி அவதார கண்ணனே வருக

7. பகவத் தர்மா படைத்தவா வருக
ஜெகத்தினில் தீமைகள் தீர்க்கவே வருக
பக்தர்கள் கோடி நாமத்தைப் பாடி
சன்னிதி வந்தோம் சரணங்கள் பாடி

8. அனைவரும் மகிழ ஐயா வருக
அழகிய வடிவே அன்புடன் வருக
சிரஞ்சீவி வாழ்வே சக்தியைத் தருக
சிரமத்தைப் போக்க சீக்கிரம் வருக.

9. அன்பின் வழியில் என்னைக் காக்க
என்முன் வருக நல்வழி தருக
என்குலம் காத்திட இவ்விடம் வருக
கலைமகள் அருளுடை அன்பரே வருக.

10. கீதையை உரைத்த கண்ணனும் நீயே
ஓமுடன் சேர்ந்த ஜோதியும் நீயே
முக்கண் முதல்வன் சிவனும் நீயே
மூவுலகாளும் சக்தியும் நீயே

11. நல்வழி போற்றும் நான்மறை காக்க
நானிலந் தன்னில் நன்மைகள் புரிய
வேதத்தை மீட்ட வேதப் பொருளாய்
மச்சாவ தாரம் முதல் வடிவாகும்.

12. மேருவை உயர்த்த மேன்மையான வடிவாய்
கூர்மா வதாரம் இரண்டாம் எடுத்தாய்
ஆழியில் அமிழ்ந்த பூமியை மீட்ட
வராகவ தாரம் மூன்றாம் எடுத்தாய்.

13. இரண்யன் அகந்தை அழித்திட வந்தாய்
பிரகலாதன் உரு நீயே தந்தாய்
நரசிம்ம வடிவா கிடவே நின்றாய்
அவதாரம் நான்காய் வந்தே கொன்றாய்.

14. மாபலி மன்னன் ஆணவம் நீங்க
அவதாரம் வாமன ரூபம் ஐந்தாய்
நிறைகுணம் பரசு ராமனாய் உதித்து
அறநெறி அவதாரம் ஆறாய் நின்றாய்.

15. பண்பின் உறைவிடம் ராமனாய் வந்தே
அன்பின் அவதாரம் ஏழாய் உதித்தாய்
பலராமன் உரு எட்டாய் வந்தாய்
கிருஷ்ணா நீயே ஒன்பதாய் நின்றாய்.

16. போதியின் நிழலில் புத்தரும் நீரே
சிலுவைப் பேரொளி ஏசுவும் நீரே
சக்தியின் ரூபமே சங்கரர் நீரே
குர் ஆன் அருளிய நபிகளும் நீரே.

17. தன்குடிப் பிறப்பின் பெருமையை மறந்து
தன்மனப் போக்கினில் காமத்தில் உழன்று
வாழ்வின் உண்மை நிலையை உணர்த்தி
சோதனை தந்து ஞானத்தைத் திறந்து.

18. ராமனின் உருவாய் நேரிடை வந்தாய்
துளசி தாசரின் வாழ்வில் மலர்ந்தாய்
ராம மானஸ சரிதம் தந்தாய்
லோகம் செழிக்க பகவான் நின்றாய்.

19. சாதி சமயம் பிரிவினைப் போக்க
வேதப் பொருளே வழியை தெளிந்தாய்
ஒன்றே இறைவன் என்பதை உணர
முகம்மது கபீராய் பூமியில் தந்தாய்.

20. ராமனும் ரஹீமும் ஒன்றே என்றாய்
வேதமும் குர்ரானும் நன்றே மொழிந்தாய்
பஜனைகள் பாடி நாமம் சொல்ல
வைகுண்ட பதமுண்டு வழிதனைச் சொன்னாய்.

21. பண்டரி புரத்தில் அவதரித் தவராம்
நன்மகன் நாம தேவனாய் வந்து
பாண்டு ரங்கனின் திருவருள் அடைய
பாக்கியம் தந்த பகவான் நீயே.

22. ஆனந் தீநகர் அமரர் ஆன
ஞானேசு வரர்க்கு அறிவொளி தந்தாய்
பிரம்ம ஞானத்தின் தெளிவைச் சொன்னாய்
பரமனாய் பகவான் நெஞ்சில் நின்றாய்.

23. வேமன்ன புரி அழகிய ஊரில்
பேராய் ரகுநாதன் நாமமும் கொண்டு
செல்வம் ஒன்றே பெரிதாய்க் கொண்டு
கர்வம் ஓங்க வாழ்ந்து வந்தனனே.

24. பொன்னும் பொருளும் நிலைப்பது இல்லை
என்பதைச் சொல்லித் தூய்மைப் படுத்த
புரந்தரி மூலம் ஞானத்தைத் தந்து
புரந்தர தாசராய் ஆக்கிட வைத்தாய்.

25. இசைஉரு வான இறைவனும் நீயே
இசைதரும் நாதத்தில் இன்னருள் புரிய
திருவை யாற்றில் தியாக ராஜர்
உருவைத் தந்து உயிராய் நின்றாய்.

26. பக்தியின் வெள்ளம் கரைபுரண் டோட
சங்கீ தத்தில் சரித்திரம் தந்தாய்
கீர்த்தனை அனைத்திலும் கீர்த்தியாய் நின்றாய்
கீதத்தில் பகவான் நாதமாய் நின்றாய்.

27. கோபன்னா எனும் திருப்பெயர் கொண்டு
ராமன் நாமத்தை ஓதிடச் செய்தாய்
பெருமானே உன்திரு வருள் தந்தாய்
ராமனாய் வந்து தரிசனம் தந்தாய்.

28. கண்ணனை நினைத்து பஜனைகள் பாடி
என்றும் உன்திரு நாமம் சொல்லும்
மீரா வாழ்வில் பேரருள் தந்தாய்
பேறாய் நின்ற கண்ணனும் நீயே.

29. எல்லா மதங்களும் ஒன்றென மொழிய
எல்லா மக்களும் தம்முடன் இணைய
வள்ளலாய் அருட்பெருஞ் ஜோதியைத் தந்தாய்
வையகம் காக்க பகவான் வந்தாய்.

30. அத்வைத பிரம்ம அருவமும் நீரே
பக்திப் பொருளே ஈஸ்வரர் நீரே
சகுன பிரம்ம ஈஸ்வரர் நீரே
வேதமும் காணா மூலப் பொருளே.

31. சைவம் தழைக்க சிவனாய் வந்து
நாயன் மாருக்கு நல்லருள் தந்தாய்
திருமாலே உன் மகிமைகள் சொல்ல
ஆழ்வார்க் கருளி பிரபந்தங்கள் அளித்தாய்.

32. ராமகிருஷ்ண பரம ஹம்சர்க்கு அருள
அரோபிந்தோ புகழ் பாரினில் பரவ
பகவான் அருள்மழை பொழிந்தவர் நீரே
ஜெகத்தினில் உதிக்கச் செய்தவர் நீரே.

33. எத்தனை பிறவிகள் இத்தரை மீது
அத்தனை உயிர்கள் வாழ்ந்திட எடுத்தாய்
இப்புவி மாந்தர் நினைந்திட மறந்தார்
கலியுகம் காக்க கல்கியாய் பிறந்தாய்.

34. படபட படவென மேகங்கள் முழங்க
டகடக டகவென எழுந்தன ஓசை
வெண்பனி மேலே செங்கதிர் உதயம்
வெண்பரி மேலே கல்கியின் வடிவம்.

35. தர்மத்தைக் காக்கும் தண்மதி வரவால்
அழிந்தது பாவம் விளைந்தது லாபம்
சடசட சடவென சரிந்தது சாபம்
மடமட மடவென மாய்ந்தது மாயம்.

36. கழிந்தன வினைகள் களித்தன கண்கள்
கல்கியின் வரவால் மகிழ்ந்தன மனங்கள்
கலியினைத் தீர்க்கும் கலியுக வரதன்
கவலைகள் மாய்க்கும் பரிமேல் அழகன்.

37. தீவினை அணுகா திடமிகு அகமும்
அளிமிகப் பொங்கும் அன்புறு மொழியும்
நிலையென நினைக்கும் நின்னடி துணையென
மலையென நின்றோம் மாணடி பணிந்தோம்.

38. செந்தமிழ் பாடும் என்செந் நாவால்
சிந்துகள் பாடி உன்னடி தொழவே
கண்கள் இரண்டும் கல்கியை நோக்க
செவிகள் இரண்டும் சிறப்பினைக் கேட்க.

39. கைகள் இரண்டும் உன்பதம் பணிய
கால்கள் இரண்டும் தர்மத்தைப் பரப்ப
வாய்மொழி பகவான் திருப்புகழ் பாட
ஈஸ்வரா உன்துணை வேண்டியே பணிந்தோம்.

40. கண்ணொளி இல்லார்க்குக் கண்ணாய் நின்றாய்
புண்ணாம் ரணங்களைப் பொழுதில் களைந்தாய்
ஊமையின் வாய்தனைப் பேசிட வைத்தாய்
தேவையைத் தொண்டர்க்குப் பெருக்கிடத் தந்தாய்.

41. கண்மலர் திறந்தால் கவலைகள் போகும்
உன்திரு வடிதொழ விதிகளும் மாறும்
பில்லி சூனியம் பொடியாய் ஆகும்
எல்லா நோய்களும் உன்னால் ஆறும்.

42. எங்கும் உன்திரு சன்னிதி கண்டோம்
எங்கும் பக்தர்கள் பெருகிடக் கண்டோம்
தங்கும் இதயத் தாமரை உருவே
எங்கும் ஈஸ்வர பகவான் குருவே.

43. வேண்டுவோர் வேண்டும் வரங்களைத் தருவாய்
சம்பூர்ண அவதார காட்சியைத் தருவாய்
அண்டிய யாரையும் அன்போடு காப்பாய்
ஆண்டவா ஈஸ்வரா உன்னுடன் சேர்ப்பாய்.

44. ஆதியும் அந்தமும் இல்லா தவரே
மூலப் பொருளே ஊழியைக் காக்க
காலம் வந்தது கண்முன் வந்தாய்
காட்சியைத் தந்து கல்கியாய் நின்றாய்.

45. பக்தர்கள் பஜனை பாடியே நாளும்
துன்பம் நீங்க உன்னை நினைந்தும்
ஆடியும் பாடியும் மகிழ்ந்திங்கு வேண்ட
வேண்டிய வரம் தரும் ஸ்ரீ ஸ்ரீ பகவான்.

46. மேவிய வடிவுறும் ஈஸ்வரா போற்றி
தேவர்கள் தலைவா ஈஸ்வரா போற்றி
கருணை மழையே காப்பாய் போற்றி
விரைவினில் தரிசனம் தருவாய் போற்றி.


47. நின் இணை யடிகள் போற்றி போற்றி
நின்திரு நாமம் போற்றி போற்றி
நின்திரு பகவத் சங்கம் போற்றி
ஸ்ரீ ஸ்ரீ பகவான் ஈஸ்வரா போற்றி

48. எல்லாம் நீயே சரணம் சரணம்
கல்கியின் வடிவே சரணம் சரணம்
பகவான் ஈஸ்வரா சரணம் சரணம்
ஸ்ரீ ஸ்ரீ பகவான் ஈஸ்வரா சரணம்.

49. பகவான் நின்புகழ் போற்றி போற்றி
ஜெகமிது காக்க வந்தாய் போற்றி
திருவடி சரணம் அடைந்தோம் போற்றி
பகவத் தர்மா படைத்தவா போற்றி

50. பாரினில் தர்மம் ஓங்கவே போற்றி
துயரினைத் தீர்க்கும் ஈஸ்வரா போற்றி
பகவத் தர்மா தழைக்கவே போற்றி
ஸ்ரீ ஸ்ரீ பகவான் ஈஸ்வரா போற்றி.

(பகவானின் பொற்பாதங்களுக்கு எங்களின் காணிக்கை)



ஸ்வாகதம் ஸ்வாகதம்

ஸ்வாகதம் ஸ்வாகதம்
ஸ்ரீ கல்கி பகவான் சுஸ்வாகதம்
ஸ்வாகதம் ஸ்வாகதம்
ஸ்ரீ கல்கி பகவதி சுஸ்வாகதம்

பத்மாவதி நாதா சுஸ்வாகதம்
பரப்பிரம்ம ரூபா சுஸ்வாகதம் (ஸ்வாகதம்)

சத்யலோக வாசா சுஸ்வாகதம்
சாது ஜன போஷா சுஸ்வாகதம் (ஸ்வாகதம்)

ஹே கமல நயனா சுஸ்வாகதம்
கருணா தரங்கா சுஸ்வாகதம் (ஸ்வாகதம்)

தீன ஜன பாலகா சுஸ்வாகதம்
பக்தபராதீனா சுஸ்வாகதம் (ஸ்வாகதம்)

ஹே ப்ராணநாதா சுஸ்வாகதம்
மோக்ஷ ப்ரதாதா சுஸ்வாகதம் (ஸ்வாகதம்)

பாதக் கமலமே

பாதக் கமலமே கதியெனப் பற்றினேன்
பத்மாவதி அம்மா பகவத் பத்தினி
பாதக் கமலமே கதியெனப் பற்றினேன்
அம்மா..... அம்மா.....

வேதவேதாந்த நாத ஸ்வரூபிணி
மாதா வாணி நித்ய கல்யாணி (பாத கமலமே)

அன்ன பூரணி அமிர்த ஸ்வரூபிணி
ஆருயிர்க்கெல்லாம் அன்னைநீ என்றும் நீ
சின்மய ரூபிணி சித்விலாஸினி
சிந்தையில் வருவாய் ஸ்ரீ பவதாரணி (பாத கமலமே)

அன்ன பூரணி எமை ஆளும் தெய்வம் நீ - (அன்ன)
அகிலலோக ஜனனி எமை ஆளும் தெய்வம் நீ -

பரம்பொருள் பகவான்

பரம்பொருள் பகவான் பாதத்தில் திகழும் பாதுகைகள் கண்டேன்
பகவான் சரணம் என்றே பாடி பக்தியுடன் நின்றேன்
கரங்களைக் குவித்தேன் சிரம் மேல் வைத்தேன் கண்களை மூடி
நின்றேன்
பராபரமெனும் ஞானம் பொழியும் பாக்கியம் நானும் பெற்றேன்

பாதுகையே சரணம் பகவான் பாதுகையே சரணம்
(பரம்பொருள்)

மும்மூர்த்திகளும் முனிபுங்கவரும்
முனைந்து தொழுதிடும் முதல்வனின் பாதம்
பெம்மான் பேரருள் பெய்திடும் பாதம்
பெருமறை எல்லாம் பேசிய பாதம் (பாதுகையே சரணம்)

நசரத் நகருள் நடந்த நற்பாதம்
நன்மைகள் கோடி நல்கிய பாதம்
இஸ்லாம் ஈந்த இணையிலா பாதம்
ஈஸ்வர பகவான் திருமலர் பாதம் (பாதுகையே சரணம்)

அறுபத்து மூவர் முன் ஆடியபாதம்
ஆழ்வார் தமிழிசை தேடிய பாதம்
வரும் பக்தர்களின் வாழ்வினை மாற்றும்
வள்ளலார் கண்டு வணங்கிய பாதம் (பாதுகையே சரணம்)

எனது அருள் உங்களுக்குத் தற்செயல் நிகழ்ச்சிகளாகவும் வரும் என்பதை நீங்கள் உணரவேண்டும். அவ்வாறு உணருகின்ற போது உங்களுடைய அன்பு பெருகும். அன்பு பெருகுகின்ற போது இத்தற்செயல் நிகழ்ச்சிகள் யாவும் அற்புதங்களாக ஆகிவிடும்.

ஸ்ரீ பகவான்

அம்மா தாயே

அம்மா தாயே பத்மாவதி வந்தருள் புரிவாய் பத்மாவதி

கல்கி பகவதி பத்மாவதி (2)
கருணைக் கடலே பத்மாவதி (2)
(அம்மா தாயே)

ராமனுக்கு சீதை தானே கிருஷ்ணனுக்கு ருக்மணி (2)
கல்கிக்கு நீ தானே அர்தாங்கினி (2)

துக்கமெல்லாம் தீர்ப்பவளே அணு அணுவில் இருப்பவளே (2)
கலியுகத்தை முடித்துவைக்க கல்கியோடு வந்தவளே (2)
(அம்மா தாயே)

நோயைத் தீர்க்கும் மருந்தாக வாழ்க்கைக்கொரு துணையாக (2)
அகிலாண்டேஸ்வரி அம்மாவே அகிலம் ஆடுது உன்னாலே (2)

இதயத்திலே இருந்தருளும் தேவி நீ
இருளை நீக்கி ஒளியைத் தரும் ஜோதி நீ (2)
துன்பமெல்லாம் தீர்க்கும் கமலவாசினி
அன்பினாலே ஆட்சிசெய்யும் அன்னை நீ (அம்மா தாயே)

சேயை காக்க வந்தவளே சேர்த்தணைத்து மகிழ்பவளே (2)
பரம் பொருளின் சக்தியாக தர்மம் காத்து நிற்பவளே (2)

அகிலாண்டேஸ்வரி அம்மாவே அகிலம் ஆடுது உன்னாலே (2)
(அம்மா தாயே)

நான் உங்களுடைய அறிவிற்கும் ஞானத்திற்கும் அப்பாற்பட்டு நிற்கின்றேன்; ஏனெனில் நீங்கள் என்னை ஓரளவிற்குத்தான் புரிந்து கொண்டுள்ளீர்கள்.

ஸ்ரீ பகவான்

அருளாலே உலகாளும் கல்கி பகவான்

அருளாலே உலகாளும் கல்கி பகவான்
எமைக்காக்க இறங்கி வந்த கல்கி பகவான்
தாளாத என் துன்பம் தாங்கிக் கொண்டாய்
நானே தான் அனைத்தும் எனக் காட்டுகின்றாய்

(அருளாலே)

நாலுவகை வேதங்கள் நாயகனும் நீயே
நாடி நின்ற பேருக்குத் தந்தையும் நீயே
தேடுகின்ற கண்களுக்குத் தெய்வமும் நீயே
வாடுகின்ற நெஞ்சுக்குக் கதியும் நீயே

(அருளாலே)

கண்களிலே கருணைவெள்ளம் பெருகிடவே காண்பாய்
கைகளை நீட்டியே வா என்று அழைப்பாய்
தன்னையே தந்தவர்க்குத் தானாகி நிற்பாய்
தனிமுதலே அருள்நிதியே பரம்பொருளே சரணம்

(அருளாலே)

நோயுற்ற பேருக்குத் தாயாக வருவாய்
நிதியற்ற பேருக்கு நிதிகளைத் தருவாய்
விதியென்று கதியாக நீ தோன்றி நிற்பாய்
நின் அருள் வேண்டி நின்றோமே கல்கியே வருவாய்

(அருளாலே)

எனது தர்மாவிற்காக இங்கே நீங்கள் பாடுபட்டால், இங்கேயே நான் உங்களுக்கு வெகுமதியளிப்பேன்; பின்னர் பன்மடங்கு அதற்கும் மேலாக அளிப்பேன்.

ஸ்ரீ பகவான்

ஒவ்வொரு யுகத்திலும்

ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு முறையை
உன்னை அடைய அமைத்தாய் இறைவா
இதயத்துள்ளே நீ வந்து அமர
யுகதர்மங்கள் படைத்தாய் இறைவா. (ஒவ்வொரு)

சத்திய யுகத்தில் தவம் செய்ய வேண்டும்
த்ரேதா யுகத்தில் யாகம் செய்ய வேண்டும்
துவாபர யுகத்தில் பூஜை செய்ய வேண்டும்
கலியுகத்திலோ சங்கீர்தனம்தான். (ஒவ்வொரு)

வாழ்வின் உண்மையைச் சத்தியமாகக் கூறி
வாடிய நாங்கள் பாடியே நிற்கிறோம்.
கூடி அழைத்தால் வருவேன் என்றாய்
சொன்னபடியே இன்னருள் செய்வாய் (ஒவ்வொரு)

வேதங்கள் ஓதும் பரப்பிரம்மம் நீயே
யோகிகள் போற்றும் பரமாத்மன் நீயே
பக்தர்கள் ஏங்கும் பகவான் நீயே
கலியை வென்ற கல்கியும் நீயே (ஒவ்வொரு)

எல்லா கிரந்தங்களும் என்தென்றுரைத்தாய்
எல்லா யுகங்களின் இறை நான் என்றாய்
எல்லாம் என்னுள் அடக்கம் என்றாய்
கடவுள் கல்கியாய் புவியில் வந்தாய் (ஒவ்வொரு)

எனது சீடர்கள் தர்மாவை வெளிப்படுத்துகிறார்கள்; எனது சந்நியாசிகள் தர்மாவை உபதேசிக்கிறார்கள்; நீங்கள் தர்மாவைப் பரப்பி, காக்க வேண்டும்.

ஸ்ரீ பகவான்

பஜ அம்மா பகவான்

சம்பூர்ண உருவமல்லவா.....
ஜோதியின் வடிவமல்லவா.....
ஞானத்தின் ஊற்றல்லவா.....
தேவனுக்கு நாதனல்லவா.....
சச்சிதானந்தமே.....
பேரின்பானந்தமே.....
இதயத்தின் நாயகனே.....
முக்தியை அளிப்பவனே.

பஜ அம்மா பகவான்,.....பஜ அம்மா பகவான்.....
பஜ அம்மா பகவான்,.....மூடமதே (2)
பகவான் அம்மா பதமே சொந்தம்
அறிவாய் உந்தன் பாடமதே (பஜ அம்மா)

உலகினில் பலகோடி மக்களும் உனைப்பாட
எங்கள் இதயத்தில் நீ நின்று ஆட
அன்பு மழையினில் எங்களை நீராட்ட
மழலை எங்களை மடியினில் தாலாட்ட (பஜ அம்மா)

நான் உந்தன் பக்தனல்லவா
நீ எந்தன் சக்தியல்லவா
நான் உந்தன் அடிமையல்லவா
காப்பது உன் கருணையல்லவா
புருஷோத்தமனே பரம ஆத்மனே
சாந்தஸ்வரூபனே என் உயிர் நாதனே. (பஜ அம்மா)

நான் உங்களைத் துயரப்பட வைப்பதே, உங்களுக்கும், எல்லோருக்கும், எல்லாவற்றிற்கும் உதவுவதற்குத்தான்.

ஸ்ரீ பகவான்

கல்கி கல்கி கல்கி

கல்கி கல்கி கல்கி என்ற நாமம் சொல்லுவோம்
காலை மாலை இரண்டு வேளை கானம் செய்வோம்
காம குரோத மோக லோபம் நான்கும் தள்ளுவோம்
கருணையால் இறங்கி வந்த கடவுளை நாம் பாடுவோம்

(கல்கி)

அன்பு என்றால் என்னவென்று அறிந்து கொள்ளுவோம்
அன்னை தந்தை அனைவரோடும் இணைந்து வாழுவோம்
இன்ப வெள்ளம் இதயம் தோறும் பெருக காணுவோம்
இதயம் பூத்து மலர இறைவன் புகழைப் பாடுவோம்.

(கல்கி)

கள்ளமில்லா உள்ளத்தோடு கனிந்து பாடுவோம்
கவலை துன்பம் யாவும் மறைய மகிழ்ந்து ஆடுவோம்
வெள்ளை குதிரை மீதில் வரும் அழகைப் பாடுவோம்
வெற்றி எதிலும் வெற்றி கண்டு ஆடித்துள்ளுவோம்.

(கல்கி)

கல்கி தர்ம பாதையிலே கவனம் செய்குவோம்
கருத்துடனே கண்கள் அயராமல் இருப்போம்
முக்தி ஒன்றே லட்சியமாய் முன்னேறுவோம்
முடிவிலாத இன்ப நிலையை நாளும் எய்துவோம்.

(கல்கி)

இந்த உலக வாழ்க்கையைத் துறப்பதைவிட, இந்த உலக வாழ்க்கையில் இருந்தவாறே துறப்பதன் மூலம் என்னிடம் நீங்கள் நெருங்கி வருவது எளிதாகும்.

ஸ்ரீ பகவான்

தேவ தேவ

தேவ தேவ ஸ்ரீ கல்கி தேவா
நேமத்தின் வாசா நமோ நமோ
நாநிலம் தேடிய அருட்பெருஞ் சுடரே
ஸ்ரீமான் கல்கி நமோ நமோ (தேவ தேவ)

நான்கு வேதங்கள் நாயகன் நீயே
ஸ்ரீ ஸ்ரீ கல்கி நமோ நமோ
நாதனாகி உயிருடன் கலப்பாய்
நாரணன் கல்கி நமோ நமோ (தேவ தேவ)

சிவனடியார்க்கு சிவனாய் வந்தாய்
ஸ்ரீ ஹர கல்கி நமோ நமோ
வைணவர் இதயத்தில் ஸ்ரீ ஹரியானாய்
சுந்தர கல்கி நமோ நமோ (தேவ தேவ)

கிறிஸ்தவர் இதயத்தில் இயேசுவானாய்
பரமபிதா கல்கி நமோ நமோ
முகம்மதியருக்கு அருவம் ஆனாய்
அல்லா கல்கி நமோ நமோ (தேவ தேவ)

பௌத்த மதத்தின் நிர்வாணமானாய்
மோஷ பிரபு கல்கி நமோ நமோ
மஹா வீரரின் கைவல்யமானாய்
ஜீவகாருண்ய நமோ நமோ (தேவ தேவ)

ஊழ்வினை அகற்றி உண்மையை விளக்கி
உலகினைக் காப்பாய் நமோ நமோ
உள்ளத்தில் அமர்ந்து தரிசனம் அளிப்பாய்
ஸ்ரீமான் கல்கி நமோ நமோ (தேவ தேவ)

கல்கி ரூபனே

கல்கி ரூபனே சரணம் ஆண்டவா
சரணம் ஆண்டவா கல்கி ரூபனே (கல்கி)

நீலக்கடல் மேலே சிரித்து வந்தாயே
அலைகடல் மேலே ஆடி வந்தாயே
வீசும் காற்றினில் மலர்ந்து நின்றாயே
அலையின் ஆட்டத்தில் ஆடி நின்றாயே (கல்கி)

ஜோதி ரூபனே ஒளியை வீசிடு
ஒலியின் ரூபனே குரல்கொடுத்திடு
ஒளியை வீசிடு இருளை நீக்கிட
குரல் கொடுத்திடு பயத்தைப் போக்கிட (கல்கி)

ஆணவம் அடங்கிட அறிவைத் தந்திடு
ஆனந்தம் பொங்கிட அருளைப் பொழிந்திடு
தீன ரட்சகா தீமை ஒழித்திடு
தீன தயாளா பரிவைத் தந்திடு (கல்வி)

அன்பு தெய்வமே ப்ராண நாதனே
ஆசை போலவே நீ வந்திடுவாயே - உன்
திருமுகம் கண்டு நாங்கள் மயங்கி நிற்கிறோம்
அருள்தனை மழையாய் நீ பொழிந்திடுவாயே (கல்கி)

குழந்தை நாங்கள் நாம் வந்து நிற்கிறோம்
நின் பாதம் தன்னையே பற்றி நிற்கிறோம்
தருணம் இதுவே தயை புரிவாயே
நயன தீட்சையை நீ தந்தருள்வாயே (கல்கி)

வருவாய் வருவாய்

வருவாய் வருவாய் பகவானே வருவாய்
தருவாய் தருவாய் தரிசனம் தருவாய்
பணிவாய் பக்தியாய் பணிந்தேன் உனையே
பகவானே ஸ்ரீ ஸ்ரீ பகவானே (வருவாய்)

கல்லான என்மனம் கரைக்கவே வருவாய்
கருணை கடலே கனிவுடன் வருவாய்
கதறியழுது கரைந்தே அழைத்தேன்
பகவானே ஸ்ரீ ஸ்ரீ பகவானே (வருவாய்)

ஆடியே பாடியே அழைக்கின்றேன் வருவாய்
ஆனந்தமாகவே அருகினில் வருவாய்
கோடானு கோடி மக்களை மகிழ்விப்பாய்
பகவானே ஸ்ரீ ஸ்ரீ பகவானே (வருவாய்)

தியானம் செய்தே சரணமடைந்தேன்
பாவங்கள் போக்கியே ஆனந்தம் தருவாய்
பாமர மக்களைப் பரிவுடன் நோக்கியே
பகவானே ஸ்ரீ ஸ்ரீ பகவானே (வருவாய்)

கண்கண்ட தெய்வமே

கண்கண்ட தெய்வமே வருக - எங்கள்
கலியுக தெய்வமே வருக
கருணை கடலே வருக - எங்கள்
கல்கி பகவானே வருக (கண்கண்ட)

கலைமகள் மலைகள் அலைமகள் மூவரும்
உன்னுடன் சேர்ந்தாட
புலவர்கள் அனைவரும் ஒன்றாய் சேர்ந்து
உனக்கே கவி எழுத (கண்கண்ட)

நாயன்மார்களும் ஆழ்வார்களுமே
உனையே பாடி நிற்க
அனைத்தையும் பார்த்து கல்கியாகவே
எதிரே வந்து நிற்க (கண்கண்ட)

நீ இந்த மண்ணில் பிறந்ததை அறிய
நாங்கள் இருந்தோமே
அனைத்தையும் உணர்த்தி அறிவை கொடுத்ததை
நாங்கள் உணர்ந்தோமே (கண்கண்ட)

குடும்பங்கள் எல்லாம் கோவில் ஆகுதே
உந்தன் பக்தியிலே
நாங்கள் அனைவரும் சேர்ந்தே வருவோம்
ஜீவன் முக்தியிலே (கண்கண்ட)

கல் மனதை கரைக்கும் கண்கள்

கல்மனதை கரைக்கும்
கண்கள் உந்தன் கண்கள்
கலியுகத்தை ஆளும்
கண்கள் உந்தன் கண்கள் (கல்மனதை)

நால்வருக்கு ஞானம் தந்து
பாடவைத்த கண்கள்
யாழெடுத்து மீராவை
ஆடவைத்த கண்கள் (கல்மனதை)

காணும் இந்த பூமி தன்னை
ஆள வந்த கண்கள்
வேண்டுமென்ற போது வந்து
ஆசி தந்த கண்கள் (கல்மனதை)

பக்தர்களைப் பேதமின்றி
காத்து நிற்கும் கண்கள்
பித்தரைப்போல் ஆட வைத்துப்
பார்த்து நிற்கும் கண்கள் (கல்மனதை)

தந்தையென வந்து எம்மை
அன்பு செய்யும் கண்கள்
சிந்தனையில் தேடுவோரை
வம்பு செய்யும் கண்கள் (கல்மனதை)

நினைவு கொள்ளுங்கள்! நான் உங்களைத் துயரப்பட வைக்கிறேன் என்றால், அது உங்களுக்கு நான் உதவுவதாக நான் நமது ஒப்பந்தத்தில் சொன்ன எனது வார்த்தையைக் காப்பாற்ற வேண்டித்தான்.

ஸ்ரீ பகவான்

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ் ஜோதியைக் கண்டேனே!
ஆனந்தத் தேனமுது உண்டேனே!
பகவானே! பகவானே!
பொறுத்தருள் செய்வாய் பகவானே!

கானம் தந்திடுவாய் பகவானே!
கங்கை நீரோட்டம் போல் பகவானே! (அருட்பெரும்)

அறம் தந்திடுவாய் பகவானே!
அருட்பணி செய்யவே பகவானே! (அருட்பெரும்)

வாக்கைத் தந்திடுவாய் பகவானே!
வாழ்க்கையை உணரவே பகவானே! (அருட்பெரும்)

அழகு தந்திடுவாய் பகவானே!
அகமுகம் காட்டிடு பகவானே! (அருட்பெரும்)

ஞானம் தந்திடுவாய் பகவானே!
நயம் உடன் நாடிட பகவானே! (அருட்பெரும்)

அருட்பெரும் ஜோதி! தனிப்பெரும் மகிமை!
அருட்பெரும் ஜோதி! தனிப்பெரும் மகிமை!
அருட்பெரும் ஜோதி! தனிப்பெரும் மகிமை!
அருட்பெரும் ஜோதி! தனிப்பெரும் மகிமை!
பகவானே பகவானே பொறுத்தருள் செய்வாய் பகவானே.

அன்புதான் எனது இராஜ்ஜியத்தை அடைவதற்கான திறவுகோல்
ஸ்ரீ பகவான்

ஆனந்தமே பேரானந்தமே

ஆனந்தமே பேரானந்தமே - அய்யா
உனைக் கண்டால் ஆனந்தமே
பேரின்பமே என்றும் பேரின்பமே கல்கி
நாமம் சொல்ல சொல்ல பேரின்பமே

தேவா தேவா கல்கி தேவா தேவா
தேவா தேவா கருணை தேவா தேவா
தேவா தேவா கல்கி தேவா தேவா
ஓம் மஹா தேவா நெஞ்சில் ஆட வா வா

ஊர் ஊராய் நான் செல்ல வேண்டுமய்யா - அங்கு
கல்கி தர்மம் சொல்ல வேண்டுமய்யா
முத்துத் தமிழாரம் நான் தொடுக்க - ஒரு
முத்தமிட்டு என்னை நீ வாழ்த்திடய்யா (தேவா)

கல்கி நாமம் சொல்ல வாருங்களேன்
உங்கள் கவலை தீரும் வழியைக் கேளுங்களேன்
கல்கியிடம் உள்ளம் தாருங்களேன் தந்து
கல்கியை இதயத்துள் காணுங்களேன் (தேவா)

உலகின் ஒரே தந்தை கல்கிதானே - இதை
உணர்ந்தோர்க்கு ஐஸ்வர்யம் குவியும் தானே
உன்னை நீ உணர்ந்தாலே போதும் போதும்
நன்மை தானாக வந்து உன்னைச் சேரும் சேரும் (தேவா)

அன்னை பத்மாவதியோடிணைந்து - உந்தன்
நயன தீட்சை அருள் தந்துவிடு
உம்மைப் பற்றிக் கொண்டு நிற்போருக்கு
நல்ல, உன்னத வாழ்வினைத் தந்துவிடு (தேவா)

உன்னைப் போல்...

நீ அல்லாது, என் குறை கேட்பவர் இல்லை
உன் நிழலில்லாது, நிம்மதி எங்கும் இல்லை
வாயில்லாத, ஜீவனாய் வந்து நின்றேன்
ஐயனே! உன் கருணைக்கு எல்லை என்ன?

உன்னைப்போல் ஒரு உதவும் பகவான்
உலகில் வேறு யாரப்பா - உந்தன்
கமலப் பாதம் காண வேண்டும்
மனதில் ஆவல் தீரப்பா
என்னைப் போல் ஒரு தீனன் இந்த
ஜெகத்தில் உண்டோ? கூறப்பா - உன்னை
என்றும் பாடி இன்பம் கோடி
அடைய வேண்டும் நானப்பா (உன்னைப் போல்)

நெறிகள் விலகும் தர்மம் குறையும்
நிலைமை தோன்றும் கலியிலே
அறிவில்லாமல் அன்பில்லாமல்
அலைந்து வந்தோம் வாழ்விலே
புரிந்தும் புரியா புதிரைப்போல்
ஒரு புனிதமான உன் வடிவிலே
உன்னைப் புரிந்து கொண்டேன் தெளிந்து நின்றேன்
புனிதம் சேர்க்கணும் ஐயனே (உன்னைப் போல்)

பகவத் தர்மம் காட்டும் பாதை
பழக எளிதாய் ஆனதே
பக்தி ஓங்கி பணிவும் ஓங்கி
பலனும் நாளும் பெருகுதே
இகத்திலிருந்தே பரத்தை நோக்கி
இனிய பயணம் துவங்குதே
துன்பம் தீர்க்கும் இன்பம் சேர்க்கும்
எளிய மார்க்கம் தெரிந்ததே. (உன்னைப் போல்)

நாமம் கீதம்

நாமம் கீதம் ஓம் ஸ்ரீ பகவான்
கல்கி ரூபனே ஓம் ஸ்ரீ பகவான்
பூமியில் அவதாரா ..... பூமியில் அவதாரா

நேமத்தில் பிறந்த பாலகனே - இப்போ
சத்யலோக வாசா பகவானே
சாமியே பகவான் ஓம் ஸ்ரீ பகவான்
பகவான் நாமமே பாடுங்கள் (2) (நாமம்)

பகவான் ஜோதியைப் பார்த்திடுங்கள்
உங்கள் பாவங்கள் எல்லாம் தீர்த்திடுங்கள்
சாமியே பகவான் ஓம் ஸ்ரீ பகவான்
பகவான் நாமமே பாடுங்கள் (2) (நாமம்)

பகவான் அன்பைப் பெற்றிடுங்கள்
உங்கள் துக்கங்கள் எல்லாம் மறந்திடுங்கள்
சாமியே பகவான் ஓம் ஸ்ரீ பகவான்
பகவான் நாமமே பாடுங்கள் (2) (நாமம்)

சத்யலோகம் பார்த்திடுங்கள்
ஜீவன் முக்தியைப் பெற்றிடுங்கள்
சாமியே பகவான் ஓம் ஸ்ரீ பகவான்
பகவான் நாமமே பாடுங்கள் (2) (நாமம்)

உங்களைவிடத் தாழ்ந்த நிலையில் உள்ளோருக்கு அன்பாதரவு தந்து இரக்கம் காட்டுங்கள்.

ஸ்ரீ பகவான்

நீ வேண்டும்

நீ வேண்டும் உன்தன் அருள் வேண்டும்
உன்னை என்றென்றும் மறவாத மனம் வேண்டும்
துணை வேண்டும் உந்தன் துணை வேண்டும்
உன்னைத் துயிலும் போதும் மறவாத நிலை வேண்டும் (2)

இல்லறமே அது நல்லறமே என்று
சொன்னவனே என் இனிய நண்பனே (2)
கண்டு கொண்டேன் உன்னைக் கண்டு கொண்டேன்
கண்ணார உன்னை நான் கண்டு கொண்டேன்
(நீ வேண்டும்)

ஆனந்தமே சச்சிதானந்தமே உந்தன்
திருமுகத்தைக் கண்டாலே ஆனந்தமே (2)
ஆடிடுவோம் நாங்கள் ஆடிடுவோம்
உலகமெல்லாம் உன்புகழைப் பாடிடுவோம்
(நீ வேண்டும்)

என்னவனே எனக்கு முன்னவனே நான்
உன் உயிரில் கலந்து விட்டேன் மன்னவனே (2)
சொன்னவனே சொல்லி வந்தவனே
எங்கள் இதயங்களில் சுடராகி ஒளிர்பவனே (2)
(நீ வேண்டும்)

"மனிதனால் தன் சொந்த முயற்சியின் மூலம் முக்தி நிலையை அடைய முடியாது. பகவத் அனுக்ரஹத்தினால் மட்டுமே அதை அடையமுடியும்"

ஸ்ரீ பகவான்

ஆனந்த நாட்டியம்

ஆனந்த நாட்டியம்
நீலா மோகனம்
கல்கி நர்த்தனம்
ஜோதி தாண்டவம்
பக்தி புஷ்கரம்
பாப நாசனம்
பாத சேவிதம்
மோட்ச லக்ஷணம் (ஆனந்த)

சிதறிவிடும் சிந்தனைகள்
திறந்துவிடும் இதய வாசல்
தோன்றிவிடும் கல்கி தரிசனம் (ஆனந்த)

மாறிவிடும் ஜென்ம விதிகள்
கருகிவிடும் கர்ம வினைகள்
உலகம் முழுதும் கல்கி தர்மம் (ஆனந்த)

கல்கி ரூபன் கருணை இது
கால தேவன் ஆணை இது
மலர்ந்து விட்டது சத்திய யுகம் (ஆனந்த)

உலகம் உண்மை உணர்ந்து விட்டது
லோக பலம் பெருகி விட்டது
இல்லம் எல்லாம் கல்கி ஆஸ்ரமம் (ஆனந்த)

உனக்கு நீயே உதவி செய்துகொள்ள இயலாத நிலையில் என்னை அணுகினால் நான் உனக்கு அனுக்ரஹம் அளிப்பேன்.

ஸ்ரீ பகவான்

கல்கியின் அருளை

கல்கியின் அருளை கருத்தினில் வைத்து
கவலை எல்லாம் மறப்போம்
காலையும் மாலையும் அவரடி தொழுது
வேண்டியதைப் பெறுவோம். (கல்கியின் அருளை)

நேமம் வந்து அவரடி தொழுது
நியமங்களை அறிவோம்
நேர்த்தியான அவர் மகிமை யாவும்
குரு வருளாலே அறிவோம்
அவரை எங்கும் நேரில் காணும்
சிரத்தினையும் பெறுவோம் (2)
ஆவிர்பாவம் அடைந்திடும் ரகசிய
இலக்கினையும் அறிவோம் (2)
(கல்கியின் அருளை)

மச்ச, கூர்ம, வராகமுமாய் வந்த
மூர்த்தமும் அவர் அல்லவா
வாமன, நரசிம்ம, பரசுராமன், பல
வடிவங்கள் உனதல்லவா
ராம, பலராம, கிருஷ்ணலாவண்ய
மூர்த்தமும் அவர் அல்லவா (2)
கலியுகம் தன்னில் கல்கியாய் வந்த
கருணையை என்ன சொல்ல (2)
(கல்கியின் அருளை)

இயேசு கிறிஸ்து சொன்ன பரமபிதாவும்
இவர் என்றே உணர்ந்தோம்
நபிகள் நாயகம் நபின்ற அல்லாவும்
இவர் எனவே அறிந்தோம்
நானிலம் எங்கும்இவர் உரு என்றே
பிறிதில்லை எனக் காண்போம் (2)
பாபநாசகன் பரமதயாளன்
கல்கி எனப் பணிந்தோம் (கல்கியின் அருளை)

இதயத்தினுள்ளே நீ வர வேண்டும்

இதயத்தினுள்ளே நீ வர வேண்டும்
ஸ்ரீ ஸ்ரீ கல்கி அவதாரா
இருப்பது எல்லாம் நீ மட்டும் தானே
இகமும் பரமும் வேறா?

கர்மத்தின் கடனாய்க் கோடி ஜன்மங்கள்
கடந்ததே எந்தன் தேவா
காருண்யா உன்னைக் கண்ட உடனே
ஜீவமோட்சமே தேவா

கல்கியாய் வந்தாய் கலியினை மாய்த்தாய்
சத்தியம் உணர்த்தும் தேவா
மாதவா உந்தன் மகிமையினாலே
மடிந்ததே துன்பம் தேவா

உயிருக்குள் உயிராய் அணுவுக்குள் அணுவாய்
உறையும் எந்தன் தேவா
உன்னுடன் கலக்க மன்னிக்கும் பதத்தை
அருளாய் எனக்குத் தருவாய்

என்னுள் நீயும் உன்னுள் நானும்
இரண்டறக் கலப்போம் தேவா
உண்மையை உணர உள்ளம் தெளிய
உயிரே என்னுள் வாராய். (இதயத்தினுள்ளே)

"நான் இருப்பதை நீங்கள் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது நீங்கள் என்னுடன் தனிப்பட்ட முறையில், புனித உறவு வைத்துக் கொள்ளவேண்டும். இதுவே முக்தியாகும்."

ஸ்ரீ பகவான்

அம்மா அருள் புரி

அம்மா அருள்புரி பத்மாவதி
ஆதி தேவியே பத்மாவதி (அம்மா)

அன்னை உனதடி சரணம் அடைந்தோம்
ஆதரிப்பாய் என்று நம்பி வந்தோம்
அபயக் கரங்களால் அணைத்திடுவாய்
அடைக்கலம் தந்தே ஆதரிப்பாய்.... (அம்மா)

தஞ்சை தரணியில் காமாட்சி
தலை மதுரையிலே மீனாட்சி
நேமத்தில் உந்தன் தரிசனம் காண
நாங்களும் ஓடியே வந்தோமே.... (அம்மா)

பக்த ஜனங்கள் அனைவரும் துதித்திட
நல்வழி காட்டி அருள் புரிவாய்
தர்மம் உலகில் தழைத்திடவே
பத்மாவதியாய் காட்சி தந்தாய்... (அம்மா)

அன்னை பத்மாவதி ஆலயத்தில்
பக்தர்கள் பரவச ஆனந்தம்
அனுதினம் பாடிடும் குரல் கேட்டு
அக்கணம் கடைக்கண் பார்த்திடுவாய் (அம்மா)

எங்கள் குறைகளைப் போக்கிடவே
எங்கிருந்தாலும் காத்திடவே
கரைந்தே அழைத்தோம் வந்திடுவாய்
கரங்கள் நீட்டியே அணைத்திடுவாய் (அம்மா)

மலரினும் மெல்லிய

மலரினும் மெல்லிய மனதினை கொண்டாய்;
மறுபடி புவியில் கல்கியாய் வந்தாய்!
உலகினை மாற்றவே சபதம் கொண்டாய்;
உயிர்களை காக்கவே உடலோடு வந்தாய்!

(மலரினும்)

இலகுவாய் இதயத்தில் வருவேன் இங்கே;
இன்றே என்னை நாடுங்கள் என்றாய்!
தலைமுறை தலைமுறை யாய்தொழும் தெய்வம்;
தரணியில் நானே, ஒன்றே என்றாய்!

(மலரினும்)

யாவரின் மனதிலும் யானே உள்ளேன்;
யாரையும் புண்படச் செய்தல் வேண்டாம்!
பாவங்கள் போக்கிட பாதைகள் காட்டி
பகவத் தருமத்தை பரிசாய் தந்தாய்!

(மலரினும்)

பூவினும் மெல்லிய புன்னகை பூத்து
பாகாய் நெஞ்சினை உருக்கிடும் தேவா
நாவினில் நின்பெயர் இனித்திடும் சுவையை
நானறிந்தேனே நன்றி பகவான்!

(மலரினும்)

வாழ்க்கையில் அனைத்து சம்பவங்களும் தெய்விகமானவை, புனிதமானவை. அவை ஓர் தெய்வீக கோட்பாட்டுக்கு இணங்க செயல்பட்டு வருகின்றன.

ஸ்ரீ பகவான்

என்ன கருணை

என்ன கருணை என்மேலே உனக்கு கல்கி
ஓம் பகவான் கல்கி பகவான் (2) (என்ன)

அனுதினமும் அனுஷணமும் கண்ணின் மணிபோல வந்து
கருணையோடு என்னை நீயும் காப்பாற்றினாயே (என்ன)

பகலெல்லாம் பணி செய்து
அலுத்து சலித்து வந்த போது
புன்முறுவல் காட்டி என்னை மயக்கினாயே..... (என்ன)

நடுராத்திரி நேரத்திலே
நடுஜாம வேளையிலே
நான் இருக்கேன் என்று சொல்லி
தோளைத் தட்டினாயே..... (என்ன)

மலர்கள் பறித்து மாலையிட்டால்
முள்ளில் குத்திக் கொள்வேன் என
மலரே வேண்டாம் என்
அன்பு மட்டும் போதும் என்றாய் (என்ன)

என் கண்ணில் தூசு பட்டால்
உன் கண்ணில் நீர் சுரக்கும்
நானென்றால் உனக்கு என்ன
அன்பு கல்கி (என்ன)

கஷ்ட மென்று வந்தபோது
கண்ணீரைத் துடைத்துவிட்டு
கை இரண்டால் சேர்த்து
என்னை அணைத்துக் கொள்கிறாயே (என்ன)

சச்சிதானந்த சாகரா

சச்சிதானந்த சாகரா, பரமானந்த சாகரா
சத்தியலோக வாசனே கல்கி நாராயணா
சத்தியலோக வாசனே கல்கி நாராயணா
அம்மாவுடன் வந்தாயே தர்ஷனமும் தந்தாயே
ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ..... (சச்சிதானந்த)

இராமனாய் வருவாய் என்று சபரிபோல் காத்திருந்தோம்
கிருஷ்ணனாய் வருவாய் என்று ராதைபோல் காத்திருந்தோம்
தாஸாராகக் காத்திருந்தோம் கல்கியாக வருவாய் என்று
தாஸானந்த சாகரா ஓ ஓ ஓ பிரம்மானந்த சாகரா ஓ ஓ ஓ ஓ
(சச்சிதானந்த)

தேவகானம் கேட்டுக் கேட்டுச் சலிப்பு வந்து விட்டதோ
அம்மா அம்மா என்றழைக்க; ஆசை வந்து விட்டதோ
பக்தரோடு விளையாட நத்தத்தில் பிறந்தாயோ
பக்தானந்த சாகரா, ஓ ஓ ஓ பிரம்மானந்த சாகரா ஓ ஓ ஓ ஓ
(சச்சிதானந்த)

பாலூட்டக் குடித்துவிட்டுத் தாலாட்டுக் கேட்டுக் கொண்டே
காலாட்டித் தூங்கினாயோ
பத்மாவதி ஹிருதயீஸ்வரா பரப்பிரம்ம பரமேஸ்வரா
ஓ ஓ ஓ ஓ
(சச்சிதானந்த)

சத்தியங்கள்

வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சியாவும் ஓர் சோதனையே. அதிலிருந்து நாம் வெளிவருவதற்கான திறமையும் நமக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ பகவான்

என்ன சுவையோ?

ஓம் ப்ரணவாய நமஹ
ஓம் சத்யாய நமஹ
ஓம் சுஷ்மாய நமஹ
ஓம் ஸ்ரீகல்கி நமஹ

என்ன சுவையோ! பகவான் என்ன சுவையோ!!
நின் நாமம் சொல்லச் சொல்ல என்ன சுவையோ!!! (என்ன)

முக்கனியில் சர்க்கரையில் இனிமை இல்லையே!
முடிவாக நின்றன் நாமம் திகட்டவில்லையே!
பக்கத்தில் வந்து என்னை ஆதரிப்பாயே - நின்
பொற்பாத தரிசனத்தை தந்தருள்வாயே! (என்ன)

தேமதுரம் நின்றன் நாமம் நிகர் அதற்கே;
தோன்றவில்லை வேறு ஏதும் பகருதற்கே!
நேமத்தில் வந்து நின்னைக் காண்பதற்கே;
நாடிவந்தேன் எந்தன் கலி மடிவதற்கே! (என்ன)

பகவான்நின் பிரேமையில் நான் திளைக்க வேண்டும்!
பக்தியிலே மெய்யுருகி போற்ற வேண்டும்!
அகத்தினிலே அன்பென்றும் ஒளிர வேண்டும் (என்)
அறிவோடு ஐக்கியம் நான் ஆகவேண்டும் (பரம)
(என்ன)

ஐம்புலன்கள் நின்னை என்றும் உணர வேண்டும்;
ஐயனே நின் தரிசனத்தைக் காண வேண்டும்!
பக்தனாகி உந்தன் புகழைப் பாட வேண்டும்!
பகவான் உன் காவியத்தை படைக்க வேண்டும்!
(என்ன)

சந்தனத்தில் மணமெடுத்து

சந்தனத்தில் மணமெடுத்து, சங்கில் நல்ல ஒலி எடுத்து
வந்தணைக்கும் தெய்வமே கல்கியே

வந்தனங்கள் செய்யும் எந்தன்
வாழ்வில் நல்ல வளம் பெருக்கி (2)
தந்தருள்வாய் ஜீவனுக்கு பக்தியே.....
தந்தருள்வாய் ஜீவனுக்கு முக்தியே (2) (சந்தனத்தில்)

வண்ண வண்ண மலரெடுத்து வாசமல்லி சரம் தொடுத்து
வந்து உந்தன் அடிதொழுதேன் கல்கியே
அண்ட பகிரண்டங்களும் அரசாளும் ஆண்டவனே
கண்டதில்லை உன்னைப்போல தெய்வமே.....
காத்தருள வேண்டுமய்யா கல்கியே (சந்தனத்தில்)

கத்தும் குயில் ஓசையெழும் காலை இளம் வேளையிலே
கண் விழித்து நான் தொழுதேன் கல்கியே
பத்து அவதாரத்தையும் பக்குவமாய் ஆக்கிவைத்தாய்
பக்தபராதீனனான கல்கியே
காத்தருள வேண்டுமய்யா கல்கியே (சந்தனத்தில்)

ஒன்று பரம்பொருளாம் என்று ஓயாமல் உரைத்து நின்றாய் (2)
இன்று வந்து எனை அழைத்தாய் கல்கியே
கன்று தேடும் பசுவினைப் போல காலடியில் நின்றிருப்பேன்
கண்ணெடுத்து பாருமையா கல்கியே
கலி தீர்க்கவேண்டுமய்யா கல்கியே. (சந்தனத்தில்)

ஈஸ்வரா மஹேஸ்வரா

ஈஸ்வரா மஹேஸ்வரா
கல்கி பகவான் ஈஸ்வரா (ஈஸ்வரா)

லாஹி லாஹி இல்லல்லா
இறைவன் அல்லா பகவானே (ஈஸ்வரா)

மேரிமாதா மைந்தனே
எந்தன் பகவான் இயேசுவே (ஈஸ்வரா)

ஹரியும் ஹரனும் பிரம்மனும்
பகவான் உனக்குள் அடக்கமே (ஈஸ்வரா)

பாவத்தை மன்னிக்கும் பரம்பொருளே
பரிசுத்த ஆவி பரமபிதாவே (ஈஸ்வரா)

காண்பதற்கு ஓடி வந்தோம்
பகவான் உன்னை நாடி வந்தோம் (ஈஸ்வரா)

உந்தன் திருமுகம் காண்பதற்கு
எனக்கோர் கோடி கண்கள் வேண்டும் (ஈஸ்வரா)

உந்தன் திருவடி சேர்வதற்கு
கோடி பிறவிகள் எடுத்து வந்தோம் (ஈஸ்வரா)

ஸ்வாமியே பகவானே

ஸ்வாமியே பகவானே ஓம் ஸ்ரீ ஸ்ரீ பகவானே
அனுதினம் பூஜை செய்வோம்
உமக்கு அனந்தகோடி நமஸ்காரம்] Chorus

அன்புள்ள அரசனே! பகவான் அன்பைத் தருபவனே
அன்பை கேட்பவனே! பகவான் அன்புள்ள அன்பனவனே
(ஸ்வாமியே)

பக்தோத்தாரகனே! பகவான் பக்த ரக்ஷகனே
பக்த நாயகனே! பகவான் பக்த தாசகனே (ஸ்வாமியே)

ஆனந்த ஜோதியனே! பகவான் ஆனந்த ஸ்வரூபனே
ஆனந்த அவதாரமே! பகவான் ஆனந்தம் ஆனந்தமே
(ஸ்வாமியே)

பரம ஞானியனே! பகவான் பரம பாவனனே
பரோபகாரகனே! பகவான் பரம பூஜியனே (ஸ்வாமியே)

ஜகதோ தாரகனே! பகவான் ஜகாதா ஈஸ்வரனே
ஜகாதா ரக்ஷகனே! பகவான் ஜகாதா ஜனகனனே (ஸ்வாமியே)

அகிலாண்ட தேவகனே! பகவான் அனாத ரக்ஷகனே
அனைவரைக் காப்பவனே! பகவான் ஆனந்த ரூபனனே
(ஸ்வாமியே)

கலியுக தேவகனே! பகவான் கருணாமூர்த்தியனே
கஷ்டங்களை தீர்ப்பவனே! பகவான் காருண்ய தேவனனே
(ஸ்வாமியே)

ப்ரம்மா அவதாரமே! பகவான் விஷ்ணு அவதாரமே
சிவாய அவதாரமே! பகவான் சம்பூர்ண அவதாரமே (ஸ்வாமியே)

தரிசனம் அளிப்பவனே! பகவான் இதயத்துள் இருப்பவனே
இன்பத்தைத் தருபவனே! பகவான் இணையில்லா தெய்வமவனே
(ஸ்வாமியே)

அல்லா அவதாரமே! பகவான் கிறிஸ்து அவதாரமே
கல்கி அவதாரமே! பகவான் சம்பூர்ண அவதாரமே. (ஸ்வாமியே)

ஒரு நாளும் மறவாத உள்ளம் வேண்டும்

ஒரு நாளும் மறவாத உள்ளம் வேண்டும்
ஓயாமல் உன் பெயரைச் சொல்ல வேண்டும்
கருநாள் முதலாய் என்னைக் காப்பதும் நீயே
கண்டு கொண்டேன் கல்கியே கடவுள் நீயே

(ஒரு நாளும்)

மனம் போனபடி எல்லாம் மதிகெட்டு அலைந்தேன்
மானிடனாய் பிறந்ததுதான் ஏன் என்று நினைத்தேன்
தினம் உன்தன் நாமம் சொல்லி தொழுதிட மறந்தேன்
திக்கில்லாமலே உன்தன் திருவடி அடைந்தேன்

(ஒரு நாளும்)

சிந்தனையால் கோவில் ஒன்று கட்டி வைத்தேன்
சித்திரமாய் உன் அழகை எழுதியும் வைத்தேன்
சந்ததமும் உந்தன் புகழ்பாடி வருகிறேன்
சத்திய யுகம் வாழும் உன்னை நாடிவருகிறேன்

(ஒரு நாளும்)

என்னால் முடியாதது எதுவும் இல்லை
என்றிருந்தேன் எதுவுமே நடக்கவும் இல்லை
உன்னால் முடியாதது ஒன்றும் இல்லை - இதை
உணர வைத்தாய் பகவானே நீதான் எல்லை.

(ஒரு நாளும்)

அம்மா வா அம்மா

அம்மா வா அம்மா எந்தன் தாயே வா அம்மா
அம்மா வா அம்மா எந்தன் தேவி வா அம்மா

ஈரேழுலோகத்தின் ஆண்டவன் பகவான் சக்தியே வா அம்மா
உந்தன் அருளால் எங்களை இரட்சிக்கும் தாயே வா அம்மா
அம்மா..... (அம்மா வா)

அருள் தரும் ஈஸ்வரி சக்தியின் அம்சம் நீ
அம்மா பவானி வா அம்மா
அம்மா பவானி லக்ஷ்மி பவானி துர்க்கா பவானி வா அம்மா
அம்மா..... (அம்மா வா)

காஞ்சி காமாட்சி மதுரை மீனாட்சி காசி விசாலாட்சி வா அம்மா
கருணை அருளாலே காத்திடுவாயே கவலைகள் தீர்த்திட வா
அம்மா
அம்மா..... (அம்மா வா)

சங்கடங்கள் போக்கி சுகம் அளிப்பாயே சாரதாதேவியே வா
அம்மா
சிரசினை அடக்க சித்தத்தை திருத்த சாந்தஸ்வருபினி வா அம்மா
அம்மா..... (அம்மா வா)

ஜெபங்களை அறியேன் தவங்களை அறியேன் கருணை
கொண்டு நீ வா அம்மா
மூவுலகும் போற்றும் முனிவரும் துதித்திட முக்தியை
அளித்திட வா அம்மா
அம்மா..... (அம்மா வா)

சகல சௌபாக்கியங்கள் அருளிடும் தேவி நீ சந்தானலக்ஷ்மி வா
அம்மா
அகிலாண்டேஸ்வரி ஆனந்த ரூபிணி அகமகிழ்ந்திடவே வா
அம்மா
அம்மா..... (அம்மா வா)

உமையவள் நீயே உத்தமி நீயே உள்ளம் நிறைந்திட வா அம்மா
உலகின் கலியை களைந்திட வந்த கல்கியின் தேவியே வா
அம்மா
அம்மா..... (அம்மா வா)

சத்திய லோக வாசினி சின்மய ரூபிணி பகவதி தாயே வா அம்மா
சரண் என்று வந்தால் அபயம் அளித்திடும் அகிலாண்டேஸ்வரி
வா அம்மா
அம்மா..... (அம்மா வா)

ஈரேழுலோகத்தின் ஆண்டவன் பகவான் சக்தியே வா அம்மா
உந்தன் அருளால் எங்களை இரட்சிக்கும் தாயே வா அம்மா
அம்மா..... (அம்மா வா)

ஒரு முறை நினைத்தால் போதும்

ஒரு முறை நினைத்தால் போதும் - பகவான்
ஓடி வருவார் பாரும் (2)
திருமகன் பாதம் பணிந்தால் - அவர்
திவ்ய தரிசனம் கிடைக்கும் (2)
(ஒரு முறை நினைத்தால்)

கண்கள் இருந்தும் என்ன பயன் - உன்னை
காணும் பாக்கியம் இல்லை என்றால் (2)
வெண்பரிமீது வந்தவரே - எங்கள்
வேதனை தீர்ந்திடச் செய்திடையா (2)
(ஒரு முறை நினைத்தால்)

இத்தனை காலம் உனை மறந்தேன் - நானும்
எத்தனை பாவங்கள் செய்தேனோ (2)
அத்தனை வினையையும் தீர்த்தாயே - என்னை
சத்தியலோகத்தில் சேர்த்தாயே (2)
(ஒரு முறை நினைத்தால்)

தீனச்சரண்யா தீனச்சரண்யா

தீனச்சரண்யா தீனச்சரண்யா 2

இதயத்தின் கதவுகள் திறந்து இன்னிசை பலபல மொழிந்து - எங்கள் 2

உனையே நினைத்திட உன்புகழ் பாடிட
அருள்மழை பொழிவாய் தேவா 2
வா வா பகவான் வா வா பகவான் 2

தீனச்சரண்யா தீனச்சரண்யா 2

பல காலம் நான் காத்திருந்தேன்
உன்முகம் காணவே ஏங்கி நின்றேன் 2
தாய் மனம் உருகும் சேய்மேல் கரையும் 2
வா வா அம்மா வாவா அம்மா 2

தீனச்சரண்யா தீனச்சரண்யா 2


வேறெவ்வரையும் அழைக்கவில்லை
வேறெவ்வரையும் நினைக்கவில்லை 2

அன்பின் உருவாய் கருணைக்கடலாய் 2
வா வா பகவான் வா வா அம்மா 2

தீனச்சரண்யா தீனச்சரண்யா 2

இதயத்தின் கதவுகள் திறந்து இன்னிசை பல பல மொழிந்து - எங்கள் 2

உனையே நினைத்திட உன் புகழ் பாடிட 2
அருள் மழை பொழிவாய் தேவா 2
வா வா பகவான் வா வா பகவான் 2
வா வா அம்மா வா வா அம்மா 2





கண் பெற்ற பயனை நாங்கள் அடையவேண்டும்

கண் பெற்ற பயனை நாங்கள் அடையவேண்டும் - இந்த
மண்ணில் உந்தன் அவதாரம் காணவேண்டும்.
கண்டு நாங்கள் உன்னோடு வாழ வேண்டும்.
உந்தன் லீலைகளில் எங்களுக்கும் பங்கு வேண்டும். (கண்)

நேமத்தில் நீ இருக்கும் காட்சி வேண்டும் - எங்கள்
ஷேமத்தில் பங்கு கொண்டு காக்க வேண்டும்.
ஹோமத்தின் பலன் வேண்டும் கல்கி பகவான்
துன்பங்கள் நீக்க வேண்டும், கல்கி பகவான் (கண்)

அதிசயங்கள் ஆயிரம் நடக்க வேண்டும்.
அதில் உந்தன் திருமேலும் விளங்க வேண்டும்.
கதி நீயாய் எங்களுக்கு ஆகவேண்டும்.
விதியாவும் விளக்கி வைத்து ஆளவேண்டும். (கண்)

ஆவிர்பாவம் அடையும் வழியை நீ சொல்ல வேண்டும்.
சேவிக்கும் எங்களுக்கு என்றும் உன் உறவு வேண்டும்.
சேவகனாய் உனக்கு நாங்கள் ஆக வேண்டும். (கண்)

வருவாய் வருவாய்

வருவாய் வருவாய் வருவாய் அம்மா
திருவே உருவாய் வருவாய் அம்மா

இருளை நீக்கிட வருவாய் அம்மா உந்தன்
அருளைப் பொழிந்திடு தாயே அம்மா (வருவாய்)

கல்யாணி கருமாரி காமாட்சி நீயே
மகாலக்ஷ்மி மாதங்கி மீனாட்சி நீயே
வரலக்ஷ்மி வாராகி விசாலாட்சி நீயே
உலகாளும் மாயே பத்மாவதி தாயே.....
அம்மா .....அம்மா.....அம்மா.....அம்மா..... வருவாய்

ஜெய் பகவான் ஜெய அம்மா பகவான்

ஜெய் பகவான் ஜெய அம்மா பகவான்
நித்தம் உன்னை காண எனக்கருள வேண்டும்
உந்தன் கமல பொற்பாதம் நான் அடைய வேண்டும்
(ஜெய்பகவான்)

அன்பே உருவான அழகிய புருஷா
அருள் மழை பொழிகின்ற ஆத்ம பிரகாஷா

இவ்வுலகில் வந்த இன்ப மகேசா
ஓம் சச்சிதானந்தா பரப்பிரம்மா

இவ்வுலகில் வந்த இன்ப மகேசா
ஆனந்த அதிசய அற்புத தேவா (5)
(ஜெய் பகவான்)

திமித திமித திமி திமி கிடகிட தோம் தோம் தோம்
தரி கிட தரி கிட கிட தோம்

தனம் கல்வி தரும் சத்யலோக வாசா ....
மன - சாந்தி முக்தி தரும் மோட்ஷ பிரகாஷா ....
நித்ய நிரஞ்சன நித்திய கணேஷா ....

நித்திய நிரஞ்சன நித்திய கணேஷா
ஈசா; சபேசா; சர்வேசா..... (ஜெய் பகவான்)

ஜனனி

ஜனனி ஜனனி ஜெகம் நீ அகம் நீ.....
ஜெகத்காரணி நீ பரிபூரணி நீ
ஜனனி ஜனனி ஜெகம் நீ அகம் நீ
ஜனனி ஜனனி ஜனனி ஜனனி

ஒரு மான் மழுவும் சிறு பூந்திரையும்
சடை வார்குழலும் விடை வா கனமும்
கொண்ட நாயகனின் குளிர் தேகத்திலே
நின்ற நாயகியே இடப் பாகத்திலே

ஜெகன் மோகினி நீ சிம்ம வாகினிநீ
ஜெகன் மோகினி நீ சிம்மவாகினி நீ
ஜெகன் மோகினி நீ சிம்ம வாகினி நீ
ஜனனி ஜனனி ஜெகம் நீ அகம் நீ
ஜெகத்காரணி நீ பரிபூரணி நீ

சதுர் வேதங்களும் பஞ்சபூதங்களும்
சன்மார்க்கங்களும் சப்த தீர்த்தங்களும்
அஷ்ட யோகங்களும் நவயாகங்களும்
தொழும் பூங்கழலே மலை மாமகளே

அலை மாமகள் நீ கலை மாமகள் நீ
அலை மாமகள் நீ கலை மாமகள் நீ
அலை மா....மகள் நீ கலை மாமகள் நீ
ஜனனி ஜனனி ஜெகம் நீ அகம் நீ
ஜெகத் காரணி நீ பரிபூரணி நீ

அடித்தாலும் அணைத்தாலும் நீயே கதி

அடித்தாலும் அணைத்தாலும் நீயே கதி என்
பகவான் நான் உன் சரணாகதி

குணக்குன்றே நீ தொட்டால் மாறும் விதி உன்
குளிர்ந்த விழி வீச்சை நெஞ்சில் பதி (அடித்)

ஓங்கார ரீங்காரம் உலகின் சுருதி
ஓயாமல் அருள் பொங்கும் கருணை நதி

நீயின்றி யாரிங்கே எந்தன் கதி
நீ ஒன்றே நான் தேடும் வற்றா நதி (அடித்)

தாயும் நீ யெனக்கு தந்தை நீ எனக்கு
தவித்து வாடினேனே
காதும் நீ யெனக்கு கண்கள் நீயெனக்கு
நினைத்து ஏங்கினேனே

நிஜத்தை தேடினேனே உன் நினைவில் வாடினேனே
என் மனதில் பகவான் நிலை தர அருள் வாயே.....

நீங்கள் என்னுடைய சத்-தோடு ஐக்கியப்பட விரும்பலாம்; அல்லது என்னுடைய சித்-தோடு ஐக்கியப்பட விரும்பலாம்; அல்லது என்னுடைய ஆனந்தத்தோடு ஐக்கியப்பட விரும்பலாம். உங்களுக்கு இவற்றுள் எது இயல்பாக வருகிறதோ அதனை நாடவேண்டும்.

உங்களது அறியாமையிலிருந்து நீங்கள் விடுவிக்கப்பட்டால், எனது சத்-துடன் ஐக்கியமாவீர்கள்.

உங்களது பந்தங்களிலிருந்து நீங்கள் விடுவிக்கப்பட்டால், எனது சித்-துடன் ஐக்கியமாவீர்கள்.

உங்களது பாவ இயல்பிலிருந்து நீங்கள் விடுவிக்கப்பட்டால், எனது ஆனந்தத்துடன் ஐக்கியமாவீர்கள்.

உங்களுடைய வழிகளால் என்னை நீங்கள் அடையமுடியாது. என்னுடைய அருளின் மூலமே நீங்கள் என்னை அடையலாம்.

- ஸ்ரீ பகவான்

ஸ்ரீமயி சின்மயி கருணாமயி

ஸ்ரீமயி சின்மயி கருணாமயி (2)
பகவான் சக்தி அம்மா பத்மாவதி (2)

கருணாதரங்கிணி கமலாமணி (2)
சைலசு நந்தினி ஜெகநந்தினி (2)

கைவல்யதாயினி கார்த்யாயினி - அம்மா
கைவல்யதாயினி கார்த்யாயினி (ஸ்ரீமயி)

வித்யா பிரதாயினி ஹேபாரதி (2)

விஷ்ணு வினோதினி லக்ஷ்மி சதி (2)
ஹிமசைல நந்தினி ஹேபாரதி - அம்மா
ஹிமசைல நந்தினி ஹேபாரதி (ஸ்ரீமயி)

லலிதா பவானி பரமேஸ்வரி (2)
சங்கடஹாரணி சர்வேஸ்வரி (2)
அபயங்கரி திரிபுவனசுந்தரி - அம்மா (ஸ்ரீமயி)

"அனேக ஜன்ம சம்ப்ராப்த
கர்மபந்தன விதா ஹினே
ஆத்ம ஞானாக்னி தானேன
தஸ்மை ஸ்ரீ கல்கி பகவதே நமஹ!"

"பல ஜன்மங்களாக சேர்த்துக்கொண்ட
கர்ம பந்தங்களிலிருந்து விடுவித்து,
ஆத்ம ஞானம் பெறுவதற்கான தாகத்தை
அளிக்க வேண்டி ஸ்ரீ கல்கியை
நமஸ்கரிக்கிறேன்."

அம்மா பகவதியே பத்மாவதியே ஆதிசக்தியே

அம்மா பகவதியே பத்மாவதியே ஆதிசக்தியே
தேவதேவியே.... பூவே பூங்காற்றே முக்திதரும் சக்தியும் நீயே...

பகவதியே பகவதியே பத்மாவதியே (2)

அன்ன பூரணி அன்புதாரணி
அண்டும் உயிருக்கு அருளும் பொருளும் நீ ....
கல்கி பத்தினி லக்ஷ்மி தேவி
பக்தர் நெஞ்சிலே பதியும் வேதம் நீ

பகவதியே பகவதியே பத்மாவதியே (2)

சர்வ சக்தி நீ விஷ்வரூபிணி
கர்வம் போக்கிடும் காளி தேவி நீ

கனக மாமணி காக்கும் தாயும் நீ
கல்கி சக்தியின் மூல காரணி

பகவதியே பகவதியே பத்மாவதியே (2)

சின்னச் சின்ன பதம்

சின்னச் சின்ன பதம் வைத்து கண்ணா நீ வா வா
மணி வண்ணா நீ வா வா

மல்லிகை முல்லை மலராலே
அர்ச்சனை செய்வோம் வா வா
மாதவனே மாதவனே கேசவனே கேசவனே
யாதவனே நீ வா வா யாதவனே நீ வா வா

கலியை வெல்ல வந்தவனே அடியார்க்கருளிய
காரழகா மணிவண்ணா கண்ணா நீ வா வா

கண்ணில் தெரியும் காட்சி எல்லாம்
கமலக் கண்ணா உன் தோற்றம்
காலமெல்லாம் உன் அருளை
வேண்டுகிறேன் நீ வா வா (சின்ன)

கையேந்தும் பக்தர்

கையேந்தும் பக்தர்களைக் காத்திடவே
இரு கை நீட்டி அழைக்கும் தெய்வமம்மா

பொய்யான வாழ்க்கை இது போதுமென்று
புகலிடம் உந்தன் திரு பாதமென்று (கையேந்தும்)

வரும் பொழுதில் கொண்டு வந்ததென்ன
வாழ்வு முடிந்த பின்னே வருவதும் என்ன

பரம் பொருள் பரஞ்ஜோதி பாதாரவிந்தமே
பற்றிப் பிடி நெஞ்சை ஆதாரமாக்குமே (கையேந்தும்)

எத்தனை காலம் பித்தனைப் போலே
நித்தமும் அலைவாய் நிம்மதி தேடி

சத்திய யுகராஜன் சன்னிதி வருவாய்
சகல நலன்களும் நிச்சயம் பெறுவாய் (கையேந்தும்)

பொய்யான வாழ்க்கை இது போதுமென்று
புகலிடம் உந்தன் திருப்பாதமென்று (கையேந்தும்)

ஸ்ரீ பகவான் முராரி முராரி பகவான்

ஸ்ரீ பகவான் முராரே முராரி பகவான்
ஹே கருணா ஸ்வரூபா ஸ்வரூப பகவான்

சரணு பகவான் கருநின்சு பகவான்
ஹே சத்யலோக வாசி நீவாசி பகவான்

ஹே அந்தராத்ம ஜோதிநீ ஜோதி பகவான்
ஜோதி பகவான் ஜோதிர் லிங்க பகவான்

ஹே பிரேமஸ்வரூபா ஸ்வரூப பகவான்
ஹே சுந்தரரூபா ஆனந்த பகவான்

ஆனந்த பகவான் பிரமானந்த பகவான் (2)

வந்தே வந்தியம்

வந்தே வந்தியம் சதானந்தம்
வாசு தேவம் நிரஞ்சனம்
வந்தே வந்தே வந்தே வந்தே

சாந்தாகாரம் புஜகசயனம்
பத்ம நாபம் சுரேஷம் ஆ ....
விஷ்வா தாரம் கஹன சதுர்ஷம்
மேக வர்ணம் சுபாங்கம் ஆ ... (வந்தே)

லக்ஷ்மி காந்தம் கமல நயனம்
யோகி ஹிருத்தியான ஹம்யம் ஆ ...
வந்தே விஷ்ணும் பவபயஹரம்
சர்வ லோகைஹ நாதம் ஆ ... (வந்தே)

நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா
நாராயணா நமோ நாராயணா

சத்திய லோக பகவான்

சத்தியலோக பகவான் சுந்தர பகவான்
அன்புடனருளும் தரிசனமே

இடமதில் அம்மா பகவதியே
உடனிருந்தருளும் தரிசனமே

ஆஹா அருள் நிறை அற்புதமே
எங்கள் சத்தியலோ கமே (சத்திய)

பிறவியின் பிணியினைப் போக்கி விடும்
பெருமருந்தாகிய தரிசனமே
உறவென நம்முடன் உறையும் பகவான்
உதய அருணனாய் இதயத்திலே
உறவென நம்முடன் உறையும் பகவான்
அந்தர் யாமினாய் இதயத்திலே (சத்திய)

பக்தர்கள் தாசர்கள் சூழ அமர்ந்திடும்
அம்மா பகவானின் தரிசனமே
பக்தியை வளர்க்கும் தரிசனமே
ஜீவன்முக்தியை அருளும் தரிசனமே
இதயத்தில் நாயகனாய் என்னுள்
சுடர்விடும் பகவானே - என் (2)
புண்ணிய பூமியே திருநேமம்
நித்திய தரிசனம் அற்புதமே (3) (சத்திய)

நான் எங்கு அழைத்தாலும்

நான் எங்கு அழைத்தாலும் நீ அங்கு வர வேண்டும்
நான் எங்கு இருந்தாலும் உன் அருள் வேண்டும்

பாமரர்க்கும் காட்சி தரும் பரம தயாளா
பாவி நானும் நினைத்து விட்டேன் கல்கி பகவான் (நான்)

நத்தத்தில் பிறந்தாய் நேமத்தில் வளர்ந்தாய்
சற்சங்கம் பலதோன்ற அருள் செய்தாய்

ஒரு சமயம் பரப்பிரம்மம் மறு சமயம் பரமாத்மா
திரு அவதாரம் கண்ட கல்கி பகவான் (நான்)

சற்சங்க பஜனைகளில் சடுதியிலே எனை மறந்தேன்
சற்சங்க நடனங்களில் விதவிதமாய் ஆடி நின்றேன்

எத்திக்கும் நீ நிறைந்தாய் சத்திய நாதா போற்றி
பக்திக்கு அரும் பொருளே கல்கியே போற்றி (நான்)

நோயுற்ற வேளைதனில் மருந்தின்றி மாற்றிவைப்பாய்
சீரற்ற வாழ்வு தன்னை மாற்றின்றி வழங்கிடுவாய்

பாய்ந்து வரும் வெண்குதிரை மீதினிலே பளிச்சிடுவாய்
வேய்ந்து வரும் உடைவாளும் மின்னிடவே தோன்றிடுவாய்.
(நான்)

அம்மா தாயே

அம்மா தாயே பகவதியே தாயே உன்
பாதமே கதி அம்மா - அம்மா
பத்மாவதி அம்மா அம்மா
பத்மாவதி அம்மா (அம்மா தாயே)

எத்தனையோ ஜென்மம் எடுத்தோம் - தாயே உன்
பாதத்தைக் கண்டு பிடித்தோம் - அம்மா
கெட்டியாகக் கட்டிப் பிடித்தோம் - இனிமேல்
விட்டுப் போக மாட்டோம் - அம்மா
// அம்மா பத்மாவதி அம்மா

சந்தனத்தில் பொட்டு வைத்தோம் - பாதத்தில்
குங்குமத்தில் பொட்டு வைத்தோம் - நெற்றியில்
நந்தவனம் ஆக்கி விட்டாய் - மனதை
பந்தாட வருவாயே // அம்மா பத்மாவதி அம்மா

மஞ்சளைப் பூசி விட்டோமே - பாதத்தில்
கொஞ்ச வேண்டும் அம்மன் நீயும் - என்னிடம்
சஞ்சலத்தை நீக்கி விட்டாய் - மனதில்
பஞ்சமில்லா வாழ்க்கை தந்தாய் // அம்மா பத்மாவதி அம்மா

பத்துப் பாட்டுப் பாடினோமே - எங்களுக்கு
முத்து மாலை வாங்கித் தருவாய் - தாயே
நத்தத்துக்குப் போக வேண்டுமே - அப்பன்
பிறந்த மண்ணில் புரள வேண்டுமே.
// அம்மா பத்மாவதி அம்மா

பித்தனத்தை போக்கி விட்டாய் - மனதில்
சத்ய தர்மா வேண்டுமென்றே - தாயே
பித்தலாட்டம் ஆடமாட்டோம் - தாயே
சத்ய தர்மம் கடைப்பிடிப்போம் // அம்மா பத்மாவதி அம்மா

முந்தானையில் தொங்கி வந்தோமே - தாயே
பந்த பாசம் தந்து விட்டாய் - உன்னோடு
பாதத்தை வைத்து விடுவாய் - தலையில்
ஆசை இதை தீர்க்க வேண்டுமே
// அம்மா பத்மாவதி அம்மா

பக்தியோடு காண வந்தோம் - தாயே உன்
நித்திய ரூப தரிசனத்தை - அம்மா
புன்னகை பூத்த முகத்தை - கண்டால்
துக்கம் எல்லாம் தூள் தூளாகுமே (அம்மா)

பந்த பாசம் உணர்த்தி விட்டாய் - தாயே உன்
பரம அன்பை தந்து விட்டாய் - அம்மா
இது ஒன்றே போதுமம்மா - உலகில்
உயிர் பெற்று வந்ததிற்கு (அம்மா)

அழகாக அமர்ந்து கொண்டு - தாயே நீ
அன்பாக சிரிக்கின்றாய் - அம்மா
கட்டிப் போட்டு விட்டாய் அம்மா - பரவசத்தில்
கஷ்டம் சொல்ல மறந்தோம் அம்மா (அம்மா)

ஆடவைத்து பாடவும் வைத்து - தாயே உன்
கருணையால் கவர்ந்து விட்டாய் - அம்மா
அருள் தந்து அரவணைத்தாய் - என்னை
ஆனந்தத்தில் ஆழ்த்தி விட்டாய் (அம்மா)

சத்திய லோகத்திற்கு

பிரணவரூபா..... பிராணநாதா...
உள்ளம் உருகி..... கண்ணீர் மல்கி கண்ணீர் மல்கி
கோதம் வழங்கி ....கதியென உருகி....
வேண்டுகிறோம்.... நீதான் வேண்டும்....

சத்திய லோகத்திற்கு நான் உன்னைத்தேடி வருவேன்
உனை பிரியாதிருக்கவே வரம் ஒன்று கேட்பேன்
மறவேனே எந்நாளும் உன் அன்பையே (2)
மறவேனே மறவேனே உன் ரூபமே - பகவான்
மறவேனே மறவேனே உன்ரூபமே (சத்திய)

அழகு மயில்கள் ஒன்று சேர்ந்து ஆடிநின்றன
குயில்கள் அங்கு ஒன்று கூடி பாடி நின்றன
வண்ண வண்ண மலர்கள் பல மலர்ந்து நின்றன (2)
கல்கியின் திருப்பாதத்திலே கலந்து நின்றன - பகவான்
கல்கியின் திருப்பாதத்திலே கலந்து நின்றன (மறவேனோ)

கடலைகள் தவழ்ந்து வந்து கல்கி என்றன
காற்று மூங்கில் குழலில் ஊதி கவிதை பாடின

சின்ன சின்ன மேகங்கள் கூடி நின்றன
நம் தந்தை அன்பினையே பொழிந்து நின்றன
பகவான் நம் தந்தை அன்பினையே பொழிந்து நின்றன
(மறவேனோ)

பத்மாவதி தாயே

பத்மாவதி தாயே அம்மா அம்மா ....
பத்மாவதி தாயே அம்மா - அம்மா
உன் அருள் தா என்றே தினம்
அடிமை நான் வேண்டுகின்றேன் (பத்மாவதி)

நலம் என்றும் நான் அடைய
உனையே நினைத்திருந்தேன்
கலி தீருமோ எந்தன் நிலைமாறுமோ - அம்மா
கலி தீருமோ எந்தன் நிலைமாறுமோ (பத்மாவதி)

ஆசை என்றும் பாசம் என்றும் அலை மோதுதே
இங்கு அறியாமை எனும் இருள் என்னை விட்டகலவே
நேசமுடன் வந்தெனக்கு நல்லவரம் தந்தருள்வாய்
அம்மா அம்மா அம்மா .....
உன்னை என்றும் என் மனம் சிதறவிடாமலே
(பத்மாவதி)

வாழ்வில் துன்பம் வந்ததாலே உன்னை நாடி வந்தேன்
வற்றாத அருளாலே வாழ்வில் இன்பம் பெற்றேன்
வந்தேனே வந்தேனே உன்னை காணவே - பகவான்
வாழ்வேனே வாழ்வேனே உனக்காகவே - பகவான்

பஜனை செய்வாய்

பஜனை செய்வாய் மனமே - தினமும்
பஜனை செய்வாய் மனமே
சச்சிதானந்த பரப்பிரம்மனை - நீ

கனவிலும் நினைவிலும் அனுதினமும் - அவனை(2)
பஜனை செய்வாய் மனமே - தினமும்
பஜனை செய்வாய் மனமே

ஆதியும் அவனே தான்
ஜோதியும் அவனே தான்
அன்புடனே எம்மை அரவணைக்கும் அவனை
பஜனை செய்வாய் மனமே

எனக்கென வந்தவனை என்னுள் இருப்பவனை
உண்மையின் ரூபனை உலகத்தின் ஜீவனை
பஜனை செய்வாய் மனமே - தினமும்
பஜனை செய்வாய் மனமே

சச்சிதானந்த பரப்பிரம்மனை - நீ
பஜனை செய்வாய் மனமே - தினமும்
பஜனை செய்வாய் மனமே
பஜனை செய்வாய் மனமே

நீயின்றி நானில்லை

நீ யின்றி நானில் தெய்வமே - எனக்கு
நீயின்றி யார்துணை தெய்வமே

தாயின்றி சேய் இல்லை தெய்வமே - இங்கு
நீயின்றி நானில்லை தெய்வமே (நீயின்றி)

என் இதயத்தில் குடி கொள்ள வரவேண்டுமே
உன்னை அநுதினமும் தொழுகின்ற வரம் வேண்டுமே

உன் அருளால் வாழ்கின்றேன் உன் பாதம் தொழுகின்றேன்
வாராயோ இங்கே வள்ளல் பெருமானே (2) (நீயின்றி)

எது கேட்டாலும் கொடுக்கின்ற என் தெய்வமே
கண் இமைபோல காக்கின்ற அருள் வெள்ளமே
உன் நினைவால் பித்தானேன் உள் மனதால் முத்தானேன்
ஆதாரம் நீயே ஸ்ரீ கல்கி பகவானே (2) (நீயின்றி)

வெற்றி கொடுக்கும் பகவான் நாமம்

வெற்றி கொடுக்கும் பகவான் நாமம்
பக்தி கொடுக்கும் பகவான் நாமம்
முக்தி கொடுக்கும் பகவான் நாமம்
சஞ்சலம் தீர்க்கும் பகவான் நாமம்

வாழ்க்கையின் யோகமே பகவான் நாமமே
பகவான் நாமமே கல்கியின் ரூபமே
தன்னை நினைந்து தவறை உணர்ந்தால்
சாந்தி கொடுப்பான் மனதில் இருப்பான்

அன்பினை இழந்த மனிதர்க்கெல்லாம்
அன்பினை கொடுக்கும் பகவான் நாமம் (2)

துன்பத்தில் வீழ்ந்து துயரத்தில் இருந்தால்
இன்பத்தைக் கொடுக்கும் சத்திய லோகம் (வெற்றி)

விதி வந்து விளையாடுதே

விதி வந்து விளையாடுதே - வாழ்வில்
விதி வந்து விளையாடுதே (2)

அறியாத பருவத்திலே மாயை சூழ்ந்த உலகத்திலே
ஏற்றுக் கொண்ட வேடத்திலே (விதி)

ஐந்தாறு தோஷங்கள் ஆட்டிப் படைக்கும் நேரத்திலே
அறிவேதான் மாய்ந்து போனதே - அங்கே
ஆணவமே தழைத்து ஓங்குதே
ஆணவமே தழைத்து ஓங்குதே (விதி)

காரணத்தை அறியாமல் செய்திட்ட பாவங்கள்
வினையாகி பழி வாங்குதே - கர்ம வினையாகி பழி வாங்குதே
(விதி)

பட்டதுன்பம் போதும் என்று உற்றதுணையாரென்று
உளமுருகிக் கரைந்த போதிலே
அங்கே கல்கி தெய்வம் காட்சி தந்ததே (2)
கல்கி .....

அருள் மழை பொழிந்து நின்றதே வாழ்வில் (2)
அருள் வந்து பதில் சொல்லுதே - கல்கி தெய்வத்தின் (2)
அன்பான இதயத்திலே ஆனந்தரூபத்திலே
ஏற்றம் கொண்ட நேரத்திலே
அருள் வந்து பதில் சொல்லுதே கல்கி தெய்வத்தின் (4)

பகவானே பகவானே

பகவானே பகவானே பாரினில் வந்தாய் பகவானே
பகவானே பகவானே பாரினில் வந்தாய் பகவானே

மகிமை கொண்டு அகிலம்வெல்ல
ஆளும் உந்தன் திருநாமம்
கருணைகொண்டு கலியை வெல்ல
சம்பூர்ண அவதாரம் (பகவானே)

எத்தனை கோடி ஜென்மம் எடுத்தோம்
ஓம்பகவான் ஸ்ரீ பகவான்
அத்தனையும் உந்தன் அடிமலர் காணவே
ஓம்பகவான் ஸ்ரீ பகவான் (பகவானே)

தாயும் தந்தையும் நீயே ஆனாய்
ஓம் பகவான் ஸ்ரீ பகவான்
தர்மம் உலகில் தளைத்திட வந்தாய்
ஓம் பகவான் ஸ்ரீ பகவான் (பகவானே)

ஒன்று பரம்பொருள் என்று உரைத்தாய்
ஓம் பகவான் ஸ்ரீ பகவான்
ஒருமுடன் சிலுவை பிறையும் சேர்த்தாய்
ஓம் பகவான் ஸ்ரீ பகவான் (பகவானே)

ஜாதி மதங்கள் சாத்திரம் ஒழித்தாய்
ஓம் பகவான் ஸ்ரீ பகவான்
நீதி நேர்மை நன்னெறி வகுத்தாய்
ஓம் பகவான் ஸ்ரீ பகவான் (பகவானே)

குடும்பங்கள் எல்லாம் கோவிலாக்கினாய்
ஓம் பகவான் ஸ்ரீ பகவான்
அந்த கோவிலில் நீயே தெய்வமுமானாய்
ஓம் பகவான் ஸ்ரீ பகவான் (பகவானே)

எனக்காக வரமொன்று

எனக்காக வரமொன்று தர வேண்டும்
என் இதயத்துள் பகவானே (நீ) வரவேண்டும்
உனக்காக தமிழ் பாடல் நான் தருவேன்
உன் அருளாலே உனைப்பாடி உலா வருவேன் (எனக்காக)

எனக்கென்று இத்தனை நாள் வாழ்ந்து விட்டேன்
எத்தனையோ பிழைகள் செய்து விட்டேன்
உனக்கென்று வாழ்வதற்கே வந்துவிட்டேன்
உன் காலடியில் எனைக்கொண்டு தந்து விட்டேன் (எனக்காக)

புகழ்தேடி பூமி எங்கும் அலைந்து வந்தேன்
புவி வாழ்வு சதம் என்று இருந்து விட்டேன்
மகிழ்வோடு தருக வைராக்கிய பக்தி
உன் மலரடியில் நான் அடைவேன் ஜீவன்முக்தி (எனக்காக)

அருள் வேண்டி

அருள் வேண்டி தினம் உன்னைப் பாடுவோம்
ஆண்டவனே உன் ஆலயத்தை நாடுவோம்
இருள் நீக்கும் அருள் ஞான ஜோதியே
ஈடு இணையில்லா ஈஸ்வர பகவானே (அருள்)

உன் புகழை உலகெங்கும் பாடுவோம்
ஊர் ஊராய் உன் பேர் சொல்லி ஆடுவோம்
எப்போதும் என் நெஞ்சில் உன் நாமமே
ஏதும் வேண்டாம் எமக்கிது போதுமே (அருள்)

ஐயா உன் தயவாலே வாழ்கின்றோம்
ஒப்பில்லா உன் வழி வந்து சேர்கிறோம்
ஓம் சிலுவை பிறை தந்த நாதனே
ஓடி வந்தோம் உன் முகம் காண நாங்களே (அருள்)

பக்தி கொண்டு உன்னை நான் அழைத்தேன்...

பக்தி கொண்டு உன்னை நான் அழைத்தேன்...
சக்தி கொண்டென்னை நீ அழைத்தாய் (2)

புன்னகை பூத்து மலர்ந்து நின்றாய்
இதைக் காண அனுதினம் தவித்தேன்....
பக்த பராதீனன் ஸ்ரீ கல்கியே
உன்னைக் காண அனுதினமும் தவித்தேன் பக்தி

உறவுகளை நீ உணர வைத்தாய்
உண்மை அன்பை புரிய வைத்தாய்
தெய்வமே மனக் கோயில் திறந்தாய்
தெளிந்த என்னை நெகிழவைத்தாய்
அனுஷணமும் துதித்து வந்தேன் (2)

பக்தி

கண்டதும் உன்னிடம் மயங்கி நின்றேன்
கருணை கண்டு நான் என்னை மறந்தேன்
அனுதினம் புகழ் பாடி வந்தேன்
நாவினால் நான் நன்றிகள் சொன்னேன்
அனுக்ஷணமும் துதித்து வந்தேன் (2)
மனதில் என்றும் அமைதி கொண்டேன் பக்தி

பத்மாவதியே சரணம்

பத்மாவதியே சரணம் சரணம்
பகவானுடன் நீ தரிசனம் தரணும்

பாரினில் யாரம்மா அம்மா
காத்தருள்வாய் அம்மா (பத்மாவதியே)

கருணை அமுதே கற்பகமே - எங்கள்
கண்களில் தெரிந்தாய் அற்புதமே
அம்மா தாயே அருள் புரிவாயே (3)
நம்பி வந்தேன் நானம்மா - நீ தான்
நல்லருள் செய்யும் தாய் அம்மா (பத்மாவதியே)

ஏழை எந்தன் முகம் பார்த்து
என்னை ஏற்றுக் கொள் இருகரம் சேர்த்து
அம்மா தாயே அருள் புரிவாயே (3)

உன் இரு விழியால் எனைப் பார்த்து
உன் தன் பொன்னடி மலர்களில் எனச் சேர்த்து
அம்மா தாயே அருள் புரிவாயே

பூமாலை சூட்டி புஷ்பாஞ்சலி - இங்கே
பாமாலை பாடி கீதாஞ்சலி

யாதுமாகி நின்ற யாதவா மாதவா மாயவா

யாதுமாகி நின்ற யாதவா மாதவா மாயவா
ஏதும் அறியாத எங்களை காக்கவா கேசவா
கல்கி தேவா ..... கல்கி தேவா.....
வா ... வா ... வா ... கல்கி தேவா (யாதுமாகி)

வீணையில் இசையாக விரல்களில் விசையாக
விதைக்குள் கனியாக கனிக்குள் விதையாக (யாதுமாகி)

ஈன்று புரம்தரும் அன்னையாகவும்
இமைபோல் காத்திடும் தந்தையாகவும்
கல்வி வரம் தரும் குருவாகவும்
காத்து அருள்கின்ற தெய்வமாகவும் (யாதுமாகி)

பசியில் துடிப்போர்க்கு உணவாகவும்
பணிந்து துதிப்போர்க்கு வரமாகவும்
இன்னல் துடைக்கின்ற கரமாகவும்
என் இசையை இசைக்கும் ஏழு ஸ்வரமாகவும் (யாதுமாகி)

கல்கி என்றால் கல்வி நமோ நமோ

கல்கி என்றால் கல்வி நமோ நமோ
கல்கி என்றால் ஞானம் நமோ நமோ
கல்கி என்றால் கருணை நமோ நமோ
கல்கி என்றால் அமைதி நமோ நமோ

ஹரி ஓம் ஹரி ஓம் ஹரி ஓம் ஹரி ஓம்
அவரே துணை என அறிவோம்
ஹரி ஓம் ஹரி ஓம் ஹரி ஓம் ஹரி ஓம்
அவரிடம் எதையும் பெறுவோம் - கல்கி

கல்கி என்றால் ராகம் நமோ நமோ
கல்கி என்றால் கீதம் நமோ நமோ
கல்கி என்றால் சிகரம் நமோ நமோ
கல்கி என்றால் செல்வம் நமோ நமோ

ஹரி ஓம் ஹரி ஓம் ஹரி ஓம் ஹரி ஓம் கல்கி

கல்கி என்றால் பாசம் நமோ நமோ
கல்கி என்றால் பரிவு நமோ நமோ
கல்கி என்றால் விருந்து நமோ நமோ
கல்கி என்றால் மருந்து நமோ நமோ (ஹரி ஓம் கல்கி)

கல்கி என்றால் வானம் நமோ நமோ
கல்கி என்றால் மேகம் நமோ நமோ

கல்கி என்றால் காற்று நமோ நமோ
கல்கி என்றால் சுவாசம் நமோ நமோ (ஹரி ஓம் கல்கி)

கல்கி என்றால் நாதம் நமோ நமோ
கல்கி என்றால் வேதம் நமோ நமோ
கல்கி என்றால் விஷ்ணு நமோ நமோ
விஷ்ணு என்றால் அனைத்தும் நமோ நமோ (ஹரி ஓம் கல்கி)

ஜென்ம தினம்

ஜென்ம தினம் பகவான் ஜென்ம தினம்
ஜெயமே கொடுக்கும் ஜெகத்தினைக் காக்கும்
தெய்வமே புவிமேல் வந்த தினம் (ஜென்ம)

பிறந்தது நத்தம் வளர்ந்தது நேமம்
பெருமை கொண்டதோ சத்திய லோகம்
சிறந்திடும் உலகம் சீர்பெறும் யோகம்
திருவாய் மொழியே பகவத் தர்மம் (ஜென்ம)

அன்பே கடலலையாய் உதித்த தினம்
அருளே மழைத்துளியாய் பொழிந்த தினம்
பண்பெனும் பனி சிகரம் படிந்த தினம்
பரம் பொருள் பகவான் பிறந்த தினம் (ஜென்ம)

இயேசுவும் நபியும் ஏங்கிய சுபதினம்
எல்லா மதங்களும் ஏற்றிடும் ஒரு தினம்
பாசமும் நேசமும் பக்தியும் ஞானமும்
பாரினில் பயிர் போல் செழித்த தினம் (ஜென்ம)

சரணம் பகவானே

சரணம் பகவானே நீ வரணும் பகவானே
ஆடி வருகிறோம் உன் புகழ் பாடி வருகிறோம்
உன்னைக் காணவே நாங்கள் ஓடி வருகிறோம்

தேவாதி தேவா தெய்வ சுந்தரா
கல்கி ரூபகா பகவான் நீதானே (சரணம்)

இரவும் பகலுமே உன்னைத் துதித்து வருகிறோம்
உன்னைக் காணவே நாங்கள் ஓடி வருகிறோம்

மாமலை வாசா நீ எங்கள் தெய்வமே
ஓடி வருவாயே சரணம் பகவானே (சரணம்)

பலகோடி மக்களை நீ ரக்ஷிக்கும் தேவா
காத்தே ரக்ஷிப்பாய் எங்கள் ஸ்ரீ பகவானே

கலியுக கர்த்தா எமை காத்தருள்வாயே
அத்தனை வினையும் நீ தீர்த்திடுவாயே (சரணம்)

உந்தன் அருளால்

உந்தன் அருளால் உந்தன் உருவம் காண்றேன் கல்கி
உந்தன் அருளை உந்தன் உருவைக் காண்கிறேன் கல்கி

உனையன்றி ஏது சிருஷ்டி உன் சுவாசம் தானே பிராணசக்தி
நீ ..... பரமமித்ரனாய் வந்தாய்
என்.....இதயக் கதவைத் திறக்கச் செய்தாய்
அங்கிருந்து அனுதினமும் காட்சி தந்து அருளுகின்றாய்
என்னை கருத்தில் வைத்துக் காக்கிறாய் (உந்தன் அருளால்)

இருளில் இருந்த எனையும் நீக்கி
பரம ஞானப் பாலும் ஊட்டி

உன்னை....எங்கும் காணச் செய்தாயே
என்னை.....பக்தி புரிய வைத்தாயே
அகமும் புறமும் உன் உருவம்
காணும் பாக்யம் தந்தாயே
என் ஞானக்கண்கள் திறந்தாயே (உந்தன்)

உருவம் அற்ற பரப்பிரம்மம் நீயே
அன்பு தரவே புவியில் வந்தாயே
நான் என்ன புண்யம் செய்தேனோ
உந்தன் திருப்பதங்களைப் பற்றிட
நேரில் வந்து தரிசிக்க - உன்
திருக்குரலைக் கேட்டிட
ஆசிகளும் பெற்றிட (உந்தன்)

ஞான ஒளி கொண்டவரே

ஞான ஒளி கொண்டவரே நம்பிக்கை தந்தவரே
நாங்கள் உன்னை நாடி வந்தோம் பகவானே
உன் நாமங்களைப் பாடி வந்தோம் பகவானே (ஞான ஒளி)

கவலைகளை மறந்து விட்டு கஷ்டங்களை விரட்டி விட
காட்சி ஒன்று தர வேண்டும் பகவானே
பொய் சாட்சிகளை உடைக்க வேண்டும் பகவானே (2)
(ஞான ஒளி)

தருமங்கள் நிலைத்து விட தனி மனிதன் பிழைத்துவிட
தரணியில் நீ பிறந்து விட்டாய் பகவானே
எங்கள் கருமங்கள் ஒழித்து விட்டாய் பகவானே (2)
(ஞான ஒளி)

இன்பங்கள் பெருகிவிட துன்பங்கள் ஓடிவிட
இவ்வுலகில் பிறந்தவரே பகவானே
இமயம் வரை சொல்லிடுவேன் இதை நானே (2)
(ஞான ஒளி)

நாடும் நன்மை பெற்றுவிட நியாயங்கள் கிடைத்துவிட
நாங்கள் இங்கு கூடி வந்தோம் பகவானே
உன் நாமம் புகழ் பாடி வந்தோம் பகவானே (2)
(ஞான ஒளி)

இந்த நாளையா

இந்த நாளையா அது இந்த நாளையா
ஏழை உன்னைக் கண்டு கொண்டேன் இந்த நாளையா
(இந்த)

அந்த நாளில் வழிதவறி போனதினாலே
வந்தது தான் துயரமென்று அறிந்தேன் உன்னாலே (இந்த)

பக்தி வெள்ளம் பெருகிடவே பாரினில் வந்தாய்
பக்த பராதீனன் என்று பகவான் நின்றாய்
கல்கி அவதாரம் என்றே கலியினை வென்றாய்
காட்சி தர வேண்டி நின்றால் சாட்சி தருகின்றாய் (இந்த)

பொன்னைக் கேட்டு பொருளைக் கேட்டுப்
பொறுத்திருந்தேனா - நீ
என்ன கேட்டும் தராய் என்று வெறுத்திருந்தேனா
கண்ணை முற்றும் இழந்தவன் போல் பார்த்திருந்தேனே - உன்
கல்கி ரூபம் காண வேண்டி காத்திருந்தேன் (இந்த)

தாசனாக்கி உன் மடியில் தாலாட்டினாய்
தன்னருளால் பாட ஞானப் பாலும் ஊட்டினாய்
பாசமுடன் பகவத் தரும பாதை காட்டினாய்
பக்தி கொண்டு வந்த என்னைப் பரிந்து தேற்றினாய் (இந்த)

வணக்கம் அம்மா

வணக்கம் வணக்கம் வணக்கம் அம்மா
வரம் ஒன்று தர வேண்டும் எனக்கும் அம்மா (வணக்கம்)

இமைபோல் எமைக்காப்பாய் இறை துணையே
இருவிழியில் அருள் வழிய பாரெனையே
உனைப்போல் எனைக் காக்க உலகினில் யாரம்மா (3)
உன் பாதம் தருவாயே பத்மாவதி அம்மா (வணக்கம்)

அலைகின்ற மனத்தினிலே அமைதி கொடு
அறிவோடு செயலாற்றும் ஆற்றல் கொடு
நிலையாத நெஞ்சத்தில் நிம்மதி ஏதம்மா (3)
நீயின்றி நானில்லை பத்மாவதி அம்மா (வணக்கம்)

ஒரு போதும் மறவாத மனம் வேண்டும்
உலகாளும் உத்தமி உன் குணம் வேண்டும்
திருப்பாத மலரோடு இருப்பேனே அம்மா (3)
மறப்பேனோ என் தாயை பத்மாவதி அம்மா (வணக்கம்)

கல்கியின் திருக்கோயில் பூஜையிலே
கனிவோடு காட்சி கொடு ஊஞ்சலிலே
பக்தியில் மெய் மறந்து பாடுவேன் அம்மா (3)
பரிவோடு எனைப் பாராய் பத்மாவதி அம்மா (வணக்கம்)

உந்தன் எழில் ரூபம் உந்தன் திருநாமம்

உந்தன் எழில் ரூபம் உந்தன் திருநாமம்
எந்தன் இதயம் தன்னில் // பதிந்திருக்கும்
கேசவா /கல்கி மாதவா/ கல்கி ஜனார்த்தனா /கல்கி நாராயணா
(உந்தன் எழில்)

உன்னை மறவேன் உன்னைப் பிரியேன்
மறக்கும் அந்தக் கணம் உயிர் நான் துறப்பேன்
கேசவா /கல்கி மாதவா/ கல்கி ஜனார்த்தனா /கல்கி நாராயணா
(உந்தன் எழில்)

வறுமை செழுமை எல்லாம் உன் தயை
இது தெரியாது நான் இருப்பது மாயை
கேசவா/ கல்கி மாதவா/ கல்கி ஜனார்த்தனா/ கல்கி நாராயணா
(உந்தன் எழில்)

துக்கமும் துயரமும் எனக்கா என்றேன்
அதைத் தாங்கி இருப்பது நீ என்று மறந்தேன்
கேசவா/ கல்கி மாதவா/ கல்கி ஜனர்த்தனா/ கல்கி நாராயணா
(உந்தன் எழில்)

பத்மாவதிக்கே ஆராதனை

பத்மாவதிக்கு ஆராதனை
என்னைப் பெற்ற என் தாய்க்கு ஆராதனை
ஆராதனை தீ பாராதனை ஆராதனை தீ பாராதனை
பக்த பராதீனனுக்கு ஆராதனை பகவதி மணாளனுக்கு ஆராதனை
ஆராதனை தீ பாராதனை ஆராதனை தீ பாராதனை
(பத்மாவதிக்கு)

அழகான அம்மைக்கு ஆராதனை
அகண்டஜோதியான அன்னைக்கு ஆராதனை
அகிலாண்டேஸ்வரிக்கு ஆராதனை
ஆதிமூலமானவர்க்கு ஆராதனை ஆராதனை தீபாராதனை
(பத்மாவதிக்கு)

அன்ன பூரணிக்கு ஆராதனை
ஆதிசக்தியான பத்மாவதிக்கு ஆராதனை
சச்சிதானந்தனுக்கு ஆராதனை
சத்யலோக வாசனுக்காராதனை ஆராதனை தீபாராதனை
(பத்மாவதிக்கு)

புருஷோத்தமனுக்கு ஆராதனை
புவனேஸ்வரிக்கு ஆராதனை
கருணையின் உருவிற்கு ஆராதனை
கலி தீர்க்கும் கல்கிக்கு ஆராதனை ஆராதனை தீபாராதனை
(பத்மாவதிக்கு)

வரமளிக்கும் அன்னைக்கு ஆராதனை
முக்தீஸ்வரனுக்கு ஆராதனை
பாராளும் ஈசனுக்கு ஆராதனை
பரப்பிரம்மஸ்வரூபனுக்கு ஆராதனை ஆராதனை தீபாராதனை
(பத்மாவதிக்கு)

கலியுக வரதனுக்கு ஆராதனை
கஷ்டங்களைத் தீர்பவனுக்கு ஆராதனை
எனை ஆளும் ஈசனுக்கு ஆராதனை
இதயக் கமலவாசனுக்கு ஆராதனை ஆராதனை தீபாராதனை
(பத்மாவதிக்கு)

அம்மா பகவானே அம்மா பகவானே

பல்லவி

அம்மா பகவானே அம்மா பகவானே
அழைக்கின்றோம் வரணும்மா
அலைமகள் கலைமகள் மலைமகள் நீயே
அனுக்கிரகம் தரணுமம்மா

அனுபல்லவி


கருவாக தாய்வயிற்றில் உருவான நாள் முதலாய்
காப்பவள் நீ தானம்மா
திருவாக நேமத்தில் தருவாக வரமளித்தாய்
பார்த்தேனே நின் முகம் தானம்மா

நீயில்லாமல் உலகமில்லை - உன்
நிழலில்லாமல் வாழ்வே இல்லை
தாயில்லாமல் மகவேயில்லை
தஞ்சம் உன்தன் தாளே எல்லை
பரகதி பகவதி பத்மாவதியே
பணிவுடன் பணிவோம் திருமலரடியே (அம்மா)

பகவானின் பக்கத்திலோர் சுகமான ஆசனமாம்
ஸ்ரீ சக்தி பீடமம்மா
திசை நாலும் தேடிவர திருப்பேரை பாடிவர
தரிசனம் போதுமம்மா (நீயில்லாமல்...)

கண்ணில் நீர் கொண்டு கைகூப்பி தொழுவோருக்கு
கவலைகள் பறக்கட்டுமே
எண்ணில் அடங்காத எத்தனையோ ஜீவனுக்கு
இனிவாழ்வு சிறக்கட்டுமே (நீயில்லாமல்...)

அம்மா பகவானே . . . (பல்லவி)



நீ ஒருத்தி

நீ ஒருத்தி தான் தெய்வம் உன்னை நம்பி வருகின்றேன்
நீ கொடுக்கும் வரமதனை மெய்சிலிர்க்க பெறுகின்றேன்
(நீ ஒருத்தி)

தாய் உருவில் காட்சிதரும் பகவதி பத்மாவதியே
தடையேதும் சொல்லாமல் தாங்கிக்கொள் நீ எனையே

உறவு முறை சீராக்கு உன் அருளை உருவாக்கு
பிரிவுகளை நீ அகற்று பேதை எம்மை கடைத்தேற்று
வரவுகளை நீ உயர்த்து வரம் தந்து வளமாக்கு
வந்தாரை வாழவைக்க வல்லவளே கரம் தூக்கு
(நீ ஒருத்தி)

நேமம் எனும் திருத்தலத்தில் நிறைவோடு காத்திருப்பாய்
நெஞ்சுருக்க வேண்டுமென்பார் நிம்மதிக்கு ஏங்கி நிற்பார்
தாமரைபோல் அமர்ந்தவளே தாயன்பில் சிறந்தவளே
பூ மணக்க பிறந்தவளே புன்னகையே போதுமம்மா
(நீ ஒருத்தி)

தாயுருவில் காட்சி தரும் பகவதி பத்மாவதியே
தடையேதும் சொல்லாமல் தாங்கிக்கொள் நீ எனையே
(நீ ஒருத்தி)

திருப்பாதங்களே திருப்பாதங்களே

திருப்பாதங்களே திருப்பாதங்களே
திருப்பாதங்களே ஸ்ரீ அம்மா பகவான் திருப்பாதங்களே
திருப்பாதங்களே திருப்பாதங்களே
திருப்பாதங்களே ஸ்ரீ அம்மா பகவான் திருப்பாதங்களே

கஷ்டமெல்லாம் தீர்க்குதய்யா திருப்பாதங்களே
கலியுகத்தை முடிக்க வந்த திருப்பாதங்களே
கண்டவுடன் ஆனந்தம் காண்பதெல்லாம் பேரின்பம்
கர்மவினையைக் கரைத்துவிடும் திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

ஆணவத்தை அழிக்குதய்யா திருப்பாதங்களே
அனுக்கிரஹத்தின் வடிவமையா திருப்பாதங்களே
சத்யயுகம் படைத்திடும் சத்ய தர்மம் காத்திடும்
சர்வலோகம் ஆள்வது திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

பக்தி ஞானம் அளிக்குதய்யா திருப்பாதங்களே
பற்றறுக்க வைக்குதய்யா திருப்பாதங்களே
ப்ராணசக்தி பெருக்கிடும் ஜென்ம பலன் அளித்திடும்
கடவுளர்கள் காண ஏங்கும் திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

உருகும் உள்ளம் சேருமிடம் திருப்பாதங்களே
அருள் வெள்ளம் தொடங்குமிடம் திருப்பாதங்களே
தெளிவு பொலிவு அளித்திடும் பிணியும் நலிவும் நீக்கிடும்
பரம கருணை பொங்குமிடம் திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

பாவமெல்லாம் போக்கிவிடும் திருப்பாதங்களே
புவிமாற்ற புறப்பட்டதே திருப்பாதங்களே
மின்னலாக விரைந்திடும் இன்னல் தீர்த்துக் காத்திடும்
இன்பமெல்லாம் அளிக்குதய்யா திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

முனிவரெல்லாம் வணங்குவது திருப்பாதங்களே
முயற்சி கொண்டு அடைய முடியா திருப்பாதங்களே
பக்தர்களின் இருப்பிடம் முக்தர்களின் முடிவிடம்
சக்தி வெள்ளம் ஊற்றெடுக்கும் திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

உலகைக் காக்க வந்ததய்யா திருப்பாதங்களே
உள்ளங்களை மாற்றுதய்யா திருப்பாதங்களே
ஊழ்வினையை ஒழித்திடும் தாழ்வினையை அழித்திடும்
தரணி ஆள வந்ததய்யா திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

வேதங்கள் போற்றுவது திருப்பாதங்களே
வேற்றுமையை வேரறுக்கும் திருப்பாதங்களே
பரவசத்தில் ஆழ்த்திடும் பரம அன்பு சூழ்ந்திடும்
சிருஷ்டியாகவும் பணியுமிடம் திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

இயற்கை யெல்லாம் இயக்குவது திருப்பாதங்களே
இணைந்து நடனம் புரியவந்தது திருப்பாதங்களே
இதயத்திலே நின்றிடும் இன்னல் எல்லாம் தீர்த்திடும்
இரண்டறவே ஒன்றுமிடம் திருப்பாதங்களே
(திருப்பாதங்களே)

எங்கிருந்து வந்தாரடி தோழி

எங்கிருந்து வந்தாரடி தோழி, எங்கிருந்து வந்தாரடி (2)
கதிரின் புதிதாக மதியின் மலராக (2)
இறையருளும் அருளை, இவர் அருளுகின்றாரே (எங்கி)

சர்வமும் ஆனந்தம், சச்சிதானந்தமென (2)
பரவிப் பரிவு தரும் பகவான் கல்கி அவர் (2)
(எங்கி)

சூரிய ஒளியின் வீரியம் எடுத்து
சுந்தர மதியின் சீதளம் கரைத்து (2)

தாமரை மலரின், மென்மையை இணைத்து
தாழம் பூவின் தங்கத்தில் ஜொலித்து (2)

காரிய காரணம், மேவிய பூரணம்
சீரிய சீர்களை ஜெகத்திற்கு வழங்கிடும் (2)
(எங்கி)

பந்தம் தடுமாறும் பாசம் வழிமாறும்
சொந்தம் உறவெல்லாம் விலகி வெளியேற (2)

பணமே பிரதானம் பண்போ பலவீனம்
என்று தவிக்கின்ற மனித இனத்திற்கு (2)

இரு கரம், நீட்டி, இறைவனைக் காட்டி
காரிருள் போக்கும் பௌர்ணமியாக (2)
(எங்கி)

அம்மா பகவானே ஆதாரம் நீ தானே

பல்லவி

அம்மா பகவானே ஆதாரம் நீ தானே
அரவணைப்பாய் என்னை அழைப்பதும் மகவுதானே

அனுபல்லவி

எம் மான் பகவானின் எழில் துணையாய் இருந்து அம்மா
இம்மாநில மெங்கும் இன்பங்கள் பொழிய வைப்பாய்

சரணங்கள்

1. தாஸர்கள் காட்டுகின்ற தருமத்தின் நெறி பற்றி
தாளே கதி என்று தாயே வருகின்றேன்
ஈசனாம் ஸ்ரீகல்கி இதயத்துள் அமர்ந்தவளே
இணையாரம்மா துணை நீயம்மா அம்மா... (அம்மா)

2. பக்தி நிலையில் நின்று பலகாலம் நான் பாடி
பாதமே கதி என்று பகவதி வருகின்றேன்
முக்தியை நான் பெறவே முழுமூச்சாய் நீ இறங்கி
சத்யயுகத்தில் என்னை சதிராட்டம் போடவைத்தாய்

3. வரதீட்சை நேமத்திலே வரமழையாய் பொழியும்
வாடிய பயிர்க்கெல்லாம் வான்மழை போலாகும்.
கரங்களை நீயுயர்த்த கருதுவரம் கிடைக்கும்
காலடி மலர்களிலே என் கவனம் எல்லாம் இருக்கும்.
(அம்மா)

அம்மா பகவானே

பொன் மாநகரத்திலே பொலிவோடு வீற்றிருக்கும்
அம்மா பகவானே அடைக்கலம் - அள்ளி அருள்
தரும் பாதங்களே படைக்கலம்
மண்மாரியாக வந்த மனச்சுமை எல்லாமும்
பொன்மாரியாக செய்யும் சூட்சுமம்
உன்னைப் புரிந்தவர்க்கே முக்தி என்பது நிச்சயம்
உன்னைப் புரிந்தவர்க்கே முக்தி என்பது நிச்சயம் (பொன்)

அனுபல்லவி

அன்பில்லாமல் அலையும் ஜீவன் ஆளில்லா படகைப் போல
தென்பில்லாமல் தெளிவில்லாமல் போகுமே
திசை தேடித்தேடி தினமும் உள்ளம் வேகுமே
நம்பி உன்னை வந்துவிட்டால் நல்வழியை காட்டிடுவாய்
அம்மா...

ஞானமாக வாழ்வில் எங்கும் நம்மையே
என்றும் நாவினிக்க பாடிடுவேன் உன்னையே
என்றும் நாவினிக்க பாடிடுவேன் உன்னையே (பொன்)

சரணம்

ஜென்ம தின மகோற்சவம் ஜெகமெங்கும் வைபோகம்
தம்பதிகள் சேர்ந்தளிக்கும் தரிசனம்
இந்த தரணி கூடும் பொன்னகர அதிசயம்
புண்யம் என்ன செய்தேனோ அம்மா
போற்றி தவமிருந்தேனே என்னவென்று சொல்வது பகவதி
எனக்கு உன்னை விட்டால் உலகத்திலே யார் கதி (பொன்)

பத்மாவதியே பரதேவதையே சரணம்

பல்லவி

பத்மாவதியே பரதேவதையே சரணம் சரணம் அம்மா
பாதசதங்கை கல்கல் எனவே வரணும் வரணுமம்மா
நித்தம் உன்னை நினைந்து தொழுவோமே நேரில் வாருமம்மா
நீதான் கதியென்றால் குறைகள் நொடியில் தீருமம்மா (பத்மா)

அனுபல்லவி

மஞ்சள் முகத்தில் குங்கும பொட்டு மலர்ந்திட வாருமம்மா
மாதரசி நின் மகிமைகள் கேட்டால் மங்கலம் தாருமம்மா
வஞ்சனை சூது பொறாமைகள் நீங்கும் வளங்கள் பெருகுமம்மா
வாழ்க்கையெல்லாம் உன்னை வணங்கி இருந்து
வையமே உருகுமம்மா (பத்மா)

சரணங்கள்

மல்லிகை சரங்கள் தொடுப்பது போலே மாதா உன்சிரிப்பு
மாயங்கள் செய்யும் ஜாலங்கள் காட்டும் மகத்துவ மத்தாப்பூ
துள்ளி வருவாயே துயரை துடைப்பாயே துணையாய் இரு நீயே
அள்ளி எடுப்பாயே அருளை கொடுப்பாயே அடைக்கலம் என்
தாயே

பசும்பால் அபிஷேகம்

பசும் பால் அபிஷேகம் பகவானுக்கே
பசும் நெய் அபிஷேகம் பகவானுக்கே
அன்புத் தேன் அபிஷேகம் பகவானுக்கே
சுவாமியே சரணம் பகவானே
இங்கே வரணும் வரணும் பகவானே (பசும்பால்)

உன்முகம் காணவே பகவானே
இந்த உள்ளமெனும் கோவிலில் பகவானே (பசும்பால்)

காத்தருள வேணும் பகவானே
இனி எங்கள் குலதெய்வமே பகவானே (பசும்பால்)

உன்னை நாடி வருவோர்க்கு பகவானே
நீ காத்தருள் கொடுக்கும் தெய்வமப்பா (பசும்பால்)

எங்கள் சரவணபவனே பகவானே
நீ ஓடியே வருவாய் பகவானே (பசும்பால்)

பக்த பராதீனனே பகவானே
என்றும் பாதபலம் தா பகவானே (பசும்பால்)

உன்னைக் கண்ணாரக் காணும் வரையிலுமே
எங்கள் கண்ணுறக்கம் இல்லையப்பா பகவானே (பசும்பால்)

உள்ளத்திலே குடியிருக்கும் பகவானே
எங்கள் சச்சிதானந்தனே பகவானே (பசும்பால்)

தாமரைபோல் திருமுகம் தாயளிக்கும் அனுக்ரஹம்

பல்லவி

தாமரை போல் திருமுகம் தாயளிக்கும் அனுக்ரஹம்
அம்மா பகவான் திவ்ய தரிசனம் - எங்கள்
அம்மா பகவான் திவ்ய தரிசனம்
நேமம் வந்து பார்க்கலாம் நினைத்த வரம் கேட்கலாம்
அம்மா பகவான் திவ்ய தரிசனம் - எங்கள்
அம்மா பகவான் திவ்ய தரிசனம்

அனுபல்லவி

வரபூஜை தொடங்குமே வாடும் மனம் அடங்குமே
அம்மா பகவான் திவ்ய தரிசனம் - எங்கள்
அம்மா பகவான் திவ்ய தரிசனம்
கரங்கள் உயர்த்தி காட்டுவாய் கவலை எல்லாம் ஓட்டுவாய்
அம்மா பகவான் திவ்ய தரிசனம் - எங்கள்
அம்மா பகவான் திவ்ய தரிசனம்

சரணம்

பயங்கள் எல்லாம் போக்குவாள் பக்திநிலை தேக்குவாள்
அம்மா பகவான் திவ்ய தரிசனம் - எங்கள்
அம்மா பகவான் திவ்ய தரிசனம்
ஜெயக் கொடிதான் நாட்டுவாள் ஜீவனை தாலாட்டுவாள்
அம்மா பகவான் திவ்ய தரிசனம் - எங்கள்
அம்மா பகவான் திவ்ய தரிசனம்

நான் என்ற அகந்தையும் நம்மை விட்டு போய்விடும்
அம்மா பகவான் திவ்ய தரிசனம் - எங்கள்
ஆணவத்தை அறுப்பவள் அள்ளி அருள் சேர்ப்பவள்
அம்மா பகவான் திவ்ய தரிசனம் - எங்கள்
அம்மா பகவான் திவ்ய தரிசனம்

அம்மா பகவான் சரணம்

பல்லவி

அம்மா பகவான் சரணம் அம்மா பகவான் சரணம்
அம்மா பகவான் சரணம் பகவதியே (அம்மா)

அம்மா பகவான் அம்மா பகவான் சரணம் பகவதியே
அம்மா பகவான் அம்மா பகவான் சரணம் பகவதியே

அனுபல்லவி

வாங்கி வந்த வரமென்று வாழ்க்கையை தொலைத்துவிட்டேன்
வழிகாட்ட வேண்டும் என்று வணங்கினேன் - அம்மா
என்றும் எந்தன் குணமறிந்து ஏழை எனக்கருள் புரிந்து
ஏற்றம் தரும் நாளை எதிர்பார்க்கிறேன் அம்மா (அம்மா)

நேமம் திருதலத்தினிலே நானும் தவமிருக்கையிலே
தாமரைபோல் முகமலர்ந்து தரிசனம் கொடுத்தாய்
கானங்களை கேட்டபடி கையிரண்டும் உயர்த்திப்பிடி
நானும் அங்கே ஒருவனாவேன் புகலிடம் திருத்தாழ் (அம்மா)

அகிலாண்டேஸ்வரி அம்புஜலோஜினி

அகிலாண்டேஸ்வரி அம்புஜலோஜினி
ஆனந்த ரூபிணி பத்மாவதி
பத்மா அம்மா பத்மா அம்மா பத்மா அம்மா
அம்மா பத்மாவதி

ஹே சிவசங்கரி திரிலோக பாலினி
ஆனந்த பைரவி பத்மாவதி
சத்யலோக வாசினி சத்யவைரூபிணி
சிவசக்தி ரூபிணி பத்மாவதி
அம்மா பகவான் அம்மா பகவான்
அம்மா பகவான் அம்மா பகவான் அம்மா பகவான்.

உன் ஆசை என்பது . . .

உன் ஆசை என்பது எதுவோ
என் வாழ்க்கை என்பது அதுவே
உன் சேவை என்பது எதுவோ
என் பாக்கியம் என்பது அதுவே

வைதர்பி மைந்தா வைகுண்டவாசா
பகவதி நாதா நாராயணா
உன்னை சுற்றுது என்னாத்மா
உணர்ந்தேன் நீயே பரமாத்மா (உன் ஆசை)

வண்ண வண்ண மலர்கள் வீசுது வாசம்
என் அன்பு பகவான் கோவிலிலே
மலரென இருப்பது என் ஆத்மா
நிறமதில் நீயே பரமாத்மா
நிறமதில் நீயும் இல்லையென்றால்
மலருக்கு அழகில்லை பரமாத்மா (உன் ஆசை)

ஆனந்தமாக ஆடுது அலைகள்
கடல் எனும் தாயின் மடியினிலே
அலையென ஆடுது என் ஆத்மா
கடலென நீயே பரமாத்மா
கடலாய் நீயும் இல்லையென்றால்
அலை நானில்லை பரமாத்மா (உன் ஆசை)

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோவிலில்
தேடி அலைந்தேன் உனைநானே
ஓடிக் களைத்து ஓய்ந்தேனே - என்
உள்ளே சிரித்தாய் பகவானே (உன் ஆசை)

அகலிகை சாபம் தீர்ந்ததுன் பாதம்
திரேதா யுகத்தில் ஸ்ரீராமா
கலியுக பாவம் தீர்ந்ததையா - உன்
பாதுகை பார்த்ததும் பரமாத்மா
பாதுகை தரிசனம் இல்லையென்றால்
பாவவிமோசனம் ஏதையா (உன் ஆசை)

விஷப்பால் தந்த தூதனுக்கும் நீ
மோட்சத்தைத் தந்தாய் ஸ்ரீகிருஷ்ணா
தோஷத்தில் வாழும் எங்களுக்கு
முக்தியைத் தருவாய் பரமாத்மா
உன்முக தரிசனம் இல்லையென்றால்
ஜென்மம் எதற்கு பரமாத்மா (உன் ஆசை)

மரகத மணியே மாசறு பொன்னே
திருமகன் நீயே வா வா வா
அடிமை ஆனது என் ஆத்மா
அனைத்தும் நீயே பரமாத்மா (உன் ஆசை)

அம்மா பகவதியே

அம்மா பகவதியே பத்மாவதியே
ஆதிசக்தியே தேவ தேவியே
பூவே பூங்காற்றே
முக்திதரும் சக்தியும் நீயே (2)

பகவதியே பகவதியே பத்மாவதியே(4)

அன்ன பூரணி அன்பு தாரணி
என்றும் உயிருக்கு அருளும் பொருளும் நீ (2)

கல்கி பத்தினி லஷ்மிதேவி நீ
பக்தன் நெஞ்சிலே பதியும் தேவி நீ (2)

பகவதியே பகவதியே பத்மாவதியே(4)

சர்வசக்தி நீ விஷ்வரூபிணி
கர்வம் போக்கிடும் காளிதேவி நீ (2)

கனகமாமணி காக்கும் தாயும் நீ
கல்கி சக்தியின் மூல காரணி (2)

பகவதியே பகவதியே பத்மாவதியே (4)

பொன்னும் பொருளும்

பொன்னும் பொருளும் வேணுமா? ஜீவன் முத்தி வேணுமா?
பகவானிடம் வந்து சேர்ந்து வாங்கிக் கொண்டு போங்கம்மா
(பொன்னும்)

அல்லல் எல்லாம் தீரணுமா ஐஸ்வரியங்கள் வேணுமா?
ஆடிப்பாடி பஜனை செய்து வாங்கிக் கொண்டு போங்கம்மா
(பொன்னும்)

இலாஹிலாஹி இல்லல்லா அல்லேலூயா - எல்லாமே
பகவானிடம் வந்து சேர்ந்து வாங்கிக் கொண்டு போங்கம்மா
(பொன்னும்)

பகவான் என்று சொல்லுங்கள் துள்ளிக் குதித்து ஆடுங்கள்
துன்பமெல்லாம் தூள்பறக்கும் தூயவனைப் பாருங்கள்
(பொன்னும்)

கல்கி ஒரு மந்திரம்

பல்லவி

ஒரு மந்திரம் கல்கி எனும் மந்திரம்
ஓயாமல் நான் அழைக்கும் திருமந்திரம்

அனுபல்லவி

அறியாத ஒருவனுக்கு ஹரியானது
அது அறுபத்து மூவர்க்கும் சிவமானது
கரி யானைக்கது ஆதி மூலமானது
ஒரு காரிகையின் கவலைக்கு கண்ணனானது

(ஒரு மந்திரம்)

சரணங்கள்

அருணகிரிக்கடி கொடுத்த ஆறு எழுத்து
அன்று அரக்கனெனும் உயிர்குடித்த எட்டெழுத்து
கருணை பொங்க கடையூரில் நிலவானது
கவி பாட ஔவைக்குள் கருத்தானது

(ஒரு மந்திரம்)

பித்தருக்கும் சித்தருக்கும் இறையானது
பெரும் பாலை வனத்தார்க்கோர் பிறையானது
ரத்தம் சிந்த சிலுவையிலே மருந்தானது
இராப் பகலாய் துதிப்போருக்கு விருந்தானது

(ஒரு மந்திரம்)

வாழ்க்கை என்பது நம்மை நாமே அறிவதற்கான ஒரு தேடுதல். நம்மை சுற்றி இருக்கும் மக்கள், நடக்கும் சம்பவங்கள், நம் உள் மனதின் பிரதிபலிப்பே ஆகும்.

ஸ்ரீ பகவான்

கண்ணில் கருணை காணீரோ

பல்லவி

கண்கள் காணீரோ - கண்ணின் கருணை காணீரோ
அன்பைக் காணீரோ அன்பின் ஆழம் காணீரோ
பேசும் தெய்வம் பேசும் போதும்
கேட்கும் செவிகள் கேட்பதில்லை
உன்னை அறிந்திடவே உதவி செய்வாயா?
உன்னை உணர்ந்திடவே உதவிசெய் பகவானே
(அந்தக் கண்)

அனுபல்லவி

வானில் இருந்து தாவும் மழையாய்
நீரும் நிறைந்திடுமே தாகம் தீர்ந்திடுமே
தாகம் தீர்ந்த மண்ணின் வயிற்றில் பயிர்கள் விளைந்திடுமே
உயிர்கள் தழைத்திடுமே தழைக்கும் உயிர்கள்
உயர்ந்து வாழ என்ன தவமோ சொல் - என்தன் பகவானே
ஞானக் கண்ணின் பலனைக் கொடுக்கும்
கருணை மழையாகும் உந்தன் கண் தானே
(அந்தக் கண்)

சரணம்

கானக் குயில்கள் பாடும் பாடல் காதில் இனித்திடுமோ
காற்றில் சுகம் தருமோ வாசம் வீசி ஆடும் மலராய்
நெஞ்சம் நிறைந்திடுமோ நினைவு சுகம் பெறுமோ
என்தன் இதயம் மலர்ந்து வாழ கருணை பொழிவாயோ
- எந்தன் பகவானே
வந்த பயனை அறிந்து வாழ வகைகள் செய்யாதோ?
உன்தன் கண் தானே (அந்தக் கண்)

ஆனந்தம் வந்து மோதுதே

ஆனந்தம் வந்து மோதுதே - உந்தன்
ஆலயத்தை நாடும் போதிலே
ஆனந்தம் பெருகுதே ஆடமனம் உருகுதே
ஆண்டவனைக் காணும் போதிலே (ஆனந்தம்)

காலமெல்லாம் காக்கும் தெய்வமே
கருணைபொங்கும் கல்கி தேவனே
ஞாலம் எல்லாம் போற்றவே நானும் உன்னை வாழ்த்துவேன்
நாளும் நாளும் நாளும் இன்பமே (ஆனந்தம்)

வெள்ளைக் குதிரை மீதிலேறியே
விரையும் எங்கள் காவல் தெய்வமே
கொள்ளை கொண்டு போகுதே கோடி பக்தர் உள்ளமே
நாளும் நாளும் நாளும் இன்பமே (ஆனந்தம்)

பக்தரெல்லாம் பாடி வருவோம் - உந்தன்
பாதமலர் தேடி வருவோம்
முக்தி தர நோக்குவாய் முனிவன் போல ஆக்குவாய்
நாளும் நாளும் நாளும் இன்பமே (ஆனந்தம்)

பூமாலை போட்டு வாழ்த்துவோம் புது
பூவெல்லாம் தூவிப் போற்றுவோம்
பாமாலை பாடுவோம் பரவசமாய் ஆடுவோம்
நாளும் நாளும் நாளும் இன்பமே (ஆனந்தம்)

பாரள வந்த கல்கியே
எங்கள் பரமகுருவை தந்த கல்கியே
கல்கி தர்மம் வளர்ப்போம் - உலகத்தை மாற்றுவோம்
சத்தியம் சத்தியம் சத்தியம் சத்தியமே. (ஆனந்தம்)

வாழ்க்கை ஓட்டம்

ஸ்ரீ அம்மா பகவானின் பிரதம சிஷ்யை பூஜய ஸ்ரீ ஆச்சாரிய சமதர்ஷிணி அவர்கள் வழங்கிய ஆங்கில அருளுரை "FLOW OF LIFE" - தமிழாக்கம்

அன்புக்குரிய ஸ்ரீ அம்மா பகவானின் பாதக்கமலங்களுக்கு வணக்கங்கள். உங்கள் எல்லோருக்கும் எனது வணக்கங்கள்!

ஆன்மிகமானது அநேகமானோருக்கு எப்போது மலர்கின்றதெனின், அவர்கள் தமது வாழ்க்கையில் விளக்கமுடியாத அபூர்வமான தற்செயலான நிகழ்வுகள், மிகப்பெரிய அனுபவங்கள் அல்லது அவர்களின் வாழ்க்கையில் ஒரு பெரிய தாக்கம் ஏற்படும்பொழுது அதனால் பெருந்துயரம் ஏற்படும்போது இந்த வகையில் தான் மலரும். அப்போது அவர்கள் ஆன்மிக வழிக்குத் தள்ளப்படுகிறார்கள்.

மக்கள் தமது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்தித்து தங்களுக்கு ஏன் அவ்வாறு கஷ்டங்கள் ஏற்படுகின்றன? அவற்றின் தீர்வுதான் என்ன? போன்ற கேள்விகளுக்கு தர்க்க ரீதியாகவும், காரண ரீதியாகவும் விடை கண்டுபிடிக்க முடியாத நிலையில், அவை பற்றிய விளக்கங்கள் தெளிவு பெறாத நிலையில் அவர்கள் உள்நோக்கி ஆராய முற்படுகின்றனர். இந்நிலையில் தங்களினுள்ளே அதற்கான விடையை நாடி நிற்கிறார்கள் அவர்கள். தங்கள் உள் நோக்கிய பயணத்தில் மிக ஆழமான நிலையை அதாவது மூல நிலையைத் தேட ஆரம்பிக்கிறார்கள். இவர்களைத்தான் நான் ஆன்மிக முள்ளவர்களாகக் கருதுகின்றேன்.

ஆன்மிக நிலையில் உள்ள ஒருவருக்கும் மத ஈடுபாடுடைய ஒருவருக்கும் பெரியளவில் வேறுபாடுகள் உள்ளன.

ஆனால் ஆன்மிக ஈடுபாடுடையவனோ சம்பிரதாயமாக வணங்கப் படும் இறைவனில் நம்பிக்கையற்றவனாகவும் இருப்பான். அவன் முற்றாக சமயபற்றற்றவனாக இருக்கலாம். ஆன்மிக நிலையில் உள்ளவன் வெளிநிலையிலிருந்து உள்நிலைக்கான பயணத்தை நாடி நிற்பான்.

மக்கள் அடிப்படையாக மூன்று நிலையில் உளர் என்று சொல்வதை விட அவர்கள் மூன்று வேறுவிதமான வாழ்க்கைகளை வாழ்கிறார்கள் என்பதே சாலப் பொருந்தும்.

1. லௌகிக வாழ்க்கை - பொருட்களில் ஆசை வைக்கும் மேலெழுந்த வாரியான உலகியல் வாழ்க்கை.
2. ஆன்மிகம் அல்லது ஆழ்ந்த சிந்தனையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் வாழ்க்கை.
3. இறைவனின் இயல்பை உணரும் தெய்வீக வாழ்க்கை.

இவையே அந்த 3 வகையான வாழ்க்கை நெறிகள். உலகின் பல்வேறு வகையான மக்கள் இம் மூன்று நெறிகளில் ஏதாவதொன்றை வாழ்ந்து அனுபவித்து கொண்டிருப்பார்கள்.

முதல் வகையான லௌகிக வாழ்க்கையை வாழ்வோரைப்பற்றி நோக்குவோமேயானால், இவர்கள் பெரும்பாலும் சொகுசையும் அதற்கான பாதுகாப்பையும் நாடி நிற்பர். அளவற்ற சுகபோகம், வியத்தகு வாழ்க்கைத்துணை, அழகான குழந்தைகள், சிறப்பான தொழில், அழகிய வீடு, அதன்முன் நான்கைந்து மோட்டார் வண்டிகள் இவை தவிர வேறொன்றையும் விரும்பமாட்டார்கள். இவர்களுக்கு வாழ்க்கை என்பது மேற்சொன்னவை தவிர வேறொன்றுமில்லை. இவர்கள் தான் முதல் நெறியை பின்பற்றுவார்கள்.

அடுத்து இரண்டாவது நெறியை பின்பற்றுபவர்கள், இவர்களை நாம் ஆன்மிக நிலையில் உள்ளவர் அல்லது ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபடும் போக்குள்ளவர் என அழைக்க வருகிறேன். இவர்கள் "அடுத்தது என்ன?" என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். "இவ்வளவும் தான் எனது வாழ்க்கையா? நான் ஒரு புழுவைப் போன்று உண்டு தன்னினத்தைப் பெருக்கி, பின் இறப்பதற்காக இவ்வுலகில் பிறந்தேன். நான் இவ்வுலகில் வாழ்வதற்கும் நிலைத்திருப்பதற்கும் என்ன உயரிய நோக்கம் உள்ளது? இவையே ஒரு ஆன்மிக நிலையில் உள்ளவன், இன்னும் என்ன? அடுத்தது என்ன?" என்பதன் மூலம் கேட்கும் கேள்விகள் ஆகும்.

அதாவது எந்தவித சுகபோகங்களும் வாழ்க்கையை நிறைவுபடுத்த முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். இந்த சுகபோகங்கள் எப்போதும் ஒரே மாதிரியான விறுவிறுப்பை கொடுக்கமாட்டா.

ஒவ்வொரு சுகபோகமும் காலப்போக்கில் அதன் பெறுமானம் வலுவிழந்துவிடும் என்பதை உணர்வார்கள். இவர்கள் ஆழ்ந்து சிந்தித்து வாழ்க்கையைப் பற்றியும் அவர்களின் மனதின் போக்கை பற்றியும் வாழ்க்கை முறையைப் பற்றியும் தம்மை சுற்றியிருக்கும் உலக விவகாரங்கள் பற்றியும் விசாரணை செய்வார்கள். இவர்கள் உலகியல் வாழ்வில் இருந்து கொண்டு உலகத்தைப் பற்றிய இருட்டிற்குள் சென்று ஆராயமுற்படுவார்கள். ஆனால் தங்கள் வாழ்க்கையைப் பற்றி உணர்ச்சிபூர்வமாக முற்றாக அறிய விரும்புவார்கள்.

மூன்றாவது வகையான மக்கள், அதாவது இறையியல்பை உணர்ந்து தெய்வீக வாழ்க்கை வாழ்பவர்கள். அவர்கள் இறை இயல்பைப் பற்றி அறிய வேண்டிய தமது தாகத்தைப் பூர்த்தி செய்து தெய்வீக வாழ்க்கை வாழ்பவர்கள். எல்லாவற்றையும் தாண்டிச் சென்ற நிலையில் மேலான அநுபவங்களைப் பெற்றவர்கள். இவர்களுக்கு வாழ்க்கை என்பது முற்றாக தெய்வீகமானது.

இப்பொழுது நாங்கள் எங்களுக்குள் சென்று உள்நோக்கிப் பார்ப்போம். ஆழ்ந்து சிந்தித்து இதனை நோக்குவோம். அதாவது எங்களுடைய மனத்தையே நாங்கள் பார்ப்போம். புத்தகங்களைப் படித்தும் பிரசங்கங்களை கேட்டும் அறிவைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் ஞானமும் ஒளியும், நீ உன்னை உள்நோக்கிப் பார்ப்பதாலும் உனது மனதை நீயே நோக்குவதாலும் உனது நிலையை நோக்குவதாலும் உனது இதயத்தைப் பார்ப்பதாலுமே பெறப்படக் கூடியன. எமது வாழ்வு பெரும்பான்மையாக உறவுமுறையை அடிப்படையாகக் கொண்டது. இரு தேவைகளைக் கொண்டு பண்படுத் தப்பட்ட உறவுமுறையைக் கொண்டதே பெரும்பாலான வாழ்க்கை அவையாவன,

1. அன்புறவை ஒருவர் மேல் வெளிப்படுத்தும் தேவை.
2. அன்பை நாடி நிற்கும் தேவை.

இந்த இரண்டாவது வகையானது அன்பு நிபந்தனையற்ற முறையிலும் உணர்ச்சிபூர்வமாகவும் ஆர்வத்துடனும் அளிக்கப்படும் அன்பு ஆகும்.

எங்கள் வாழ்க்கையில் எமது செயல்களும் அதன் பெறுபேறுகளும் இவ்விரு அடிப்படைத் தேவைகளையும் பூர்த்திசெய்வதை

அடிப்படையாகக் கொண்டவையே. அதாவது அதன் பொருள் அறிவு, பதவிநிலை போன்றவையாகவும் இவ்விரு தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குரியனவாகவும் இருக்கும்.

நாங்கள் முதலில் அன்பை நாடி நிற்கும் தேவையை பார்ப்போம். நான் பேசும்போது நீங்கள் உங்களினுள்ளே சென்று இரண்டாவது நிலைப்பாட்டைப் பாருங்கள். அதாவது அன்பை நாடி நிற்கும் தேவையை.

நீ உன்னை பற்றிய நிலையை நோக்கிய நாளிலிருந்து உன்னை ஒருவர் அன்புடன் நேசிப்பதை நாடி நிற்கிறாய். அதாவது உன்னை அன்புடன் நேசிக்கும் ஒருவரை தேடுகிறாய், எதிர்பார்க்கிறாய். நிபந்தனையற்ற முறையில் உன்னை அன்புடன் நேசிக்கும் ஒருவரை நாடி நிற்கிறாய். உனது குறைபாடுகள் எப்படி இருந்தால் என்ன? அதாவது அழகு, குணம், பதவி போன்ற நிலைகளில் என்னென்ன வேறுபாடுகள் இருந்தாலென்ன? இவை எல்லாவற்றையும் தள்ளிவிட்டு அன்பை நாடி நிற்கிறாய்.

இந்த அன்பை நாடி நிற்கும் வேட்டை, முதன் முதலில் எம்மை இந்த பூமிக்கு கொண்டு வந்த தாயிடம் செல்கிறது. தாய் தந்தையிடம் ஆரம்பித்து, அவர்களின் முற்றான அன்பை எதிர்பார்த்து, அவர்கள் உன்னை தமது கண்ணின் மணிபோல் நேசிப்பதை எதிர்பார்க்கிறாய். அவர்கள் உன்னை மட்டுமே நேசிக்க வேண்டும் என நீ எதிர்பார்க் கிறாய். இது சாத்தியப்படாது போகிறது. இந்நிலையில் நீ வேறு இடங்களை, அதாவது உன்மீது உணர்ச்சிபூர்வமான அன்பைச் செலுத்தக் கூடியவர்களை நாடிச் செல்கிறாய். பாடசாலைக்கு செல்கிறாய். அங்கு ஒரு நண்பனைப் பெற்று, அவன் உன்மீது முற்றாக அன்பு செலுத்தும் நிலையை எதிர்பார்த்து நிற்கிறாய். உயிர் நண்பன் என்ற நிலைமையை அவனிடத்தில் நாடி நிற்கிறாய். அதன்பின் ஆசிரியரை நாடிச்சென்று அங்கும் உனது தேடுதல் நிறைவு பெறாத நிலையை உணர்கிறாய்.

அதன் பின் உனது வாழ்க்கைத் துணையிடமும் பிள்ளைகளிடமும் பின்னர் பேரப்பிள்ளைகளிடமும் இந்த அன்பை எதிர்பார்கிறாய். உனது அன்பைத் தேடும் வேட்டை இப்படியே தொடர்கிறது. ஆனால் அன்பைத் தேடும் வேட்டையில் அவர்களது தேவைக்கேற்ப அது கிடைத்தற் கரியதாக இருக்கிறது. எவ்வாறியிருப்பினும் குறிப்பிட்ட ஒரு உறவு

முறையில் அந்த அன்பைப் பெற்ற உணர்வில் அந்த அன்பு தொடருமென்றும் நிலைத்திருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருவனுக்கு தான் அழகாய், அறிவாளியாக, செல்வந்தனாக இருக்க வேண்டும் என்ற ஆசைகள் உண்டாகும். இவையெல்லாம் உண்மையில் அன்பை வேண்டி நிற்கும் நிலைப்பாடுடையனவே.

நீ அழகாக இருக்க விரும்புவதன் காரணம், உன்னிடம் பலர் அன்பு செலுத்தவேண்டும் என்பதேயாகும். நீ செல்வந்தனா இருப்பின் உனது மனைவியும் பிள்ளைகளும் உன் மீது அதிக அன்பை செலுத்துவார்கள். உனது மனைவி சந்தோஷப்பட்டு உன்மீது அதிக அன்பைச் செலுத்துவாள். நீ அறிவாளியாக இருப்பின் உனது பெற்றோர் உன்னை கூடுதலாக மதிப்பார்கள், நேசிப்பார்கள். உனது சகோதரர் சகோதரியரைவிட பெற்றோர் உன்மீது கூடுதல் அன்பைச் செலுத்துவர். இவையெல்லாம் அன்பை வேண்டி நிற்றலின் அடிப்படையில் உருவானவையே! அதாவது நேசிக்கப்படுபவரை வேண்டி நிற்றலாகும். உனது வாழ்க்கையின் ஓட்டத்தைப் பார்க்கும்போது, இவ்வுலகில் யாருமே நிபந்தனையற்ற அன்புடன் நேசிக்கப்படவில்லை என நீ உணர்கிறாய். இவ்வுலகில் ஒருவர்கூட அவ்வனுபவத்தைப் பெற்றிருக்க மாட்டார்கள்.

ஏனெனில் எமது ஆழ்ந்த இதயத்தில் பெரிய வெற்றிடம் இருக்கின்றது. உன்னை எல்லோரும் அன்புடன் நேசித்தார்கள் என்பதை நீ நம்ப மறுக்கிறாய். அளவிடமுடியாத எவ்வளவு அன்பை அள்ளிக் கொட்டினாலும், அது உன்னை திருப்திப்படுத்த முடியாதென நீ உணர்கிறாய். அதாவது ஒரு வெற்றிடம், அன்பைப் பற்றியதொரு பயம் அப்படியே பலவிதமான நிலைகள் உனக்கு ஏற்படுகின்றன.

இப்பொழுது அன்புறவை ஒருவர்மேல் வெளிப்படுத்தும் தேவையை பார்ப்போம். உனது வாழ்க்கையின் ஓட்டத்தைப் பார்க்குமிடத்து, உறவு முறையில் பல நிலைப்பாடுகள் உனது விதிக்கு காரணமென்பதை உணர்கிறாய். இந்த உறவுமுறை உன்னால் ஏற்பட்டதல்ல அல்லது நீ அதற்கு காரணமல்ல. உனது தாய், தந்தை, சகோதரர்களை நீ தெரிவு செய்யவில்லை. ஆனால் வேறு சில உறவுமுறைகளை நீயே தெரிவு செய்துள்ளாய். உனது வாழ்க்கைத் துணை, தொழில் பங்கீட்டாளர், உனது நண்பன், ஆன்மிக குரு யாவரும் நீ தெரிவு செய்வதையே இந்த உறவுமுறையில் ஒரு விசித்திரமான அசௌகரியத்தை காணக்

கூடியதாக உள்ளது. அந்த அசௌகரியம் உனது சுயநலத்தால் உருவானதென எப்பொழுதாவது நீ உணர்வாய். நாங்கள் மற்றவர் களை எங்கள் சுயநலத்திற்காக பயன்படுத்துவோம். ஒரு தாய் தனது குழந்தை வளர்ந்து பெரியதொரு வைத்தியராகவோ, பொறியிய லாளராகவோ அல்லது பெரியதொரு இசைக் கலைஞராகவோ அல்லது பெரியதொரு நடனக் கலைஞனாகவோ உருவாக்க வேண்டும் என விரும்புகிறாள்.

அது அவளது சுயவிருப்பைப் பூர்த்தி செய்வதற்காகவேயாகும். இவ்வாறு எங்கள் தேவைகள் சுயநலத்தின் அடிப்படையிலேயே அதாவது நாங்கள் எங்கள் வாழ்க்கையில் எதனை அடையமுடிய வில்லையோ அதை எங்கள் பிள்ளைகளாவது அடையவேண்டும் என்ற அங்கலாய்ப்பில் குடும்ப கௌரவத்தை வேண்டிச் செயற்படுகின்றோம். நாங்கள் எங்கள் சுய கௌரவத்திற்காக வேறொருவரைப் பயன்படுத்து கின்றோம் என்றுணராதவராக வாழ்கிறோம். எங்கள் பிள்ளை சந்தோஷமாக வாழவேண்டும் என்ற உணர்வு ஒரு பகுதியிலிருப்பினும் உள்ளத்தினடிப்படையில் எங்கள் பெருமை நாட்டமே இதற்குக் காரணம். அதாவது எங்கள் பிள்ளை எங்களுக்கு புகழ் சேர்ப்பான் என்ற அவாவே ஆகும். இதை நீங்கள் ஏற்க மறுத்தாலும் ஆழமாக உங்களின் உள்ளே நீங்கள் உணர்கிறீர்கள். நாங்கள் எங்கள் உறவுமுறையில் சுயநலமாக இருக்கிறோம் என்பதை உணர்கிறோம். அதனால் எங்கள் சுயநலத்திற்காக அவர்களை பயன்படுத்துகிறோம் எனவும் அறிகிறோம்.

ஏன் ஒவ்வொரு உறவுமுறையிலும் சில காலத்தின் பின் சலிப்புத்தன்மை ஏற்படுகின்றது? சில காலத்தின் பின் ஒவ்வொருவரும் ஏன் இவ்வாறு நடக்கிறார்கள்? அன்புறவை ஒருவர்மீது வெளிப்படுத்தும் தேவை கூட 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என காலம் ஓடியும் நிறைவேறாத நிலையில் உள்ளது.

இவ்விரு தேவைகளும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் எமது வாழ்க்கையின் ஓட்டம் அமைந்துள்ளது. இதற்கு என்ன செய்ய முடியும்? என்று சிந்திப்போம். நிபந்தனையற்ற அன்பை ஏற்படுத்த நாங்கள் எதுவும் செய்யமுடியுமா? அதாவது "நான் இன்று தொடக்கம் ஒருவர் மீது முற்றாக அன்புச் செலுத்த முயற்சிப்பேன்." என்று நீங்கள் உங்களுக்குள் தீர்மானம் எடுப்பின் இதை நடைமுறைப்படுத்துவது சாத்தியமா? அல்லது இன்று தொடக்கம் நான் அன்பைப் பயிற்சி செய்ய போகிறேன் என்றால் அது சாத்தியமா? சாத்தியமாக முடியாது.

பயிற்சி முறையில் அல்லது விருத்தி செய்தல் முறையில் அன்பை ஏற்படுத்த முடியாது. அது உங்கள் எண்ணத்தாலும் உணர்ச்சியாலும் ஏற்படுத்தப்பட்ட நிலைப்பாடே. இதயத்தில் ஏற்பட்டதல்ல. இதனை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

மன்னித்தல் என்பது கொள்கை ரீதியாகவும் சமாதானம் என்பது இலட்சிய ரீதியாகவும் அன்பு என்பது விருத்தி செய்யும் வகையிலும் ஏற்படுத்த முடியும் என்பது வாழ்க்கையில் ஒரு சாத்தியமற்ற நிலையே. இவைகளை நிறைவேற்ற ஆன்மிக சாதனையே ஒரே வழி. இந்த உண்மை ஏற்படும்போது சடுதியான அன்பை பற்றிய அனுபவம் அல்லது பெருவேகம் அல்லது இதயமலர்ச்சி ஏற்படுகிறது. இது உங்களுக்கு ஏற்படவேண்டும்.

கல்கி தர்மம் இந்த நிகழ்வை உங்களுக்கு உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்துகிறது. அதாவது இதய மலர்வு, அன்புப் பெருவேகம், அன்பு அனுபவம் யாவற்றையும் கல்கி தருமத்தின் அடிப்படையில் உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தமுடியும். அன்பைக் கண்டு பிடிப்பதும், இதயத்தை மலரச் செய்வதும் கல்கி தருமத்தின் போதனை மூலம் சாதிக்கப்படுவதல்ல. கல்கி தர்மம் அன்பை உங்கள் வாழ்க்கையில் ஒரு நிகழ்வாக ஏற்படுத்துகிறது. உங்களுடைய சுய நிலையைப் பற்றிய உணர்வை முற்றாக நீங்கள் கவனத்தில் எடுக்கவேண்டும். இது தான் முதலாவது படி. இரண்டாவது கல்கி பூஜா, கல்கியக்னா போன்றவற்றில் பங்குகொள்ளல்; இவை யாவும் கல்கி தாசர்களால் நடாத்தப்படும் ஆன்மிக சாதனை வகுப்புக்களே.

இந்த சாதனைகள் உங்களது ஆழ்ந்த நிலையை உங்களுக்கு உணரவைத்து, அந்தர்யாமினில் இறைவனைக் காணும் நிலைப்பாட்டை அளிக்கிறது. அப்பொழுதுதான் நீங்கள் இவ்வன்பை, அன்பின் உட்பொருளை கண்டு பிடிக்கிறீர்கள். தயவுசெய்து வாழ்க்கை என்பது ஒரு பள்ளிக்கூடம் என்பதை உணருங்கள். இப்பள்ளிக்கூடத்தில் எத்தனையோ பாடங்களை கற்கிறீர்கள்.

அன்பு என்பது ஒரு இலட்சியமல்ல. அதை பயிற்சி செய்தும் பெற முடியாது. உங்களுக்குள் நீங்கள் கண்டுபிடிக்க வேண்டியது. உங்களுக்குள் எத்தனையோ தெய்வீக அனுபவங்கள் ஏற்படுகின்றன. இவ்வன்பை உணரும் போதுதான் நீங்கள் உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

அண்மையில் ஒரு பெண்மணி ஒரு யக்னாவில் பங்குபற்றினார். அவர் கவலையில் ஆழ்ந்திருந்தார். கடந்த ஏழு வருடங்கள் பெரிய அளவில் சத்திரசிகிச்சைக்கு உள்ளாகியிருந்தார்.

அதனை தொடர்ந்து உடல் தேறலை நாடி நின்றார். ஏன் யக்னாக்கு வந்தாரெனில், தனக்கேற்பட்ட நோயைவிட தனது மகள் கடந்த மூன்றாண்டுகளாக மூளையில் கட்டி ஏற்பட்டு, புற்றுநோயினால் அவதியுற்றதைக் கண்டு கவலைப்பட்ட நிலையில் அக்கவலையை தீர்ப்பதற்காக யக்னாவிற்கு வந்தார். அந்தப் பெண்ணுக்கும் இரண்டு சத்திரசிகிச்சை ஏற்பட்டு ஒரு கண் பார்வையை இழந்தார். தாயின் துன்பத்தை உணரமுடியாது இருந்தார். (3 வருடம் பலமுயற்சிகள் எடுத்தும் மீளமுடியாது இறுதியாக கல்கி தர்மத்தை நாடி வந்தார்.) அவள் என்னை மன அவஸ்த்தைக்கு உள்ளாக்கியிருந்தார். இறுதியாக பகவானிடம் கேட்பது என்னவென்றால் "அவளுக்கு நோய் நிவாரணம் கொடுங்கள் அல்லது அவளை எடுத்துக்கொள்ளுங்கள்" எனக் கூறினார். இதைக் கேட்டுக் கொண்டு சாய்வு நாற்காலியில் இருந்த மகள் ஏளனச் சிரிப்பு சிரித்தார். நான் சொன்னேன், "நீ யக்னாவில் பங்குபற்று." அதற்கு அப்பெண்மணி கூறினாள் "எனது சிறுநீரகங்கள் சீர்கெட்ட நிலையிலுள்ளன" என வைத்தியர் கூறியுள்ளார். நான் இப்போது வாழ்க்கையைப் பயந்து எண்ணிக் கொண்டிருக்கிறேன் என விடையளித்தாள்.

எனது வேண்டுகோளின் பிரகாரம் யக்னாவில் பங்கு பற்றினார். பின்னர் எங்கள் யக்னாவில் பங்குபற்றி, தனது கடந்தகால வாழ்க்கையை முற்றாகக் கண்டு கொண்டார். அவர் அது தெய்வீக ஒப்பந்தம் என்பதை கண்டு பிடித்தார். அவள் வீட்டுக்கு சென்றபோது மகள் கட்டிலில் ஆழ்ந்த நித்திரையில் இருப்பதைக் கண்டார். அவள் தனது மகள் தன்னிலிருந்து பிரிந்த நிலையில் இல்லை என்பதை சடுதியாக உணர்ந்தார். தனது உடம்பின் நீட்டப்பட்ட ஒரு பகுதியே மகள் என கண்டார். முதன் முதலில் ஒரு பேரன்பு அவளிடமிருந்து வெளிப்பட்டது. தனது மகளிடம் சென்று அவளது நெற்றியில் முத்தமிட்டார். அன்றிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் அவளுடைய மகள் இறந்தாள். தாய்க்கும் மகளுக்கும் இடையேயுள்ள உறவு பேரன்பானது. அந்த ஒரு மாதத்தினுள் வாழ்க்கையின் பயணம் முற்றுப்பெற்ற நிலை ஏற்பட்டது. அந்த மகள் அமைதியாக இவ்வுலகை நீந்தார். அவர் தனது மகளுடனான அன்பைக் கண்டுபிடித்தார். பின் தனது சிறுநீரக நோய்

பற்றி வேண்டி நிற்க விதியிருந்தும் அவளுடைய மகளுக்காகவே யக்னாவில் பங்கு பற்றினார். ஆனாலும் அவளுடைய சிறுநீரகங்களின் நிலை சீரடைந்தது.

உங்கள் வாழ்க்கை என்பது ஒரு பள்ளிக்கூடம். அதில் பெறும் அனுபவங்கள் யாவும் பாடங்கள் என்று உணருங்கள். அன்பை கண்டுப்பிடிக்காத வாழ்க்கை அழுக்கு, சேறு தேங்கி நிற்கும் நீர்க்குட்டை போன்றது. அன்பைக் கண்டு பிடிக்கும் நிலை உங்களுக்கு ஏற்படுமாயின் அது ஒரு ஓட்டம். ஓட்டம் அதற்காகவெனின், தொடங்க முடியாத ஒன்றைத் தொடங்குவதற்கான ஓட்டம், முடிக்கமுடியா தொன்றை முடிப்பதற்கான ஓட்டம். இது ஒரு உள்ளார்ந்த இயக்கம். நான் உங்கள் ஒவ்வொருவரையும் அழைகிறேன். அன்பு செலுத்து வதற்கும் இவ்வாழ்வில் ஓட்டத்துக்கு உற்சாகமாகப் பங்கு பற்றி, ஏன் பிறந்தீர்கள் எனவும் எப்படி உங்களுக்கு நிகழ்கால வாழ்க்கை இருகின்றது எனக் கண்டுப்பிடிக்கவும் பேரன்பையும், பெரிய சுதந்திரத்தையும், நிரந்தரமான சுதந்திரத்தையும் தேடுவதற்கும் உங்களை அழைக்கின்றேன். இதுவே உள்ளார்ந்த மனதின் இயக்கமாகும். இலக்கு என்பது முழுமையான விடுதலையாகவும் மனிதனின் விடுதலை என்பது எல்லாவிதமான துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறுதல். அதாவது உடல், உள ஆன்மிக ரீதியாக துயரங் களில் இருந்து விடுப்படுவதாகும்.

இப்பொழுது நான் எனது அடிகளை முன்னெடுத்து செல்ல விரும்புகிறேன். நீங்களும் அங்ஙனமே சில அடிகளை முன்னெடுத்து செல்வதை விரும்புகிறேன். நீங்களும் எடுத்துச் செல்லும் அடிகள் இறை வனின் தெய்வீக கமலத்துள் ஆகட்டும். அதாவது கல்கியின் இதயக் கமலத்துள்.

வணக்கம்.

Humanity Suffers

It's so obvious. Look around you. News from all around the world shows human and ecological suffering at every level. Man in his quest to succeed has separated nation from nation, man from man creating a culture of fear, misery and poverty of spirit for billions, globally.

The glory of Enlightenment that man received through Divine Grace has now been lost. This has led him into deeper sheaths of suffering making his life miserable.

"Outer world is a reflection of the inner world"

- Sri Bhagavan

Man's deviation from his true path through the pursuit of permanent pleasure through wrong avenues, sacrificing the 'self' to demeaning desires and the deliberate avoidance of the Divine Grace have all reduced, this once dignified being, to an ignoble state. Coupled with the challenges of survival in a highly materialistic world, the pressure to perform, personality flaws, strained relationships and a life devoid of genuine love and compassion, no wonder man has become a victim of the unconscious mind which in turn has created the negative self.

The Oneness University

In the year 1990, Sri Bhagavan and Sri Amma, the Avatars for Enlightenment opened the doors to the Global Spiritual University to help humanity return home to its original state of Enlightenment. It is a state characterised by "causeless love and limitless joy" - an altered state of consciousness. The University has grown each year receiving people from all over the world to attend and take them through a process of Enlightenment. With over 25 million followers around the globe, the movement continues its work to Enlighten the whole of humanity.

"Man cannot make it on his own. It has to be given to him."

- Sri Bhagavan

Oneness University - The Vision

The vision of the Oneness University is to usher in the Golden Age of mankind. The challenge is to achieve total human Enlightenment. This transformation will enrich and enhance family, neighborhood, state, nation and international relationships serving to unify the world through the rediscovery of our ultimate oneness with all life. The Oneness University, since day one has continued to refine and accelerate the process towards human Enlightenment.

The process exists to set man totally and unconditionally free. Thousands of people who have attended the unique processes of Deeksha have attained Enlightenment. All attest to increased productivity in their own personal lives, improved relationships and to an experience of continued love and joy never before known. No longer does the unconscious direct their mind, body and emotions. Regaining their conscious mind has brought them back to the original state of being free of all suffering - Oneness with the Universe.

Deeksha at Oneness University - Towards Enlightenment

Deeksha is the transfer of Divine Energies from the Enlightened One to the seeker. This ancient practice of channelising Enlightenment was prevalent in most countries, many thousands of years ago. However due to a lack of Seers, this esoteric practice faded and was then lost. In its place meditations, preaching and spiritual sadhanas filled the vacuum.

Sri Bhagavan has revived this ancient process and offers it to the world. The process allows a scientifically measured neurobiological change to take place in the brain that reorganizes the entire framework of consciousness leading to the flowering of the heart, God realisation and Enlightenment.

Deekshas offered at Oneness University

Deekshas at Oneness University are not designed as concepts or courses but as the ultimate state of Enlightenment for the true seeker.

* 3 day duration- **Phala Deeksha** or **Fruit Deeksha** for 18 years and above for fulfillment of desires
* 6 day duration - **Youth Deeksha** for students and young professionals to enhance success.
* 3 / 7 / 14 day duration - **Intelligence Deeksha** for Industrialists / Corporate Executives / Scientists/ Bureaucrats/Technocrats
* 21 day duration - **Enlightenment Deeksha** for seekers from Overseas (Where seekers transfer the Divine energies to others)

All Deekshas are incorporated with an Interactive Session with Sri Bhagavan

Deeksha Results

The benefits of receiving Deeksha at the University are manifold. Thousands of people bear testimony to

* Awakening of ANTARYAMIN - THE INNER GUIDE
* Setting right relationships based on true love
* Gratification of unfulfilled desires
* Salvation from persistent problems
* Flowering of creativity
* High growth rate for businessmen
* Absence of stress, tension and fear
* **Emergence of healers**
* Complete Enlightenment - a permanent state devoid of all suffering

நீ வாழி நீ வாழி

1. கலியுகம் தனில் வந்து கல்கியாய் அவதரித்தாய்
வாழியவே வாழி

2. புவனந்தனை உய்விக்க நேமத்தில் நீ கொண்ட இக் கோலமும்
வாழி - நீ வாழி

3. யுக யுகமாய் அவதரித்து தர்மத்தை வாழவைக்கும்
வாழியவே - வாழி (நீ வாழி)

4. சுகமான உன் நாமம் சொன்னாலே எழுந்தருளும் பகவானே நீ
வாழி நீ வாழி

5. நத்தத்தில் தான் பிறந்து பெரம்பூரில் வாழ்ந்தவனே
வாழியவே வாழி நீ வாழி

6. பார்புகழும் மன்னவனே பரந்தாமன் கல்கியே பகவானே
நீ வாழி நீ வாழி

7. சச்சிதானந்தமே பரப்பிரம்ம ரூபமே வாழியவே வாழி

8. புருஷோத்தம பரமாத்ம கல்கி அவதாரமே நித்தியமே
நீ வாழி நீ வாழி

9. பொங்கிடும் மங்களங்கள் எங்குமே தங்கிடவே
வாழியவே வாழி

10. பல்லாண்டு பல்லாண்டு பலகோடி ஆண்டுகள் பரம்பொருள்
கல்கியே வாழி நீ வாழி (3)

நன்றிகள்

நன்றிகள் தந்தோமே மகிழ்ந்திடுவாய் ஓம் பகவான்
நன்றிகள் தந்தோமே மகிழ்ந்திடுவாய் ஸ்ரீ பகவான்
நன்றிகள் தந்தோமே மகிழ்ந்திடுவாய் ஜெய் பகவான்

கேட்டதெல்லாம் கொடுத்துவிட்டாய் உன்னோடென்னையும்
சேர்த்துவிட்டாய்
கேட்டதெல்லாம் கொடுத்துவிட்டாய் உன்னோடென்னையும்
சேர்த்துவிட்டாய்
கேட்டதெல்லாம் கொடுத்துவிட்டாய் உன்னோடென்னையும்
சேர்த்துவிட்டாய்

கருணைப்பெருங்கடலே உலகத்தினை ஆண்டிடுவாய்
கருணைப்பெருங்கடலே உலகத்தினை ஆண்டிடுவாய்
கருணைப்பெருங்கடலே உலகத்தினை ஆண்டிடுவாய்

எங்களை இணைத்திடுவாய் சத்யலோகம் தந்திடுவாய்
எங்களை இணைத்திடுவாய் சத்யலோகம் தந்திடுவாய்
எங்களை இணைத்திடுவாய் சத்யலோகம் தந்திடுவாய்

பக்தி சக்தி ஜீவன் முக்தி தந்தருள்வாய் ஓம் பகவான்
பக்தி சக்தி ஜீவன் முக்தி தந்தருள்வாய் ஸ்ரீ பகவான்
பக்தி சக்தி ஜீவன் முக்தி தந்தருள்வாய் ஜெய் பகவான்

ஸ்ரீ பகவத் பாதத்திலே சரணடைந்தோம் ஓம் பகவான்
ஸ்ரீ பகவத் பாதத்திலே சரணடைந்தோம் ஸ்ரீ பகவான்
ஸ்ரீ பகவத் பாதத்திலே சரணடைந்தோம் ஜெய் பகவான்

நன்றி அம்மா பகவானே

நன்றி அம்மா பகவானே (4)
நன்றி சொல்ல ஓ.....டி வந்தேன்
இவ் ஜீவன் எடுத்து - உனக்கு
நன்றி சொல்ல ஓடி வந்தேன்
பகவான் உனக்கு அம்...மா உனக்கு
பகவான் உனக்கு அம்...மா உனக்கு

துன்பம் துயர் ஏதுமில்லை - என்றும்
உந்தன் அன்பின் நிலை (நன்றி சொல்ல)

நான் கேட்டபடியே.....
நீ கொடுத்த தாய் தந்தையர்
நீ கொடுத்த குழந்தைகள்
நிறைவான செல்வங்கள்
நோயற்ற தேகம் ..... நீ கொடுக்கும் வேகம்....
நிகரற்ற இவ்வுலகம்..... முக்தி பெறும் யோகம்

நீ கொடுக்கும் சத்யலோகம்
நீ கொடுக்கும் சத்யயுகத்தில்
உன்னோடு உனக்கே ..... (நன்றி சொல்ல)

பரம மித்ரனே பரம ஆத்மனே பரம் பொருளே பரப்பிரம்மனே (3)
எனக்கே இவ்வுடல் எடுத்து...
புவியினில் அவதரித்து (நன்றி சொல்ல)

விடுதலை

Liberation

மோக்ஷா நாம ஜீவஸ்ய விமுக்திஹி ஏதஸ்மாத்
(The liberation from worldly life)

இந்திரியாணம் விமுக்திஹி ஏதஸ்மாத்
(The liberation from five senses-testing, hearing, smelling, seeing & touching)

அஹங்காராத் விமுக்திஹி ஏதஸ்மாத்
(The liberation from ego)

மனஸோ விமுக்திஹி ஏதஸ்மாத்
(The liberation from mind)

ஞாதஸ்ய பந்தாத் விமுக்திஹி ஏதஸ்மாத்
(The liberation from unwanted psycological attachment)

ஸம்ஸ்கிருதே பந்தாத் விமுக்திஹி ஏதஸ்மாத்
(The liberation from attachment to blind beliefs and rituals)

ஸமாஜஸ்ய பந்தாத் விமுக்திஹி ஏதஸ்மாத்
(The liberation from bondage to society)

கர்மணோ பந்தாத் விமுக்திஹி ஏதஸ்மாத்
(The liberation from bondage to work - To enjoy your work)

இதி ஸத்யம் ஸத்யமேவ ஸத்யம் (3)
(This is a promise)

ஸ்ரீபஹவதே நமஹ

மூல மந்திரம்

1. ஓம் சச்சிதானந்தப் பரப்பிரம்மா
புருஷோத்ம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ

2. த்வமேவ மாதாச்ச பிதாத்வ மேவ :
த்வமேவ பந்துஷ்ய ஸகாத்வ மேவ :
த்வமேவ வித்யாத்ர வினம் தவமேவ :
த்வமேவ ஸர்வம் மம தேவ தேவ
த்வமேவ ஸர்வம் மம தேவ தேவ
த்வமேவ ஸர்வம் மம தேவ தேவ

குரு வணக்கம்

3. ஓம் ஸ்ரீ குரு சரணம் கச்சாமி
சததம் ஸ்ரீ குரும் ஸ்மராமி
மம கதி : ஸ்ரீ குரு :
மம மதி ஸ்ரீ குரு :
மம ரதி ஸ்ரீ குரு :
மம ஆத்மா : ஸ்ரீ குரு :
இதி சத்யம் சத்யம் வதாமி....
இதி சத்யம் சத்யம் வதாமி !!

மகாலக்ஷ்மி மந்திரம்

4. ஓம் மகா லஷ்மி வித்மஹே விஷ்ணு பத்னிச தீமஹி
தன்னோ லஷ்மிப் பிரசோதயாது.

விஷ்ணு மந்திரம்

5. ஓம் நாராயணாய வித்மஹே வாசுதேவாய தீமஹி
தன்னோ விஷ்ணுப் பிரசோதயாது.

ஆனந்த மங்கள ஆரத்தி

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே கல்கி
ஆனந்த தாண்டவம் ஆடிடவா கல்கி (4)

ஜெய ஜெய ஜெய ஸ்ரீ ஸ்ரீ கல்கி
ஜெகத்தை ஆளும் பூர்ணன் கல்கி

ஜெய ஜெய ஜெய ஈசன் கல்கி
ஜெகத்தை ஆளும் பூர்ணன் கல்கி

ஜெய ஜெய ஜெய நடேசன் கல்கி
ஜெகத்தை ஆளும் பூர்ணன் கல்கி

ஜெய ஜெய ஜெய சர்வேசன் கல்கி
ஜெகத்தை ஆளும் பூர்ணன் கல்கி

நின்பாத மலரே கதியென வந்தோம்
சரணடைந்தோம் மலர்ந்து நின்றோம்

நின்ரூப தரிசனம் சர்வ ஷேஷ்த்தர தரிசனம்
பாதம் பணிந்தால் பாவ விமோசனம்

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே கல்கி
ஆனந்த தாண்டவம் ஆடிடவா கல்கி (4)

ஆனந்த மங்கள ஆரத்தி தாயே

ஆனந்த மங்கள ஆரத்தி தாயே
நாமு ஜபே சபு தேரா (2)

கருணாமய கருணாகே சாகரு
கருணாமய கருணாகே சாகரு
சுந்தர தர்ஷணு தேரா
சுந்தர தர்ஷணு தேரா (ஆனந்த)

சரணு கமலுமே சரணாகதிதோ
சரணு கமலுமே சரணாகதிதோ
ஜீவனு சஃபலு சோரமேரா
ஜீவனு சஃபலு சோரமேரா (ஆனந்த)

ஜீவனு முத்தி சார்மனு பாயே
ஜீவனு முத்தி சார்மனு பாயே
ஜீவனு முத்தி ஹொ மேரா
ஜீவனு முத்தி ஹொ மேரா (ஆனந்த)

சரணாகதி

பக்தியால் உனைப் பாடி சரணடைந்தோமே
பக்தியால் உனைப் பாடி சரணடைந்தோமே

பக்த பராதீனனே - என் பகவான் - பக்த பராதீனனே
என் அம்மா ஆதிபராசக்தியே

ஹரே ராம ஹரே ராம - ராம ராம ஹரே ஹரே *(2)*

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண - கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
(2)

அம்மா பகவான் அம்மா பகவான் அம்மா பகவான் ஹரே ஹரே
(4)

பக்தியால் உனைப் பாடி சரணடைந்தோமே
பக்த பராதீனனே - என் பகவான் - பக்த பராதீனனே
என் அம்மா ஆதிபராசக்தியே

பொருள்அட்டவணை

அ

அவதார மகிமை 3
அம்மா பகவான் நாமாவளி 24
அம்மா தாயே 35
அருளாலே உலகாளும் கல்கி... 36
அருட்பெருஞ்ஜோதி 45
அம்மா அருள் புரி 53
அம்மா வா அம்மா 62
அடித்தாலும் அணைத்தாலும் நீயே 68
அம்மா பகவதியே பத்மாவதியே.. 70
அம்மா தாயே 75
அருள் வேண்டி 83
அம்மா பகவானே அம்மா பகவானே 96
அம்மா பகவானே ஆதாரம் நீ தானே 101
அம்மா பகவானே 102
அம்மா பகவான் சரணம் 106
அகிலாண்டேஸ்வரி அம்புஜலோஜினி 106
அம்மா பகவதியே 109

ஆ

ஆனந்தமே பேரானந்தமே 46
ஆனந்த நாட்டியம் 50
ஆனந்தம் வந்து மோதுதே 113
ஆனந்த மங்கள ஆரத்தி 131
ஆனந்த மங்கள ஆரத்தி தாயே 132

இ

இதயத்தினுள்ளே நீ வர வேண்டும் 52
இந்த நாளையா 92

ஈ

ஈஸ்வரா மஹேஸ்வரா 59

உ

உந்தன் அருளால் 90
உன் ஆசை என்பது . . . 107
உந்தன் எழில் ரூபம் 94
உன்னைப் போல் 47

எ

என்ன கருணை 55
என்ன சுவையோ? 57
எனக்காக வரமொன்று 83
எங்கிருந்து வந்தாரடி தோழி 100

ஒ

ஒவ்வொரு யுகத்திலும் 37
ஒரு நாளும் மறவாத உள்ளம்... 61
ஒரு முறை நினைத்தால் போதும் 63
ஒரு மந்திரம் கல்கி எனும் மந்திரம் 111

க

கல்கி கல்கி கல்கி 39
கல்கி ரூபனே 41
கண்கண்ட தெய்வமே 43
கல் மனதை கரைக்கும் கண்கள் 44
கல்கியின் அருளை 51
கண் பெற்ற பயனை நாங்கள்... 65
கல்கி என்றால் கல்வி நமோ நமோ 87
கண்ணில் கருணை காணீரோ 112

கை

கையேந்தும் பக்தர் 71

ச

சச்சிதானந்த சாகரா 56
சந்தனத்தில் மணமெடுத்து 58
சத்திய லோக பகவான் 73
சத்திய லோகத்திற்கு 77
சரணம் பகவானே 89
சரணாகதி 133

சி

சின்னச் சின்ன பதம் 70

ஞா

ஞான ஒளி கொண்டவரே 91

தா

தாமரைபோல் திருமுகம் 105

தி

திருப்பாதங்களே திருப்பாதங்களே 98

தீ

தீனச்சரண்யா தீனச்சரண்யா 64

தே

தேவ தேவ 40

ந

நன்றிகள் 127

நன்றி அம்மா பகவானே 128

நா

நாமம் கீதம் 48

நான் எங்கு அழைத்தாலும் 74

நீ

நீ வேண்டும் 49

நீயின்றி நானில்லை 80

நீ அல்லாது என் குறை 47

நீ ஒருத்தி 97

நீ வாழி நீ வாழி 126

ப

பகவான் கவசம் 26

பரம்பொருள் பகவான் 34

பத்மாவதி தாயே 78

பஜனை செய்வாய் 79

பகவானே பகவானே 82

பக்தி கொண்டு உன்னை ... 84

பத்மாவதியே சரணம் 85

பத்மாவதிக்கே ஆராதனை 95

பத்மாவதியே பரதேவதையே சரணம் 103

பசும்பால் அபிஷேகம் 104

பஜ அம்மா பகவான் 38

பா

பாதக் கமலமே 33

பி

பிரணவரூபா..... பிராணநாதா... 77

பொ

பொன்னும் பொருளும் 110

பொன் மாநகரத்திலே 102

ம

மலரினும் மெல்லிய 54

மந்திரம் - மூல/குரு/மகாலக்ஷ்மி/விஷ்ணு 130

மூ

மூலமந்திர மகிமை 7

மூலமந்திரத்தின் சாரம் 13

யா

யாதுமாகி நின்ற யாதவா மாதவா 86

வ

வருவாய் வருவாய் பகவானே 42

வருவாய் வரூவாய் வருவாய் 65

வந்தே வந்தியம் 72

வணக்கம் அம்மா 93

வி

விதி வந்து விளையாடுதே 81

விடுதலை (ஸ்லோகம்) 129

வெ

வெற்றி கொடுக்கும் பகவான் நாமம் 80

ஜ

ஜனனி ஜனனி 67

ஜெ

ஜெய் பகவான் ஜெய அம்மா பகவான் 66

ஜென்ம தினம் 88

ஸ்

ஸ்வாமியே பகவானே 60

ஸ்வாகதம் ஸ்வாகதம் 33

ஸ்ரீ

ஸ்ரீ அம்மா பகவான் பாதுகை ஸ்தோத்திரம் 14

ஸ்ரீ கல்கி அஷ்டோத்ர சத நாமாவளி 17

ஸ்ரீமயி சின்மயி கருணாமயி 69

ஸ்ரீ பகவான் முராரி முராரி பகவான் 71

ஸ்ரீபஹவதே நமஹ 130



Oneness University

To set Man free